பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 02 | 09 செப்ரெம்பர் 2017 | விதி : 65



# குருதியில் குளிக்கும் இன்னொரு ஈழம்



இன்றைய அரசியலுடன் பொருந்தும் மகாபாரதம்



எரிகிற வீட்டில்...



மிளகாய் ராணி



நீயே உனக்கு என்றும் நிகரானவன்

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

‘என்ர கிணற்றை காணேல்ல” என்ற வடிவேலுவின் ஜோக்கை விட சுவாரஸியமாகவும் அதேநேரம் சீரியஸாகவும் பார்க்க வைத்துள்ளது ஓர் வழக்கு. இந்த வழக்கை சந்தித்த நீதிபதி இப்படி ஒரு வழக்கை இந்த உலகம் முன்னர் சந்தித்தே இருக்காது என்கிறார் உடைந்த மனதுடன் அப்படி என்ன வழக்கு என்கிறீர்களா?

பிரேஸிலைச் சேர்ந்த ரொபேர்ட்டா (வயது 18) என்ற இளைஞர், பிரிந்து சென்ற தன் தந்தையிடம் இருந்து

பெற்றுத் தருமாறு கேட்கிறார். வேண்டாம் என்று ஒதுங்கிச் செல்பவர்களை கட்டாயப்படுத்த முடியாது என்று அவரிடம் எத்தனையோ தடவை சொல்லப் பார்த்துவிட்டேன். ஆனால் அவர் கேட்கிறார் இல்லை. ஆனால் ரொபேர்ட்டோவுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என விரும்புகிறேன். ஆனால் அதற்கு சட்டத்தில் இடமில்லை” எனக் கவலையுடன் கூறுகிறார் நீதிபதி.

வழக்குத் தொடுத்த ரொபேர்ட்



# நீதிமன்றையே திகைக்க வைத்த வழக்கு

அன்பைப் பெற்றுத் தருமாறு வழக்குத் தொடுத்திருக்கிறார்.

‘பொதுவாகப் பிரிந்து சென்றவர்களிடம் பொருளாதார உதவி பெற்றுத் தரும்படியும், சொத்தில் உரிமை கேட்டுமே வழக்குத் தொடர்வார்கள். ஆனால் ரொபேர்ட்டோ பிரிந்து சென்ற தன் தந்தையிடம் 18 வயது வரை இழந்த அன்பை மொத்தமாகப்

டோவோ ‘சில ஆண்டுகளுக்கு முன்னர் அப்பாவின் அன்பு வேண்டும் எனக் கேட்டு வழக்குத் தொடுத்தேன். அவர் என்னை சந்திக்க வேண்டும், பேச வேண்டும் என நீதிமன்றம் உத்தரவு போட்டது. ஆனால் அவர் என்னை ஒருமுறை கூட சந்திக்கவில்லை. அவரை மிகவும் கட்டாயப்படுத்தினால், பார்க்க வருவதாகத் தகவல் அனுப்புவார் நான் காத்திருந்து காத்திருந்து ஏமாந்து போவேன். தொலைபேசிக்கு அழைப்பு எடுத்தாலும் பேச மாட்டார். இப்படி அவர் நடந்தாலும் அவரை ஒதுக்க என்னால் முடியவில்லை. எனக்கு நல்ல அம்மா கிடைத்திருக்கிறார், தோழி இருக்கிறார், பொருளாதார கஷ்டமுமில்லை ஆனால் அப்பாவின் அன்பு கிடைக்காதது பெரும் இழப்பாக- ஏக்கமாக இருக்கிறது. பெற்றவரிடம் அன்பை எதிர்பார்ப்பது தவறாக என்கிறார் ரொபேர்ட்டோ..


**பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்பார்கள்,**
**இங்கோ தலைகீழா கிடக்கு...**

காதல் என்றால் வித்தியாசமாக கவர வேண்டும் என்பது பொது விதி, அதைச் செய்யப் பலரும் மண்டையைப் போட்டு உடைத்துக் கொள்வார்கள். பெரும்பாலானவர்கள் காதலை வெளிப்படுத்தும்போதும் பூங்கொத்து வழங்குவார்கள். ஆனால் சீனாவை சேர்ந்த இளைஞரோ

# இறைச்சி பூங்கொத்தில் முளைத்த காதல்

மாட்டிறைச்சியில் பூங்கொத்தை உருவாக்கி அதைக் கொடுத்து தன் காதலை வெளிப்படுத்தியிருக்கிறார்.

சீனாவின் குவாங்ஸொவ் பகுதியை சேர்ந்தவர் சியாவோ. இவர் தன் தோழியிடம் காதல் முடிவை கேட்க தீர்மானித்தார். இருவரும் வழக்கமாக சந்திக்கும் உணவகம் மாட்டிறைச்சிக்கு பெயர் பெற்றது. எனவே அவர் மாட்டிறைச்சியில் பூங்கொத்து செய்து தரும்படி கேட்டுள்ளார். அவர்களும் இறைச்சியை மென்மையான பூ இதழ்களாக வடிவமைத்து, அதைச் சுற்றி இலைகளை வைத்து அழகான - வித்தியாசமான பூங்கொத்தாக



**பூங்கொத்து செலவால பார்ட்டி செலவு மிச்சமாகியிருக்குமோ...?**

மாற்றினர். அதைப் பெற்றுக் கொண்ட அவர் தனது நண்பியின் முன்பாக சென்று முழங்காலில் அமர்ந்து ‘என்னைத் திருமணம் செய்வாயா?” என்று கேட்டுள்ளார் இறைச்சிப் பூங்கொத்தைக் பார்த்து ஆச்சரியமானஅப்பெண் உடனே சம்மதம் தெரிவித்துள்ளார்.

1980 இல் கனடாவில் இருந்து ஜெருசலேமுக்கு சென்றார் டோவா சால் என்ற பெண். பராமரிப்பு இன்றி ஏராளமான பூனைகள் அலைந்து திரிவதைக் கண்ட அவருக்கு இரக்கம் பிறந்தது. உணவுடன் தெருவில் இறங்கி, உணவின்றி அலையும் பூனைகளுக்கு உணவளித்தார்.

இஸ்ரேலில் பொதுவாக ஆண்டு முழுவதும் வெப்பம் நிலவும் என்பதால் பூனைகள் வாழ்வதற்கு ஏற்ற காலநிலையாக உள்ளது. இதனால் அந்நாட்டில் சுமார் 20 இலட்சம் பூனைகள் உள்ளனவாம் எனக் கூறுகிறது கணக்கெடுப்பு ஒன்று. தற்போது டோவாவிடம் இனம்பெருகியவை, அனாதரவாக வந்து சேர்ந்தவை என சுமார் 600 பூனைகள் உள்ளன.

இவற்றுக்கு உணவிடுவதும், மருத்துவம் பார்ப்பதும் ஆகும் செலவுகளும் சாதாரணமல்ல. ஆனால் ‘தெருவில் பசியுடன் அலையும் பூனைகளைப் பார்த்து விட்டு என்னால் சும்மா இருக்க முடியாது. அதனால் என்னால் முடிந்தவரை பூனைகளைக் காப்பாற்றும் வேலையை மகிழ்ச்சியுடன் செய்து வருகிறேன்” என்கிறார் டோவா. இவரை ஜெருசலேம் நகரில் வசிப்பவர்கள் பூனைப் பெண் என அழைத்து வருகிறார்கள். டோவா போன்றவர்கள் இருக்கும் வரை மனிதம் மரணிக்காது...



# பூனைகளின் காவலர்

இங்கிலாந்தின் க்ளிப்டன் கிளப், மிளகாய் சாப்பிடுவதற்குப் பிரபலமானது. போட்டியின் ஒவ்வொரு சுற்றிலும் சாப்பிட வேண்டிய மிளகாயின் உறைப்பு அதிகரிக்கும்.

இந்தப் போட்டியில் பங்கேற்பது எவ்வளவு கௌரவமோ, அதில் வெல்வது அவ்வளவு கடினமானது.

ஆனால் சிட்பாபர் என்ற பெண் 2014 ஆம் ஆண்டிலிருந்து இந்தப்



# மிளகாய் ராணி

போட்டியில் தொடர்ச்சியாக வென்று வருகிறார். அதாவது நான்கு தடவைகள் சம்பியனாகி இருக்கிறார். எவரும் புரிய முடியாததாக விளங்கும் இந்தப் போட்டியில் தொடர்ச்சியாக வென்று சாதிப்பதால் அவரை மிளகாய் ராணி என்று அழைக்கிறார்கள்.உறைப்பை அதிகம் விரும்புபவர்கள்கூட இந்தப் போட்டியில் அவ்வளவு இலகுவாக வென்றுவிட முடியாது. காரணம் போட்டியின்போது வழங்கப்படும் ரெட் ப்ரஸ்னோ, ஜலபெனோ போன்ற மிளகாய் வகைகளை சாப்பிட்டால் போதும் பின்விளைவுகளை கட்டாயம் சந்தித்தே ஆக-வேண்டும். இவற்றைத் தின்று வென்றுவிட்டால் கரோலினா ரீப்பர் எனப்படும் மிளகாய் வழங்கப்படும் இதையும் சாப்பிட்டு விட்டீர்களானால் நீங்கள்தான் சம்பியன். ஆனால் இந்த மிளகாயை உண்பது அவ்வளவு எளிதில்லை. ஏனெனில் இந்த மிளகாய்தான் உலகிலேயே உறைப்பு மிக்கது. பரிசுதான் வருகிறது அதை வைத்து சிகிச்சை செய்யலாம் என்று யோசிக்கிறீர்களா. அதெல்லாம் முடியாது ஏனென்றால் பரிசுத் தொகை வெறும் 70 டொலர்கள்தான் அதாவது எங்கள் நாட்டின் மதிப்பில் 10 ஆயிரம் ரூபாதான்.

**பச்சை மிளகாயை கடிச்சாலே தாங்கல இதில போட்டி வேறயா...!**

# குருதியில் குளிக்கும் இன்னொரு ஈழம்

– ஸபர் அஹமட் –

மியன்மாரில் ராகைன் பிராந்தியத்தில் வாழும் ரோஹிங்யா என்ற இனம் தான் இந்தப் பிரபஞ்சத்திலேயே அழிவில் இருக்கும் இனமாக இருக்கிறது போலும்.. பாதுகாக்கப் படவேண்டிய அரியவகை இனமாக யுனெஸ்கோ பிரகடனப்படுத்தாது மட்டும் தான் குறை. ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு எதிராக 1977 இல் இருந்து காலத்துக்குக் காலம் நடக்கும் கொலை விழா இந்த வருடம் ஒகஸ்ட் மாதத்திலேயே உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகி விட்டது.


மியன்மாரில் பதினைந்தாம் நூற்றாண்டில் இருந்து முஸ்லிம்கள் போய்க் குடியேறி வாழ்ந்தாலும் அவர்களில் ரோஹிங்யா எனப்படும் பிரிவை தீண்டத்தகாத கீழ்சாதி இனமாகவே பார்க்கிறது அரசு. ரோஹிங்யா முஸ்லிம்கள் 1971 இல் கிழக்கு பாகிஸ்தானாய் இருந்த பங்களாதேஷம் சுதந்திரம் அடைந்த போது அங்கே இருந்து கடல்மார்க்கமாக மியன்மார் வந்த வந்தேறிகள் என்று அரசு முத்திரை குத்தியது. வருட இறுதி போனஸாக 1982 இல் வாக்குரிமையை நீக்கியது.அதாவது 'இந்த நாட்டில் உனக்கு எந்தவித உரிமையும் இல்லை, உன்னை வைச்சுச் செய்வோம்' என்று அர்த்தம்..'இந்த ஜனநாயகமே 'ஹராம்'..நாங்கள் வோட்டுப் போடமாட்டோம்'என்று அடம்பிடிக்கும் சில குழந்தைகள் இங்கே பூதக்கண்ணாடி போட்டு பார்க்க வேண்டிய 'மேட்டர்' இது.. வாக்குரிமையை நீக்குதல் என்பதன் கொச்சையான மீனிங் ஆண்மையை நீக்கிக் கொள்வது போல.. சொந்த நாட்டில் நடைப்பிணமாகக் கடவது என்று அர்த்தம்

கிட்டத்தட்ட ஐம்பது வருட இராணுவ சர்வாதிகார ஆட்சியில் இருந்து மீண்டு சமாதானத்துக்காக நோபல் பரிசு பெற்ற ஆங் சான் சுகியின் கண்ணசைவில் சர்வமும் அடக்கம் என்றாகிப் போன பின்பும் ரோஹிங்யா முஸ்லிம்கள் மீது முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வன்முறை தொடர்கிறது. அரசே அவர்களைச் சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் என்று காதுகுத்தி விழா எடுத்துவிட்டதாலோ என்னவோ திரும்பிப் பார்க்க ஒரு பிறவி இல்லை. சட்டவிரோதக் குடியேற்றவாசிகளை எல்லாம் இப்படி மிருகத்தனமாகக் கொல்லலாம் என்று காட்டுவாசிச் சட்டம் இயற்றினால் ஐரோப்பாவும் அவுஸ்ரேலியாவும் தான் முதலில் இரத்த சமுத்திரமாகும்.

உச்சக்கட்ட சோகமாக கடந்த ஏப்ரலில் பி.பி.ஸிக்கு பேட்டி அளித்த போது 'ரோஹிங்யர்கள் தங்களுக்குள்ளே சண்டையிட்டு ஒழிந்து போனார்கள். இதில் இராணுவத்துக்கு எந்தவித சம்பந்தமும் இல்லை' என்றார்.இராணுவ ஆட்சியாளர்களால் படாது பாடுபடுத்தப்பட்ட ஆங் சான் சூகி, பதினைந்து வருசம் வீட்டுக்காவலில் வைக்கப்பட்ட ஆங் சான் சூகி, பிரித்தானியாவில் கணவர் இறந்த போது சடலத்தைப் பார்க்க பிரித்தானியா போனால் திரும்ப மியன்மார் திரும்ப கூடாது என்று இராணுவ அதிகார பீடம் கட்டளையிட்ட போது ' எனக்கு இந்த தேசமே முக்கியம்' என்று முழங்கிய ஆங் சான் சூகி, ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற ஆங்சான் சூகியின் இன்றைய செயற்பாடுகளுக்கும் அமெரிக்காவின் ரைம்ஸ் சஞ்சிகையால் பௌத்த பயங்கரவாதி என்று பட்டாபிஷேகம் சூட்டப்பட்ட மியன்மாரின் அசின் விராதுவின் செயற்பாடுகளுக்கும் இடையில் கொள்கையளவில் எந்த வேறுபாடும் இல்லை.

அதிகாரமும் மமதையும் ஆட்சியைத் தக்கவைக்கப் பெரும்பான்மையைத் திருப்தி செய்ய அடிக்க வேண்டிய லூட்டிகளும் பிரயத்தனங்களும் மதத்தின் பெயரால் ஆட்சி நடத்தும் எந்த நாட்டு ஆட்சியாளர்களுக்கும் பொதுவானவை..அது ஆனானப்பட்ட நோபல் பரிசு வழங்கப்பட்ட ஆங் சான் சூகியாய் இருந்தால் மட்டும் விதிவிலக்காகிடுமா என்ன ?

மேர்வின் சில்வாவுக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது போல இருக்கிறது ஆங்சான் சூகிக்கு வழங்கப்பட்டு இருக்கும் நோபல் பரிசு..அமெரிக்காவுக்கே கவலையாக இருக்கிறதாம் என்கிறது பி.பி.ஸி. கவலையைப் போக்க ஒன்று தான் செய்ய முடியும்.ஆங் சான் சூகிக்கு வழங்கப்பட்ட நோபல் பரிசை 'நோ போல்' என்று அறிவித்துவிட்டு 'ப்ரீ ஹிட்' எடுத்து வாங்கு வாங்கு என்று வாங்கி மியன்மாருக்குப் பொருளாதார தடை விதிக்கலாம்.. வேறு தெரிவுகள் இல்லை..



இன்னொரு வேடிக்கை இலங்கை சுதந்திரம் அடையச் சரியாக ஒரு மாதம் முன்பு அதாவது 1948 ஜனவரி 4 இல் சுதந்திரம் அடைந்து இருக்கிறதாம் மியன்மார். சிறுபான்மை இனங்களைக் கையாளும் விதத்தில் எங்களை விட ஏன் அவர்கள் முப்பது படி முன்னேறி சரித்திரம் படைத்து இருக்கிறார்கள் என்ற காரணம் இப்போது தான் புரிகிறது.

ஒவ்வொரு இடத்திலும் எப்போதும் இரத்த ஆற்றில், எல்லோராலும் கைவிடப்பட்ட மக்களின் பிணக்குவியல்கள் மலையாக நீள வேண்டுமென்பதே உலக விதி போலும். 2009 இல் ஈழத் தமிழர்கள். இப்போது ரோஹிங்யாக்கள். இங்கிருந்து பதாகைகளை ஏந்தி, படுகொலைகளை நிறுத்து என்று கூவ மட்டுமே நம்மால் முடியும். அதையெல்லாம் அதிகாரம் காதில் போட்டுக் கொள்ளாது. வேண்டுமானால், பதிலுக்கு இரத்த வெறி பிடித்த இன்னும் சில நூற்றுக்கணக்கான ரோஹிங்கியர்களைப் போட்டுத் தள்ளலாம். எல்லாம் முடிந்த பின்னர் ஐ.நாவின் ஒப்பாரியுடன் யாவுமே மறக்கடிக்கப்பட்டு விடும். இதுவே உலகின் இப்போதைய நியதி.

# கடந்தவார சமூக இணையத் தரவரிசை

1




நீட் தேர்வுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்த தமிழக மாணவி அனிதாவின் தற்கொலை சமூக வலைத்தளங்களில் சோகத்தை மட்டுமின்றி - புரட்சியையும் விதைத்தது.

அனிதா - அனிதாவின் மரணம் - அதைத் தொடர்ந்து நடந்த சம்பவங்கள் - அரசியல் குறித்து பலரும் பலவிதமான பார்வைகளை தங்கள் சமூக வலைத்தளத்தில் பதிவு செய்தனர். பல பிரபலங்களும் சமூக வலைத்தளங்களில் அனிதாவின் மரணத்துக்கு இரங்கல்களை தெரிவித்திருந்தனர்.

நீட் பரீட்சையை எதிர்த்து தமிழகம் - இந்தியா முழுவதும் தொடரும் போராட்டத்துக்கும் சமூக வலைத்தளங்களில் அழைப்பும் ஆதரவும் தெரிவிக்கப்பட்டது. மேலும் அனிதாவின் படத்தை தங்கள் முகப்புப் படமாக வைத்தும் அனிதாவுக்கு அஞ்சலி செலுத்தினர்.

2




## எதிர்ப்பும் மீறலும்

பெண் முன்னாள் போராளிகளை பாலியல் தொழிலாளிகளாக சித்திரித்து ஆனந்த விகடனில் கட்டுரை ஒன்றை எழுதிய அருளினியன் கேரள டயரீஸ் என்ற நூலை வெளியீடு செய்தார். இந்த நூல் வெளியீடு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவிருந்த நிலையில் முகப்புத்தகங்களில் அருளினியனுக்கு எதிராக குரல்கள் எழுந்தன. தீவிரமான இந்தப் போராட்டத்தால் மண்டபம் வழங்க கல்லூரி பின்வாங்கியது. நூலை எப்படியாவது வெளியிட்டுவிடும் என்ற எண்ணத்தில் அருளினியன் பத்திரிகையாளர்களை சந்தித்து விளக்கம் ஒன்றை வழங்கினார். ஒட்டுமொத்த பழியையும் ஊடகம் மீது சுமத்திவிட்டு, தப்பித்துவிடலாம் என்பது அவரின் எண்ணமாக இருந்தது. ஆனாலும் எதிர்ப்புகள் தொடர்ந்தன. இதையடுத்து இரகசியமாக யாழ். நகரின் ஹோட்டல் ஒன்றில் மூடிய அறைக்குள் புத்தக வெளியீட்டை செய்தார். அதையும் சமூகவலைத்தளப் போராளிகள் கடுமையாக விமர்சித்தனர். எனினும் இந்த எதிர்ப்புக்களின் ஊடாக இலவச விளம்பரத்தையும் அருளினியன் பெற்றிருந்தமையும் மறுக்க முடியாது.


3




இந்தியாவின் பெங்களூரில் சுட்டுக் கொல்லப்பட்ட ஊடகவியலாளர் கௌரி லங்கேஷுக்கு அஞ்சலிகளை பலரும் செலுத்தியிருந்தனர். இந்துத்துவா எதிர்ப்பாளரான கௌரி லங்கேஷின் கொலை ஏற்படப் போகும் பேரழிவைக் குறிப்பதாக சிலர் பதிவுகளை வெளியிட்டிருந்தனர்.


ஈழப் போராட்டத்துக்கு அவர் வழங்கிய ஆதரவு குறித்தும் சிலர் எழுதியிருந்தனர். அத்துடன் அவரின் மரணத்துக்கு நீதி வேண்டும் என்பதையும் வலியுறுத்தியிருந்தனர். மேலும் மோடியையும் மஹிந்த ராஜக்ஷவையும் ஒப்பிட்டுப் பேசவும் சிலர் மறக்கவில்லை.

**இன்று ஆசிரியர் தினம், உங்கள் மனைவிக்கு வாழ்த்து கூறுங்கள்.**



**அவர்கள் நமக்கு எடுக்காத வகுப்பா!**

**என்ன உலகமடா இது!**



**மதிய சாப்பாட்டுக்கு அப்பறம், ஆழ்ந்து கண்ண மூடி சிந்திச்சா தூங்குவதாக நினைக்கிறது இந்த உலகம்! ச்சே!**

**மெதுவா நடக்கனும்..**

**அதிர்ந்து ஓடக்கூடாது...**

**டைமுக்கு சாப்பிடனும்...**

**அதிகமா வெயிட் தூக்க கூடாது...**

**எச்சரிக்கையா இருக்கனும்...**

**ஏன்னா இது ஒன்பதாவது மாசம் அதான்...**

**ஹேப்பி செப்டம்பர்..**




நடத்துனர்: படியில் நிக்காதப்பா உள்ளேதான் கடல் மாதிரி இடம் இருக்கே. உள்ளே வா!

மாணவன்: எனக்கு நீச்சல் தெரியாது அதுதான் கரையிலேயே நிற்க்கிறேன்.

யாரு கிட்ட..!!




ஏட்டு : ஐயா..இங்க ஒரு பொண்ணு வீடு துடைச்ச ஈர தரையில காலை வச்சதுக்கு அவங்க புருஷனை சுட்டுட்டா..சார்
இன்ஸ்பெக்டர்: கைது பண்ணீட்டீங்களா அவளை...?
ஏட்டு: இன்னும் இல்ல சார்?
இன்ஸ்பெக்டர்: ஏன்யா?😢😢😢😢
ஏட்டு: இன்னும் தரை காயல சார்😂😂😂

**கணவன்: நான் வேனும்னா ப்ளூ வேல் விளையாடட்டுமா?**

**மனைவி: என்னங்க திடீர்னு இப்படி சொல்லிட்டீங்க.**

**கணவன்: அது என் உயிர எடுத்துடும்னு பயப்படுறியா!**

**மனைவி: ஆமாங்க! அப்பறம் நான் எதுக்குங்க இருக்கேன்!**

**கணவன்: !!**

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com

## சட்டம் செயற்படுமா..?

நாட்டில் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் பொலித்தீன் விற்பனைக் கான தடை நடைமுறைக்கு வந்துள்ளது. ஆனால் இந்தத் தடை முழுமை யாக நடைமுறைப்படுத்தப்பட்டமையை எங்கும் காண முடியவில்லை. 2016 ஆம் ஆண்டின் இறுதியிலேயே 20 மைக் ரோனுக்கு குறைந்த பொலித்தீனுக்கு தடை விதிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதனை முற்றாக நடைமுறைப்படுத்து வதற்கான நாளாக செப்ரெம்பர் முதலாம் திகதி அறிவிக்கப்பட்டிருந் தது. ஆனால் அதை நடைமுறைக்கு கொண்டுவருவதற்கான முன்னாயத்தம் எதுவும் இதுவரை காலமும் செய்யப்படவில்லை.

இந்நிலையிலேயே அறிவிக்கப்பட்டது போன்று செப்ரெம்பர் முதலாம் திகதி நெருங்கியபோதுதான் வர்த்தக நிறுவனாங்கள், அது சார்ந்த அமைப்புகள் பொலித்தீனுக்கு தடை விதித்தால் என்ன செய்வது எனக் கேள்வி எழுப்பத் தொடங்கினர். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மக்களின் பணத்தை வறுகுபவர்கள் தங்களின் வேலையைத் தொடங்கினர். அதில் ஒன்றுதான் உணவுப் பார்சலின் விலை 10 ரூபா அதிகரிப்பு. விலை அதிகரித்ததே தவிர இலையில் பார்சல் இன்னமும் வரவில்லை.

சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியவர்கள் இன்னமும் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். சட்டத்தின் காவலர்களான பொலிஸாரின் பைகள் மட்டுமே நிறைகின்றன. இதனால் சட்டம் எந்த வர்த்தகருக்கு எதிராகவும் இன்னமும் பாயவில்லை. இந்த நிலைமை நாட்டுக்கு புதிதாக இருக்கலாம் வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை இது பழகிப் போன ஒன்றாகவே உள்ளது. 20 மைக்ரோனுக்கு உட்பட்ட பொலித்தீன் பாவனைக்கு நாட்டில் முதன்முதலில் தடை விதித்தது வடக்கு மாகாணமே. இந்தத் தடைத் தீர்மானம் சபையின் வழக்கமான தீர்மானங்களைப் போன்று தூங்கியே கிடக்கின்றது.

அதனை நடைமுறைப்படுத்துவதில் முன்னர் பல தடைக்கற்கள் இருந்தன. ஆனால் அவையெல்லாவற்றையும் தகர்க்க இன்றைய அரசும் விடவில்லை. அதன் விளைவே இப்போதைய பொலித்தீன் பாவனை தடையும் செல்லாக் காசாகா நாட்டில் நிற்கிறது. முழு நாட்டுக்கும் நன்மை பயக்கக்கூடிய விடயத்தை மாகாண அரசு கொண்டுவந்தபோது பொலிஸ் அதிகாரத்தை மாகாண சபைக்கு வழங்காத அரசாங்கம் அதை நடைமுறைப்படுத்துமாறு வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தலை வழங்கியிருக்க வேண்டும் ஆனால் அப்போது அதை வழங்கத் தவறியிருந்தது அரசு. மாகாண சபையும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து அக்கறையுடன் செயற்படவில்லை என்பது வேறுவிடயம்.

இது எல்லாவற்றையும் விட வேதனையான விடயம் ஒன்றும் உள்ளது. வடக்கு மாகாணத்தின் சுற்றுச்சூழல் அமைச்சராக இருந்த பொ.ஐங்கரநேசன் தனது காலத்தில் சுற்றுச்சூழல் விடயத்தில் அதிக சிரத்தை கொண்டிருந்தார். (இந்த விடயத்திலும் அவர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன என்பது வேறு விடயம்) அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் இந்த விவகாரம் குறித்து இப்போது சுற்றுச்சூழலுக்கு பொறுப்பானவரிடம் விசாரித்தபோது அவ்வாறான சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டதா என எம்மிடமே மறுகேள்வி எழுப்பினார்.

அதிகாரிகள், வர்த்தகர்கள், மக்களின் நிலைப்பாடும் இத்தகையதாகவே உள்ளது. சட்டத்தை அறிமுகப்படுத்தல், அது தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்த வேண்டியவர்கள் வெறுமனே கூட்டத்தில் மட்டும் பேசி கைதட்டல் வாங்கினால் போதும் என்ற நிலையிலேயே உள்ளனர். அவற்றின் உண்மைத் தாக்கங்களை விளங்கிக் கொள்ள மறுக்கின்றனர். ஆள்பவர்களும் - ஆட்சிக்கு வரத் துடிப்பவர்களின் - அவர்களின் நிலை இதுவே என்பதைக் காட்டுவதற்கு பொலித்தீன் தடை ஓர் உதாரணம்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தில் நடந்தது என்ன?



அ.ஹொக்ஷன்

தமிழ் மக்கள் பேரவையினர் கடந்த 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அரசமைப்பு தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர். இதில் 'தமிழர் அரசியல் தீர்வின் அடிப்படைகளும் உத்தேச அரசமைப்பு முயற்சியும்" எனும் தொனிப் பொருளில் துறைசார் நிபுனர்கள், அரசியல் தலைவர்கள் கருத்துக்களை மக்களுக்கு தெளிபடுத்தியிருந்தனர். இறுதியில் மக்களின் கருத்துக்களைக் கொண்டு ஏழு அம்சக் கோரிக்கைகளை உள்ளடக்கிய பிரகடனமும் அவர்களால் வெளியிடப்பட்டது.

அரசமைப்பு உருவாக்க அவையில் தமிழர் முன் வைக்க வேண்டியது: தமிழர் தேசத்தை தற்காத்துக் கொள்ளும் தீர்வையா? 'நடைமுறைச் சாத்தியம்" என்னும் பெயரில் சிங்களம் திணிக்க முற்படுவதையா? எனும் கருப்பொருளில் அரசியல் ஆய்வாளர் ம.நிலாந்தன், ஒற்றையாட்சி அரசியலமைப்புக்குள் சமஷ்டி சாத்தியமா? புதிய அரசமைப்பு 'ஒற்றையாட்சி" 'சமஷ்டி" என்ற பதங்கள் தாங்கி வெளிப்படையாக இனங்காட்டப்பட வேண்டுமா? என்ற கருப்பொருளில் யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறையின் தலைவர் கு.குருபரன், வடக்கு, கிழக்கு இணைப்பும் முஸ்லிம்களும் எனும் கருப்பொருளில் சட்டத்தரணி சி.அ.யோதிலிங்கம், புதிய அரசியல் உருவாக்கத்தில் அமெரிக்க, சீன, இந்திய நலன்களை விளங்கிக் கொள்ளல் எனும் கருப்பொருளில் யாழ்.பல்கலைக்கழக அரசறிவியற்றுறையின் தலைவர் கே.ரி.கணேசலிங்கம், அரசமைப்பு உருவாக்க முயற்சியின் போக்கு எனும் கருப்பொருளில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் ஆகியோர் கருத்துக்களை மக்களிடையே பகிர்ந்து கொண்டனர். இந்தக் கருத்துப் பகிர்வின் ஊடாக தமிழ் மக்களின் எண்ணப்பாடு - தமிழ் மக்கள் பேரவையின் கருத்து நிலைப்பாடு, அரசமைப்பு உருவாக்கத்தின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்கிறது? என்பவை தொடர்பான கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

**சி.வி.விக்னேஸ்வரன்**
**வடக்கு மாகாண முதலமைச்சர்**

தமிழ் மக்களின் பேரியக்கமாக இயங்க-வேண்டிய தமிழ் மக்கள் பேரவை இரண்டு பிரமாண்டமான "எழுக தமிழ்" கூட்டங்களின் பின்னர் கும்பகர்ணன் போல் தூங்கப் போய்விட்டதா என்ற கேள்வி எழுந்ததால்-தான் நாங்கள் விழிக்கத் தொடங்கியுள்ளோம். கட்சியாக இருப்பது இலேசான காரியம். தேர்தல் காலத்தில் எழுந்து கொண்டு மக்களுக்கு "சந்திரனைத் தருவோம்" "சூரியனைத் தருவோம்" என்று கூறி வாக்குக் கொடுத்து விட்டு மீண்டும் தூங்கப் போகலாம். ஆனால் மக்கள் பேரியக்கமாகப் பரிணாமம் பெற்று அதே பரிமாணத்தில் தொடர்வது என்பது அவ்வளவு இலேசான காரியமன்று. பேரியக்கங்களில் இருப்போர்க்கு அர்ப்பணிப்பு அவசியம். சதாகாலமும் எம்மை நம்பியிருக்கும் எம் மக்களின் நலன் பற்றிச் சிந்தித்துக் கொண்டு இருக்க வேண்டிய கடப்பாடு மக்கள் இயக்கங்களுக்கு உண்டு.

உகந்த கேள்விகளைக் கேட்டு அவற்றை அலசி ஆராய்வதால் கூட்டத்தில் இருந்து செவிமடுப்போர் நன்மை பெறுகின்றார்கள். உண்மை நிலையை விளங்கிக் கொள்கின்றார்கள். அந்த வகையில் 5 விடயங்கள் இன்று ஆராயப்படவிருக்கின்றன.

முதலாவது விடயம் மிக முக்கியமானது. அரசமைப்பு விடயத்தில் பெரும்பான்மையினர் முகத்தைச் சுழிப்பார்கள் என்பதால் எமது தேவைகளையும், முன்னுரிமைகளையும், அபிலாஷைகளையும், நோக்குகளையும் மூட்டை கட்டி வைக்க வேண்டுமா? மற்றவர்கள் முகத்தைச் சுழிப்பார்கள் என நாம் எமது தனித்துவத்தை விட்டுக் கொடுத்தால் இருபது வருடங்களில் தமிழர் பிரதேசங்களின் எல்லாக் கட்டிடங்களும் ஒசுசல, லக்சல, சலுசல ஆகிவிடும். எம்முட் சிலர் இவை யாவும் மரங்கள்தானே என்று பார்க்கின்றோம். ஆனால் வனத்துள் நுழைந்துவிட்டோம் என்பதை அறியாமல் இருக்கின்றோம். நேரம் சென்றதும் கொடிய காட்டு மிருகங்களுடன் போராட நேர்ந்திடும் என்பதை உணராமல் இருக்கின்றோம். "அதற்கென்ன! இன்று ஒரு சலுசல என்று பெயர் வைத்தால் குடியா முழுகிப் போய் விடும்?" என்று சிலர் கேட்கின்றார்கள். அவர்களுக்கு என்னுடைய பதில் "ஆம்! எமது தமிழ்ப் பேசும் குடியே முழுகிப் போய்விடும்"


**பெயரில் என்ன இருக்கின்றது என்பது...**

எங்களுக்குத் தேவை அதிகாரப் பரவல். அது ஒற்றையாட்சிக்குள் வந்தால் என்ன, சமஷ்டி என்ற ஒரு பெயர் தாங்காத ஒரு அலகின் கீழ் வந்தால் என்ன என்று சிலர் கேட்கின்றார்கள். இங்குதான் சட்டத்தைப் பற்றியும் உச்ச நீதிமன்றத்தைப் பற்றியும் சற்றுச் சிந்திக்க வேண்டியிருக்கின்றது. எவ்வளவு அதிகாரப் பரவல்கள் ஒற்றையாட்சியின் கீழ் பெறப்பட்டாலும் அது "கொடுத்தவனே எடுத்துக் கொண்டாண்டி" என்ற நிலைக்கு எத்தருணத்திலும் வரமுடியும் என்பதை நாங்கள் மறக்கக்கூடாது.

(21 ஆம் பக்கம் பார்க்க)

# எரிகிற வீட்டில்...

■ சிக்மலிங்கம் றெஜினோல்ட்



மூன்று நாட்களாகக் கடம்பன் தலைமறைவாக இருக்கிறார். அடுத்ததாக என்ன நடக்கும் என்று அவருக்குத் தெரியாது. இனி என்ன செய்வது என்றும் தெரியவில்லை. அடுத்து எங்கே போவது? எப்படி இந்தச் சிக்கலில் இருந்து தப்புவது என்று ஒன்றுமே புரியவில்லை. இந்த் வாரம் முழுவதும் தூக்கமில்லாமல் இருந்தது வேறு களைப்பைத் தந்தது. சாப்பிடவோ குடிக்கவோ மனசில்லை. இதனால் உடல் சோர்ந்து விட்டது. உடலை விட மனம் சோர்ந்து விட்டது.தன்னுடைய வாழ்க்கையில் இப்படியொரு களைப்பைத் தன்னுடைய மனம் கண்டதில்லை என்று எண்ணும்போது அவருக்குப் பதற்றமும் கவலையும் உண்டாகின. உடல் மேலும் தளர்ந்து வடிந்து ஒடுங்கியதைப் போலிருந்தது. இப்படியே இருந்தால் கெதியில் இறந்து விடுவேனோ என்ற எண்ணம் அவருக்கு வந்தது.

இல்லை, அப்படி இருக்கக்கூடாது. எப்படியாவது இதிலிருந்து மீண்டு விடவேண்டும் என்று முயன்றார். ஆனால், வழி தெரியவில்லை. எப்படித்தான் சிந்தித்தாலும் ஒரு சிறிய இடைவெளியைக் காண்பதென்பது கடினமாகவே உள்ளது. ஏற்கனவே கண்பார்வை இல்லை. அதற்கே பிறருடைய உதவி தேவையாக இருக்கு. இப்போது இந்தப் பிரச்சினையில் இருந்து மீள்வதற்கு யாருடைய உதவியைப் பெறலாம்? இவ்வளவுக்கும் கடம்பன் வாள் வெட்டில் ஈடுபட்ட கேஸில்லை. கொலைக்குற்றவாளியோ பாலியல் சேட்டை விட்ட ஆளோ கிடையாது. என்றாலும் விதி இப்படித் தலை மறைவாக இருக்க வைத்துள்ளது. இந்தத் தலைமறைவு வாழ்க்கையிலிருந்து மீள்வதற்காகத் தெரிந்தவர்களையெல்லாம் கேட்டுப்பார்த்தாயிற்று. யாரும் நம்பிக்கை அளிக்கிற மாதிரி உதவத் தயாராக இல்லை. எல்லோரிடமும் கேட்கவும் முடியாது. இந்தக் குருடனை நம்பி யாராவது பொன்னையோ பொருளையோ கொடுப்பார்களா? வாழ்க்கையில் வாய் விட்டுக் கேட்காதவர்களை எல்லாம் கேட்டுப்பார்த்தாச்சு. கெஞ்சாத கெஞ்சல்களையெல்லாம் செய்தும் ஆச்சு. ஆனால் யாரும் சல்லிக் காசு கொடுக்க முன்வரவில்லை. வீழ்ந்தால் இப்படித்தானா இந்த உலகம் நடந்து கொள்ளும்?

நேற்றுவரையும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தவர்கள் இன்று தொலைபேசியை அணைத்து வைத்திருக்கிறார்கள். கடன் என்றால் உறவுகள் கதவைச் சாத்துவது ஏன்? இதைத் தெரிந்துதானா உறவுக்குப் பகை கடன் என்று சொன்னார்களா? இந்த உலகமே தன்னைக் கைவிட்டதைப் போல ஒருணர்வு தோன்றியது. இந்த உலகத்துக்குத் தான் வேண்டாத ஒருவனாகி விட்டேனா என்று எண்ணினார். இந்த நிலை, இப்படியான ஒரு நிலை வருவதற்குத் தானும் ஒரு காரணமாக இருந்திருக்கிறேன் என்று எண்ணியபோது அவருக்குத் தன்மேலே கோபம் வந்தது. அதற்காக இப்போது என்ன செய்ய முடியும்?

கடம்பனுக்கு இரண்டு கண்களுமே தெரியாது. கண்தெரியாதவர்களின் கல்வியை ஆறாம் ஆண்டு வரை படித்திருக்கிறார். வயது 48. ஆள் சற்று வாயாடி. நீங்கள் ஒரு ஐந்து நிமிசம் கடம்பனோடு கதைச்சீங்கள் எண்டால் அப்படியே அவருடைய திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து விடுவீர்கள். இதனால் கடம்பனோடு பலரும் தொடர்பு வைத்துக் காரியங்களைச் செய்தார்கள். கடம்பன் ஊரிலே தேங்காய் வியாபாரம் செய்தார். புகையிலை வெட்டுக்காலத்தில் அதைத் தீர்த்து வாங்கி விற்றார். மாடுகளை விற்கவும் வாங்கவும் தரகு செய்தார். நெல் அறுவடைக்காலத்தில் நெல்லைத் தீர்த்து வாங்கி மில்காரருக்கு விற்றுச் சம்பாதித்தார். காலம் ஓடியது. கையில் ஓரளவு காசும் புரண்டது. சிறிய அளவில் ஒரு வீட்டைக் கட்டினார். வீட்டில் தான் மட்டும் தனியே இருக்க முடியுமா? ஒரு கலியாணத்தையும் கட்டினார். எல்லாம் நன்றாகத்தான் போய்க் கொண்டிருந்தது. ஊரில் நாலுபேர் மதித்தார்கள்.

சிலர் ஆச்சரியப்பட்டனர். கடம்பன் சீட்டுப் பிடிக்கப்போவதாக அறிவித்தார். "கடம்பனை நம்பிச் சீட்டுப் போடலாமா?" என்று அருள் கேட்டான். "வாயைப் பொத்தி அடிப்பேன். அவனை நம்பிச் சீட்டுப் போடுறதுக்கு என்ன பிரச்சினை. ஆள் கண் பார்வையில்லாதவன் எண்டாலும் நாக்குத் தவறாதவன். வாக்குப் பிழைக்காதவன்" என்றான் குமார். ஊரில் இரண்டு சீட்டுகள் கடம்பனின் கையில் முளைத்தன. காலம் ஓடியது. கடம்பன் இப்போது கோழி வளர்த்தார். இரண்டு ஆடுகளையும் வாங்கி வீட்டின் பின்புறத்தில் கட்டினார். எல்லாம் நல்லாகத்தான் நடந்தன காலம் ஓடியது. வருமானமும் கூடியது. வங்கிகளில் வைப்பும் எடுப்பும் நடந்தது. இப்படி இருக்கும்போது தான் ஒருநாள் வந்து சேர்ந்தது சனியன்.

ஒரு பின்னேரம், மழை பெய்து சற்று ஓய்ந்திருந்த நேரத்தில் இரண்டு பெடியள் வந்தான்கள். நீளக்கை சேர்ட். கழுத்தில் ரை. சப்பாத்து. முதுகில் கொழுவப்பட்ட பயணப்பைகள் என்ற கோலத்தில் வந்து சேர்ந்தவர்கள், கடம்பனைப் பற்றித் தாங்கள் கேள்விப்பட்டுத்தான் அவரை நேரிலே பார்க்க வந்ததாகச் சொன்னார்கள். கடம்பன் அவர்களை வரவேற்று அவர்களின் கதைகளை ஆர்வத்தோடு கேட்டுக் கொண்டிருந்தார். அவர்கள் கடம்பனைப் பற்றி, அவருடைய முயற்சிகளைப் பற்றி, அவருடைய திறமைகளை, ஆற்றலை, நம்பிக்கையை, துணிச்சலைப்பற்றியெல்லாம் சொல்லிக்கொண்டேயிருந்தனர். இது எல்லாவற்றையும் எப்படித்தான் அறிந்திருக்கிறார்களோ என்று கடம்பனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர்களிடம் காதுகளைக் கொடுத்து விட்டு அப்படியே சிலையாக உறைந்து போயிருந்தார். மனம் உள்ளுக்குள்ளே உருகிக்கொண்டிருந்தது. கடம்பனின் வாழ்க்கையில் இப்படி ஒருவர் வாய்திறந்து இவ்வளவையும் சொல்லிப் பாராட்டியதில்லை.

"சீ என்ன சனங்கள். ஊரில் பிறந்தவனை அறிந்து மதிக்கத்தெரியாத ஆட்கள். எப்ப பார்த்தாலும் எதையோ தங்களுக்குள்ள ரகசியமாகக் கதைச்சுக் கொண்டு எரிச்சலும் பொறாமையுமாக அலையிற கூட்டம். இந்தப் பெடியளுக்கு என்னையே சரியாகத் தெரியாது. ஆனால், என்னைப்பற்றி எவ்வளவை அறிஞ்சு வைச்சிருக்கிறாங்கள்... மற்றவையைப் பாராட்டிறதுக்கும் வாழ்த்திறதுக்கும் ஒரு மனசு வேணும்..." என்று எண்ணினார் கடம்பன்.

"இப்படி ஊரில இருக்கிற ஒவ்வொருவரும் சவால்களை எதிர்கொண்டு செயற்பட்டால் இந்த ஊர் மட்டுமல்ல, இந்தப் பிரதேசம் மட்டுமல்ல இந்த நாடே சிறப்படையும். அதுக்கு நீங்கள் நல்லதொரு முன்மாதிரி அண்ணை" என்று சொன்னான் அவர்களில் ஒருவன். கடம்பனின் உடம்பு சிலிர்த்துக் கூசியது. எலும்புகள் குளிர்த்து சிறகு முளைத்ததைப்போல இருந்தது. அண்ணை இவ்வளவையும் செய்து சாதிச்சிருக்கிற நீங்கள், இன்னும் கொஞ்சம் முயற்சி செய்தால், நீங்கள் இருக்க வேண்டிய இடம் இல்லையில்லை, இருக்கப்போற இடம் வேற அண்ணா" என்றான் மற்றவன். ஏதோ சுவீப் ரிக்கெற்றைக் கிழித்துப் பொக்கற்றுக்குள் வைத்ததைப்போல இருந்தது கடம்பனுக்கு.

"அண்ணை நிச்சயமாக நீங்கள் ஒரு நல்ல எதிர்காலத்தின்ரை விளிம்பில நிக்கிறீங்கள்..." என்றான் முதலாம் ஆள். சுவீப் ரிக்கெற்றில் முதலாம் பரிசு விழுந்ததைப்போல ஒரு உணர்வு எழுந்து தலையைக் குளிர வைத்தது. வாழ்க்கையில் எப்பவும் ஓடிக்கொண்டிருக்க ஏலாது.. இடையில கொஞ்ச ஆறுதல் தேவை. அதுக்கு இந்த மாதிரி ஒரு வாய்ப்புக் கிடைக்கும் எண்டால்....

"அண்ணை உங்களுக்காக ஒரு நல்ல திட்டத்தை அறிமுகப்படுத்திறம். நீங்கள் முதல்ல ஒரு ஆறு பேரை ஒரு குழுவாக ஆக்குங்கோ. பிறகு அவை ஒவ்வொருவரும் ஆறு பேர் வீதம் ஆறு குழுக்களை உருவாக்க வேணும். அவை தனித்தனியாகச் சேமிப்புகளைச் செய்யலாம். இப்படியே ஒவ்வொருத்தரும் தனித்தனியாகக் குழுக்களை ஆரம்பிச்சு எங்கட கொடுக்கல் வாங்கல்களில் இணைந்து செயற்பட்டால் உங்களுக்கும் நல்ல வருமானம் வரும். எங்களுக்கும் நல்ல வருமானம் வரும். இது இரண்டு தரப்புக்கும் இலாபம் தார தொழில். சிறு தொழில் முயற்சிக்கான கடன் தொடக்கம் சிறு சேமிப்பு வரையில ஏராளம் திட்டங்கள் உண்டு. நீங்கள் தனியாகவே சாதனை செய்திருக்கிற ஆள்.

உங்களுக்கு நாங்கள் எதையும் புதிசாகச் சொல்லத் தேவையில்லை. ஊருக்குள்ள நீங்கள் ஓமெண்டால் ஒரு இருபது குழுவாகக் கட்டலாம். அதில உங்களுக்குத்தான் கூடுதலான பங்குகளும் லாபமும் கிடைக்கும். இது தானாக வாற வாய்ப்பு. கொஞ்சம் நீங்கள் அக்கறையெடுத்தால், வெற்றிதான். இதைப்பற்றி விளக்கமாகத் தெரிய வேணும் எண்டால், உங்களைக் கூட்டிக் கொண்டு போய் மனேஜரோட கதைக்க வைக்கலாம். வாகன வசதியை நாங்கள் செய்யிறம்... நீங்கள் ஓமெண்டு சொன்னால் போதும். மற்றதெல்லாம் எங்கட பொறுப்பு....." ஆள் மாறி ஆள் இப்படிக் கதைத்தார்கள்.

கடம்பனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. இந்தப் பின்னேரம் வலிய வந்து சீதேவி கதவைத் தட்டுது என்று எண்ணினார். அவரை அறியாமலே அவருடைய தலை அவர்களுக்கு ஆம் சொன்னது. அவர்கள் பெரிய கொண்டாட்டமாக மகிழ்ச்சியைத் தெரியப்படுத்தினார்கள். அன்று கடம்பன் வீட்டில் எல்லோருக்கும் தேனீர் இரட்டிப்பாக இனித்தது. அன்றிரவு கடம்பனின் கண்களில் ஒளி சுடர் விட்டது.

( 18 ஆம் பக்கம் பார்க்க)



# ஈழத் தமிழர்களும் ரோஹிங்கியர்களும்

கடந்து போன மூன்று தசாப்தங்களுக்கு மேலாக ஈழத் தமிழர்கள் அனுபவித்த சொல்லொணாத் துயரங்கள், உயிரழிவு, இடப்பெயர்வு, முகாம் வாழ்க்கை, இறுதிப்போரில் இடம்பெற்ற படுகொலைகள், பாலியல் வன் கொடுமைகள், காணாமல் ஆக்கப்படுதல், கைதுகள் என்பவற்றை மீண்டுமொரு முறை மீட்டிப் பார்க்கவைக்கிறது. மியான்மார் ரோஹிங்கியா சிறுபான்மை இன முஸ்லிம்கள் மீது இராணும் கட்டவிழ்த்துவிட்டிருக்கும் வன்முறைகள். உலகில் பல நாடுகளில் இன்றும் குறுகிய அரசியல் சிந்தனை மேலாதிக்கம் கொண்ட வர்க்கத்தின் பிடிக்குள் பல சிறுபான்மை இனங்கள் சிக்கித்தவிக்கும் துர்பாக்கியம் தொடர்வதற்கு தற்போது மியான்மார் ரோஹிங்கியர்களை விட வேறு வேறு சாட்சியங்கள் தேவையில்லை.

இன்று பல வல்லாதிக்க நாடுகள் கடந்துபோன பல மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தூசிதட்டிப் பார்க்கமுனையும் நிலையில் பக்கத்தில் கடந்து கொண்டிருக்கும் அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் மௌனித்து வேடிக்கை பார்க்கிறது. நடந்து முடிந்தவை பற்றி பேசிக்கொள்ளும் நாடுகள் நடந்து கொண்டிருப்பவை பற்றி வாய்மூடி மௌனியாக இருப்பதற்கு காரணம் நாடுகளுக்கு இடையிலான வல்லாதிக்கப் போட்டியும் தமது பொருளாதார நலன்களுமே.

இந்த நலன்களுக்காக வளர்முக நாடுகளில் இடம்பெறும் அரச வன்முறைகளின் ஊக்கிவிப்பாளர்களாக வல்லாதிக்க நாடுகள் செயற்படத் தயங்குவதில்லை. ஈழத்தில் விடுதலைப் போராட்டம் நசுக்கப்பட்டு எவ்வாறு சிறுபான்மை தமிழர்களின் உரிமைகள் பறிக்கப் படுகின்றனவோ அதே நிலை இன்று ரோஹிங்கிய சிறுபான்மை மக்கள் மியான்மார் நாட்டில் சந்தித்துக் கொண்டிருகின்றனர். பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் என்ற போர்வையில் அப்பாவித் தமிழர்கள் மீது எவ்வாறு அடக்குமுறை-றகள் கட்டவிழ்த்து விடப்பட்டனவோ அவ்வாறான துயரநிலையை மியான்மர் சிறுபான்மை முஸ்லிம்கள் முகம்கொடுகின்றனர்.

இரு இனங்களுமே பௌத்த மேலாதிக்கத்தின் இனத்து வேசத்தால் அழிக்கப் பட்டுள்ளமை நோக்கப்படவேண்டும்.

தன்னை மனித உரிமை செயற்பாட்டாளராக உலகுக்கு காட்டிக்கொண்ட மியான்மாரின் ஆங் சாங் சூகியின் கட்சி ஆட்சி செய்யும் நிலையில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் குறித்து அத்தனை மனித உரிமை ஆர்வலர்களும் அதிர்ச்சி வெளியிட்டுள்ளனர். எவ்வாறு ஈழத்தமிழர்கள் விரட்டியடிக்கப் பட்டார்களோ அவ்வாறான துர்ப்பாக்கியத்தோடு பௌத்த மேலாதிக்கத்தின் பிடியில் சிக்கி சின்னாபின்னமாகிறது ரோஹிங்கியா இனம்.

கடந்த 10 நாட்களில் மட்டும் 90 ஆயிரம் பேர் வரை நாட்டை விட்டு வெளியேறி அயல்நாடான பங்களாதேஷில் தஞ்சமடைந்துள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது. ஈழத்தில் காணப்பட்ட தமிழர்களின் விகிதாசாரத்தை ஒத்ததாகவே மியன்மாரில் 10 இலட்சத்திற்கும் அதிகமான ரோஹிங்கியா முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். ஆனாலும் மியன்மார் பெரும்பான்மைக் குடிகள் இவர்கள் வந்தேறு குடிகள் இவர்களுக்கு சொந்த நாடு கிடையாது என்ற மேலாதிக்க சிந்தனையோடு செயற்படுகின்றமை இவர்கள் மீதான அடக்குமுறைகளும் வன்முறைகளும் கட்டுமீறித் தொடரக் காரணமாக காணப்படுகின்றது. பங்களாதேஷில் இருந்து சட்ட விரோதமாக மியன்மாருக்குள் வந்தவர்களே ரோஹங்கியா முஸ்லிம் என்ற பரப்புரையில் வெளிப்படையாகவே மியன்மார் அரசு அரசு கூறிவருவது இவர்கள் மீதான பிரச்சினைகள் முற்றுப்பெறுவதற்கு வாய்ப்பில்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றது. அது மட்டுமின்றி 35 வருடங்களுக்கு முன்னரே இவர்களின் வாக்குரிமையை அரசு பறித்துக் கொண்டமை கொடுமையின் உச்சம். ஈழத்தில் தமிழர்கள் மீது கடந்த முப்பது வருடத்துக்கு மேலாக தொடர்ந்த அடக்குமுறைகளின் பாணியில், மியான்மாரில் ரோஹிங்கியர்கள் இனச்சுத்திகரிப்பு செய்யப்படுகின்றது. இவர்களுக்காக சுதந்திரம் கோரிப் போராடுவதற்கான அமைப்புக்கள் எவையும் இல்லாமையால் பல துயரங்கள் ஈழத்தில் முள்ளிவாய்க்கால் யுத்தத்துக்குள் புதைக்கப்பட்டதைப் போல் புதைந்து போயின. மியான்மாரில் காலம் காலமாக முஸ்லிம்கள் மீதான அடக்குமுறைகள் இடம்பெற்றுவந்தாலும் 2012 ஆம் ஆண்டு ராக்கைன என்ற இடத்தில் முதன்முதலாக வெளிப்படையாக பௌத்தர்களுக்கும் ரோஹிங்கியா முஸ்லிம்களுக்கும் இடையே. வன்முறை வெடித்தது. இதன் தொடர்ச்சியாக இன்றுவரை ரோஹிங்கியர்களின் வாழ்க்கை ஈழத்தமிழர்களின் வாழ்வியலை போன்று இரவு பகலாக நிம்மதி தேடி ஓடிக்கொண்டே இருக்கின்றனர்.

ஈழத்தில் சிங்கள பௌத்தர்கள் எவ்வாறு தமிழர்களின் நிலவுரிமை முதல் வாழும் உரிமை வரை மறுத்தார்களோ அதற்கும் மேலாக ரோஹிங்கியா முஸ்லிம்களை மியன்மார் குடிமக்களாக அங்கீகரிக்கக்கூடாது என மியான்மார் பௌத்த தேசியவாதிகள் வலியுறுத்தி வருகிறார்கள். தற்போது மியன்மாரில் ரோஹிங்கியா முஸ்லிம்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் வன்முறைகள் அதிரித்து அம்மக்களை சொந்த இடங்களில் இருந்து விரட்டியடிக்கும் மியான்மார் அரசின் நடவடிக்கைகள் கட்டுமீறிப்

(18 ஆம் பக்கம் பார்க்க)

ஜெ—ஜெ



# ஈழத்துக் கிராமங்களும் மண் வாசனையும்

(தொடர் 03)



# வல்லிபுரம்

ஒரு இனத்தின் வரலாற்று உண்மைகளையும், பண்பாட்டுச் செய்திகளையும், புதைபொருட்களும், கல்வெட்டுக்களும், செப்பேடுகளும், நாணயங்களும், மண்பாண்டங்களும், இலக்கியங்களும், எடுத்துரைப்பது போன்று இடப்பெயர்களும் அதனுடன் இணைந்த கர்ணபரம்பரைக் கதைகளும் வரலாற்று ஆய்வுக்கு உறுதுணை புரிகின்றன. இதற்கேற்றாற்போல் வட இலங்கையில் தமிழர் வரலாற்றின் திறவுகோலாக முன்னாள் பெரும் தலை நகரமும், இந்நாள் சிறு கிராமமுமாக இருக்கின்ற வல்லிபுரத்தின் வரலாறு அமையப் பெறுகின்றது. காலங்கள் கரைந்து சென்றாலும் கனத்த வரலாற்றுப் பழமைகள் நிறைந்தன.

வல்லிபுரத்தின் பழம்பெருமைமிக்க வரலாற்று வாசனைக் கர்ணபரம்பரைக் கதைகளையும் வரலாற்றேடுகளில் மறைக்கப்பட்ட தகவல்களையும் கொண்டதாகவுள்ளது. ஆயினும் தன்னிருப்பிலும், சமயம், பண்பாடு, கலைகளிலும் என்றும் அழியாத மிடுக்குடன் நிலைபெற்றிருக்கின்ற பகுதியாக இதனைக் கூறுவதே மிகவும் பொருத்தமானதெனலாம்.

வல்லிபுரம் என்ற பெயர் இக்கிராமத்திற்கு எவ்வாறு ஏற்பட்டது என்பது பற்றிப் பலவிதமான செய்திகள் கூறப்பட்டுள்ளன. அந்த வகையில் யாழ்ப்பாண நகரைப் பரிசாகப் பெற்ற யாழ்பாடியுடன் வந்த தேவர் குலத்தவர்களில் ஒருவரான வல்லினத் தேவன் (வல்லியத்தேவன்) என்பவனால் ஆளப்பட்ட பகுதியாக இது அமையப்பெற்றதால் அவனது பெயருடன் இணைந்த வகையில் இக்கிராமத்திற்கு 'வல்லிபுரம்' எனப் பெயரிடப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

'வல்லி' என்ற சொல்லுக்கு ஆயர்பாடி என்ற கருத்தும் 'புரம்' என்றால் கோவில் என்றும் பொருள் கொள்ள முடியும். எனவே வல்லிபுரம் என்பது ஆயர்பாடிக் கோவிலாகவும், கண்ணன் வளர்ந்த இடமாகவும் கொள்ளப்படுகின்றது. ஆதலால்தான் இந்து மதத்தின் வைணவப் பாரம்பரியம் நிறைந்த மண்வாசனை இங்கு வீசுகின்றது என எண்ணத் தோன்றுகிறது. அதற்கேற்றாற்போல் இங்குள்ள வல்லிபுரத்தாழ்வார் கோவிலில் திருமண்ணை (நாமம்) அடியார்கள் தரித்துக் கொள்வதனைச் சிறப்பாகச் சுட்டிக் காட்டலாம்.

மேலும் ஐதீகக் கதைகளின்படி இங்கு வல்லிபுர ஆழ்வார் கோவில் தீர்த்த உற்சவம் நடைபெறும் வங்கக் கடல் பகுதியில் அதிசயமான மீனொன்று (மச்சம்) துள்ளிக் குதித்தது. இதனைப் பிடிப்பதற்குக் கற்கோவளம் பகுதியில் கடற்றொழிலாளிகள் முயன்று தோற்றுப் போயினர். இவ்வேளை வராத்துப் பளையைச் சேர்ந்த நாகசாபத்தினால் குழந்தைப் பாக்கியத்தை இழந்த லவல்லி என்ற வல்லிநாச்சி பயபக்தியுடன் நீண்ட காலம் தவமிருந்து வந்தாள். அவளிற்குக் கனவில் தோன்றிய பகவான் மேற்படி கடற்பகுதிக்கு வருமாறு பணித்தார். மறு நாள் காலையில் அப்பெண்ணும் அங்கு சென்று கரையில் அமர்ந்து திருமாலின் நாமங்களை உச்சரித்துக் கொண்டிருக்க அந்த அதிசய மச்சம் அவளின் மடியில் துள்ளிக் குதித்து விழுந்து அழகிய குழந்தையாக மாறியதென்றும், இதனையடுத்து ஆரவாரம் கொண்ட மக்கள் லவல்லியையும் குழந்தையும் பல்லக்கில் வைத்துச் சுமந்து வந்த போது சுமந்து வந்தோர் களைப்பின் காரணத்தால் ஓர் இடத்தில் பல்லக்கை வைத்து விட்டு நீர் இருந்தச் சென்றுவிட்டு திரும்பி வந்தபோது பல்லக்கில் இருந்த அதிசயக் குழந்தை ஒரு சக்கரத்தை லவல்லியிடம் கொடுத்துவிட்டு மறைந்தது. அதனைத் தொடர்ந்து அச்சக்கரத்தை வைத்து மக்கள் பூசிக்கத் தொடங்கினர் என ஒரு வகையான செய்தியமைப் பெறுகின்றது. இவை வல்லிபுரத்தின் வைணவ மத நம்பிக்கையுடன் கூடிய மண்வாசனையினையே புலப்படுத்துவதா கவுள்ளது.

வல்லிபுரமானது வரலாற்றுப் பழமைமிக்க பகுதியாக அடையாளப் படுத்தப்பட்ட மையை அடுத்து 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கைத் தமிழர் பற்றியும், தமிழ் அரசின் தோற்றம் பற்றியும் ஆய்வு மேற்கொண்ட முதலியார் இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர் முதலானோர் கந்தரோடையை அடுத்து முக்கிய வரலாற்றுப் பிரதேசமாக வல்லிபுரத்தை எடுத்துக் காட்டியுள்ளனர். மேலும், சோழர் வருகையுடன் வடஇலங்கையில் உருவான புதிய தலைநகரான 'சிங்கை' வல்லிபுரத்தில் இருந்ததாகவும் இவர்கள் குறிப்பிட்டிருப்பதும் வல்லிபுரமானது வடபகுதியில் தமிழரசின் உருவாக்கத்தில் வகுத்திருந்த முக்கியத்துவம் தெரிகின்றதெனலாம்.

இலங்கையின் புராதன குடியிருப்பு மையங்களில் வல்லிபுரமும் ஒன்று என்பதனை அங்கு கண்டெடுக்கப் பட்ட புராதன மட்பாண்டங்கள், அச்சுக்குத்தப்பட்ட நாணயங்கள், மற்றும் சாதவாகன உரோமர் கால நாணயங்கள் என்பன உறுதிப் படுத்துகின்றன. இவை இப்பகுதி இலங்கையின் ஏனைய பிராந்தியங்களுடனும், அயல் நாடுகளுடனும் கொண்டிருந்த தொடர்புகளினையே காட்டுகின்றது.

வல்லிபுர ஆழ்வார் கோவிலுக் குரிய நிலத்தில் பழைய கட்டடத்தின் அழிபாடுகளுக்கிடையில் 1936 ஆம் ஆண்டளவில் வல்லிபுரப் பொற்சாசனம் கண்டெடுக்கப்பட்டது. நான்கு வரிகளைக் கொண்ட இச்சாசனம் பிராமி எழுத்துக்களில் எழுதப் பட்டுள்ளது. இலங்கையில் இதுவரை கிடைத்த ஒரேயொரு பொற்சாசனம் என்றவகையில் இது முக்கியத்துவம் பெறுகின்றது. 3 x 1 அங்குல நீள அகலமும் 69.5 கிராம் எடையும் கொண்டது. இதனை கி.பி 2ஆம் நூற்றாண்டிற்குரியதென போராசிரியர் பரணவிதாரன என்ற வரலாற்றாசிரியர்கூறியுள்ளார். இச்சாசனத்தின்படி அனுராதபுரத்தை ஆண்ட வசபன் என்ற மன்னனின் பிரதிநிதியான இஸிகிரயெ என்பவன் இப்பகுதியை நிர்வகித்து வந்திருப்பது தெரியவருகின்றது. அதே சமயம் வல்லிபுரத்திலிருந்த பௌத்த விகாரைக்கும் (தமிழ் பௌத்த விகாரை) ஆந்திர நாட்டிற்கும் உள்ள தொடர்புகளும் இச்சாசனத்தினூடாக ஓரளவு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இந்தியாவின் ஆந்திரப் பகுதியில் ஆட்சி நடத்தியிருந்த சாதவாகன மன்னர்கள் சிவன், கிருஷ்ணர் போன்ற இந்துக்கடவுள்களை வழிபாடாற்றுகின்ற இந்துக்களாக இருந்துள்ளனர். இதற்கேற்றாற் போல் பல வேள்வி, யாகங்களையும் இம்மன்னர்கள் ஆற்றியிருப்பது தெரியவருகின்றது. அதேவேளை இந்துமத வழிபாடுகளுடன் தொடர்புடைய பௌத்தத்தின் மகாயான பௌத்தப் பிரிவையும் இவர்கள் ஆதரித்துள்ளார்கள். இவர்களுக்கும், வல்லிபுரத்திலிருந்தவர்களுக்கும் கலை, சமய பொருளாதாரத் தொடர்புகள் காணப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக வல்லிபுரத்தில் பொற்சாசனம் கண்டெடுக்கப்பட்ட இடத்தில் 8அடி உயரமான புத்தர் சிலையும் கண்டெடுக்கப் பட்டது. இது ஆந்திரர்களது கலைமரபினையே முழுமையாகப் பிரதிபலிக்கின்றது.

இன்னொருவகையில் நோக்கினால் இலங்கையில் பௌத்த மத அறிமுகம் மற்றும் வளர்ச்சிப் போக்கில் இலங்கையின் வட பகுதியில் அமைந்திருந்த துறைமுகப் பட்டினங்களது பங்களிப்பு முக்கியமானது. ஆனால் இதனை பாளி, சிங்கள இலக்கியங்கள் மதத்தை இனத்தின் அடையாளமாக முதன்மைப் படுத்தியமையில் தெளிவுறக் கூறாதுவிட்டுள்ளமை வேதனைக்குரியதே.

வல்லிபுரக் கோயிலின் வடக்கு வீதி பல்வேறு கலை நிகழ்வுகளுக்காகப் பெயர் பெற்றது. குறிப்பாக விழாக்காலங்களில் கற்கோவளப் பெண்கள் வல்லிபுரக்கோயிலில் இரவிரவாகக் கும்மியடித்தபின் விடியற்காலைப் பொழுதில் வடக்கு வீதியில் கும்மியடிப்பர். இதனால் வல்லிபுரக் கோவிலின் வடக்குத் தெருவை 'கும்மித் தெரு' என்று அழைக்கும் வழக்கமுள்ளது. கும்மியடித்ததுடன், குடமூதல், பாம்பாட்டமும் இடம் பெறுவதுண்டு. மேலும் மரபுக் கதைகளுக்கமைய நாகசாபத்தால் குழந்தைப் பாக்கியத்தை இழந்த லவல்லி என்ற பெண் தவமிருந்து இறுதியில் அவளுக்குப் பகவான் அருளிய வரத்தைத் தொடர்ந்து குழந்தைப் பேறு இல்லாதோர் குழந்தைப் பேறு வேண்டி 'தொட்டில்' செய்து இங்குள்ள மரமொன்றில் தொங்கவிடும் வழக்கமுள்ளது. இதனையடுத்து பிள்ளைப் பாக்கியம் கிடைக்கும் என்ற நம்பிக்கை காணப்படுவதையும் அவதானிக்க முடிகிறது. இவ்வாறாகத் தமிழ், இந்து நெறி தழுவிய கலை, கலாசார, பண்பாட்டு மணம்மிக்க மண்வாசனை மிகுந்த புனித தேசமாக வல்லிபுரம் திகழ்ந்து வருகிறது.

# வாரப்பலன்

### மேடம்
பிள்ளைகள் அனுசரணையாக இருப்பர், அரச விடயங்கள் நன்மையாக முடியும், புதுமணத் தம்பதிகள் குழந்தை பாக்கியம் கிட்டும், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**துர்க்கையை வழிபடுங்கள்**

### துலாம்
சுப செய்திகள் கிட்டும், மாமன் வகை உறவால் மகிழ்ச்சி, நல்ல தொழில் கிடைக்கும், வியாபாரத்தில் இலாபம் கிடைக்கும், குடும்பத்தில் கோபதாபங்கள் காட்ட வேண்டாம்.

**சர்வேஸ்வரனை வணங்குங்கள்.**

### ரிஷபம்
தாயாரின் உடல் நலம் சீராகும். சொத்து சம்பந்தமாக ஒருமித்த கருத்து ஏற்படும்,கடல் கடந்து செல்லும் வாய்ப்பு கிட்டும், புதிய வாகனம் வாங்குவீர்கள், வியாபாரம் செழிப்படையும்.

**அம்மனை வழிபடுங்கள்.**

### விருச்சிகம்
சொத்துக்கள் சம்பந்தமாக நல்ல முடிவுகள் வரும், இடமாற்றம் எதிர்பார்த்தவர்களுக்கு நல்ல தகவல்கள் கிடைக்கும், தொழில் விருத்தியாகும்.

**சனீஸ்வரனை வணங்குங்கள்**

### மிதுனம்
திருமண விடயத்தில் முக்கிய முடிவு எடுப்பீர்கள், கொடுக்கல் வாங்கலில் நின்றுபோன தொகை வசூலாகும், பொன், ஆன்மிக சுற்றுலா செல்லும் வாய்ப்பு கிடைக்கும், பரிசு செலவுகள் வரும்.

**சிவனை வழிபடுங்கள்.**

### தனுசு
தந்தையிடம் இருந்து உதவி கிடைக்கும், வழக்கில் தடைகள் விலகும்,கண்களில் உபாதைகள் ஏற்படலாம், கொடுக்கல் வாங்களில் பிரச்சினைகள் ஏற்படலாம்.

**வைரவரை வழிபடுங்கள்.**

### கடகம்
மனைவியின் ஆசையை நிறைவேற்றுவீர்கள், வியாபாரம் சீராக இருக்கும், கையில் காசு, பணம் புரளும், புதிய வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு நல்லெ செய்தி வரும்.

**அம்மனை வழிபடுங்கள்.**

### மகரம்
நீண்ட நாள் பிரச்சினைகளுக்கு முடிவு ஏற்படும், புதிய சொத்துக்கள் வாங்குவீர்கள், வியாபாரம் ஸ்திரமாக இருக்கும், ஏதையாவது நினைத்து மனதைக் குழப்பவீர்கள்.

**நவகிரகங்களை வழிபடுங்கள்.**

### சிம்மம்
சகோதரர்களால் நன்மை, வழக்கில் ஏற்பட்ட தடைகள் நீங்கும், உத்தியோகத்தில் சாதகமான நிலை இருக்கும், வேலைச் சுமை குறையும், பேச்சில் கவனம் தேவை.

**ஆஞ்சநேயரை வழிபடுங்கள்.**

### கும்பம்
கையில் பணப் புழக்கம் அதிகரிக்கும், உத்தியோகத்தில் சாதகம் ஏற்படும், அலைச்சல், பயணங்கள், வீண் செலவுகள் இருக்கும். தாயாரால் மருத்துவச் செலவுகள் ஏற்படும்.

**விஸ்ணுவை வழிபடுங்கள்.**

### கன்னி
சுபநிகழ்ச்சிகளுக்கு அச்சாரம் போடுவீர்கள், மகனிடமிருந்து உதவிகள் கிடைக்கும், புதுத் தம்பதியருக்கு குழந்தைப் பாக்கியம் கிட்டும், பழைய பாக்கிகள் வசூலாகும்.

**விநாயகரை வழிபடுங்கள்.**

### மீனம்
எதிர்ப்புக்கள் நீங்கும், வராத பணம் வசூலாகும், பெண்கள் தங்க நகைகள் வாங்குவார்கள், கர்ப்பமாக இருப்பவர்கள் கவனமாக இருக்க வேண்டும்.

**அம்மனை வழிபடுங்கள்.**



சி.க.செந்திவேல் எழுதிய 'வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை' நூல் வெளியீட்டு விழா கடந்த 3ஆம் திகதி மாலை யாழ். நிம்மர் மண்டபத்தில் இடம்பெற்றபோது...



தெரிவு செய்யப்பட்ட முன்னாள் போராளிகளின் மருத்துவ தேவைக்காக நிதி உதவி வழங்கும் நிகழ்வு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி பணிமனையில் இடம்பெற்றபோது...





முன்னாள் எதிர்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்தின் 90வது பிறந்தநாள் நினைவுப்பேருரையும் "இலட்சிய இதயங்களோடு" எனும் நூல் வெளியீட்டு விழாவும் கடந்த 3ஆம் திகதி யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோது...






மாந்தை - மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் மூன்றாம் பிட்டி கிராமத்தில் "மறை கலை நிகழ்வுகள்" கடந்த 3ஆம் திகதி இடம்பெற்றபோது...

# குட்டீஸ்...!



உங்களின் படைப்புகள் அனைத்தும் புதுவிதியில் பிரசுரமாக வேண்டுமா? உடன் எழுதி அனுப்புங்கள்.

puthuvithi@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கும் உங்கள் படைப்புகளை அனுப்பி வைக்க முடியும்.



# குரங்கும் வண்ணத்துப்பூச்சியும்

காட்டில் பல வண்ணப் பூக்கள் பூத்துக் குலுங்கின. தேனீக்களும் வண்ணத்துப் பூச்சிகளும் பூத்தேனைச் சுவைப்பதில் தீவிரமாக இருந்தன. இந்தக் காட்சிகளை ரசித்துக்கொண்டே வந்தது ஒரு குரங்கு.

திடீரென்று மஞ்சள் வண்ண இறக்கைகளோடு ஒரு பெரிய வண்ணத் துப்பூச்சி குரங்கின் அருகில் இருந்த செடியில் அமர்ந்தது. 'அடடா! இவ்வளவு அழகான வண்ணத்துப் பூச்சியை நான் இதுவரை பார்த்த தில்லை!' என்று நினைத்த குரங்கு, அடுத்த நொடி வண்ணத்துப்பூச்சியைப் பிடித்தது.

பயந்துபோன வண்ணத்துப்பூச்சி, வேகமாக இறக்கைகளை அடித்துப் பறக்க முயன்றது. அப்போது அதன் இறக்கையில் ஒன்று, இரண்டாகக் கிழிந்துவிட்டது. வலியால் துடித்த வண்ணத்துப் பூச்சியைக் கண்டு குரங்குக்கு வருத்தமாகிவிட்டது.

"நான் உன்னைத் துன்புறுத்தும் நோக்கத்தில் பிடிக்கவில்லை. உன்னை அருகில் பார்க்க வேண்டும் என்பதற்காக யோசிக்காமல் பிடித்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு" என்று கெஞ்சியது.

"உன்னை மன்னித்தால் கிழிந்த என் இறக்கை மீண்டும் ஒட்டி விடுமா? இனி நான் வாழ்நாள் முழுவதும் பறக்க முடியாதா? அப்படியென்றால் உணவு சேகரிக்கவும் முடியாது. இனி என் வாழ்க்கை அவ்வளவுதான்" என்று கோபத்தில் படபடத்தது வண்ணத்துப் பூச்சி.

"மன்னிக்க முடியாத செயலை நான் செய்து விட்டேன். உன்னை மீண்டும் பறக்க வைக்க ஏதாவது செய்கிறேன். அதுவரை இந்தச் செடியிலேயே அமர்ந்திரு. எங்கேயும் போய்விடாதே" என்றது குரங்கு.

"என்னால் எங்கே போக முடியும்? இங்கேதான் இருப்பேன்" என்றது வண்ணத்துப்பூச்சி. ரீங்காரக் குரல் எழுப்பியபடி வந்துகொண்டிருந்த ஒரு தேனீயைப் பார்த்தது குரங்கு. "தேனீ, எனக்கு ஒரு உதவி வேண்டும். சிறிது நேரத்துக்கு உன்னுடைய தேன் உறிஞ்சும் ஊசியை எனக்குக் கொடுக்க முடியுமா?"

"உன் கிட்ட கொடுத்துட்டு நான் என்ன செய்வது? என்னால் ஒரு நொடி கூட வேலை செய்யா-மல் இருக்க முடியாது."

"வண்ணத்-துப்பூச்சியின் இறக்கையைத் தைத்த உடனே திருப்பிக் கொடுத்து விடுவேன்." நீ தையல் சிட்டு விடம் கேள். அதுதான் அழகாகத் தைக்கும்" என்று பறந்தது தேனீ. வழியில் சிலந்தியைக் கண்டவுடன், நூல் வாங்கிவிட முடிவெடுத்த குரங்கு, தன்னுடைய தேவையைச் சொன்னது. சிறிது நூலைக் கொடுத்த சிலந்தி, "ஊசிக்கு என்ன செய்வாய்?" என்று கேட்டது. "தையல் சிட்டுவிடம் நூலைக் கொடுத்தால் கிழிந்த இறக்கையைத் தைத்துவிடும்" என்று சொன்ன குரங்கு, தீவிரமாகத் தைப்பதில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தையல் சிட்டுவிடம் வந்தது. தனக்கு உதவும்படிக் கேட்டது.

"நான் இலைகளைத்தான் தைப்பேன். வண்ணத்துப்பூச்சியின் இறக்கையோ மிகவும் மென்மையானது. நான் தைத்தால் இன்னும் மோசமாகக் கிழிந்துவிடலாம். ஒரு செயலைச் செய்துவிட்டு வருந்துவதற்குப் பதில், அந்தச் செயலைச் செய்யாமல் இருப்பதே நல்லது" என்று அறிவுரையும் வழங்கிவிட்டு, தைக்க ஆரம்பித்தது தையல் சிட்டு. குரங்குக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. வருத்தத்துடன் அப்படியே உட்கார்ந்துவிட்டது.

வீடு கட்டுவதற்காக மரத்தைக் கொத்திக் கொண்டிருந்த ஒரு மரங்கொத்தி, திரும்பிப் பார்த்தது. விசயம் என்னவென்று கேட்டுத் தெரிந்து கொண்டது.

"வடக்கு பக்கம் இருக்கும் ஒரு கருவேல மரத்தில் பிசின் வடிந்து கொண்டிருக்கிறது. நீ அந்தப் பிசினை எடுத்து கிழிந்த இறக்கையை ஒட்டிவிடு. தைக்கும் யோசனையை விட ஒட்டும் யோசனை நல்ல பயனை அளிக்கும். வண்ணத்துப் பூச்சியும் பழையபடி பறக்க ஆரம்பிக்கும்" என்றது மரங்கொத்தி.

"நன்றி மரங்கொத்தி. ஆனால் இந்த இருளில் நான் எப்படிக் கருவேல மரத்தைக் கண்டுபிடிப்பேன்?"

"மின்மினிகளே இந்தக் குரங்கண்ணாவுக்கு உங்கள் உதவி தேவை. கொஞ்சம் வெளிச்சம் கொடுத்து விட்டு வாருங்கள்" என்றதும் மின்மினிகள் மகிழ்ச்சியோடு கிளம்பின.

பிசினை எடுத்துக்கொண்டு, வண்ணத் துப்பூச்சி இருந்த செடிக்கு வந்தது குரங்கு. கிழிந்த இறகுகளைச் சேர்த்துப் பசையால் தடவியது. சிறிது நேரத்தில் பசை காய்ந்து, இறகு பழையபடி ஒட்டிக்கொண்டது.


வண்ணத்துப்பூச்சி மெதுவாக இறக்கையை அசைத்துப் பார்த்தது. பிறகு வேகமாக அடித்துப் பார்த்தது. சட்டென்று ஒரு சுற்றுச் சுற்றி வந்து உட்கார்ந்தது. குரங்குக்கு நிம்மதியாக இருந்தது.

"வெளிச்சம் கொடுத்த மின்மினிகளுக்கும், இந்த யோசனை வழங்கிய மரங் கொத்திக்கும் என் நன்றியைத் தெரிவித் துக்கொள்கிறேன். வலியில் உன்னைத் திட்டிவிட்டேன். என்னைத் துன்புறுத்தும் நோக்கம் இன்றி, விபத்தாக நடந்த இந்த நிகழ்வை நினைத்து நீ வருந்தவேண்டாம். உன்னுடைய அன்புக்கும் உதவி செய்யும் எண்ணத்துக்கும் நன்றி. என்னைத் தேடுவார்கள். நான் வருகிறேன்" என்று வேகமாகப் பறந்து சென்றது வண்ணத்துப்பூச்சி.

## தகவல் அறிவோம்...!

கடல் வாழ் உயிரினங்கள், தாவரங்களில் பெரும்பாலானவை சுமார் 60 அடி ஆழத்துக்குள்தான் வசிக்கின்றன. கடலில் 200 மீற்றர் ஆழம் வரையே சூரிய ஒளி ஊடுருவிச் செல்லும். இதனால் அதுவரைதான் வெளிச்சமும் இருக்கும். எனினும் சுமார் ஆயிரம் மீற்றர் வரை மங்கலான நீல ஒளி இருக்கும். அதன்கீழ் இருட்டு மட்டுமே ஆட்சி செய்கிறது. கடலின் இருள் பகுதிக்குள் உயிரினங்கள் இருக்காது என முன்னர் கருதப்பட்டது. ஆனால் உலகின் மிக ஆழமான கடலான பசுபிக் சமுத்திரத்தின் மரியான ஆழியின் அடியில் மூழ்குதளம் பயணிக்கும் வரைதான் இந்த கருதுகோள் இருந்தது. மூழ்குதளத்தின் கண்ணாடி வழியே இருட்டுப் பகுதியிலும் மீன்கள் வசிப்பதை ஆய்வாளர்கள் கண்டனர். இருட்டில் வாழ்வதால் இந்த மீன்கள் அவலட்சணமான உருவத்தைக் கொண்டுள்ளன. அத்துடன் தனது உடலில் ஒளியை உருவாக்கும் சக்தியும் அவற்றுக்கு உண்டு. உணவை கவர்வதற்காகவும், தன்னை நெருங்காதே என எச்சரிக்கவுமே இவை தமது உடலில் ஒளியை உருவாக்குகின்றன என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஆழ்கடலில் உணவு இல்லை என்பதால் மேல் மட்டத்தில் இறந்து அடி ஆழத்துக்கு செல்லும் உயிரினங்களின் உடல்களை இவை உணவாக உட்கொள்கின்றன. இந்த மீன்கள் ஒருபோதும் மேல் மட்டத்துக்கு வருவதில்லை. அதுபோல் மேல் மட்டத்தில் வசிக்கும் உயிரினங்களும் இவ்வளவு ஆழத்துக்கு இறங்குவதில்லை என ஆய்வுகள் கூறுகின்றன.



## உங்களுக்குத் தெரியுமா?

உலகில் ஒரு நிமிடத்தில் எத்தனையோ விடயங்கள் நடந்தேறி விடுகின்றன. இதுபோல் இணைய உலகில் என்ன நடக்கிறது எனப் பார்க்கலாமா?


இணைய உலகின் முதல் நிலை தேடு பொறியான கூகுள் 6 இலட்சத்து 94 ஆயிரத்து 445 விசாரணைகளுக்கப் பதில் அளித்து விடுகிறது. 16 கோடியே 80 இலட்சம் ஈ -மெயில்கள் அனுப்பப்படுகின்றன.

முகப்புத்தகத்தில் 5 இலட்சத்து 10 ஆயிரத்து 40 கருத்துக்கள் பதிவிடப்படுகின்றன.

25 மணி நேரம் ஓடக்கூடிய 600 வீடியோக் கிளிப்கள் யூ - ரியூப் தளத்தில் தரவேற்றம் செய்யப்படுகின்றன.

ஸ்கைப் தளத்தின் ஊடாக 3 இலட்சத்து 70 ஆயிரம் நிமிடங்களுக்கான குரல் அழைப்புகள் பகிரப்படுகின்றன.

# இன்றைய அரசியலுடன் பொருந்தும் மகாபாரதத்தின் மூன்று கதைகள்




மகாபாரதம் நடந்து முடிந்து ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் அதன் கதாபாத்திரங்கள் கால வெள்ளத்தில் அழியாமல் உயிர்ச்சித்திரங்களாக இன்றும் இருக்கின்றன. பெயர்கள்தான் வேறாக இருக்கும் என்பார்கள். அதை நிரூபிக்கும் விதத்தில் அதில் சொல்லப்பட்ட கருத்துக்கள் இன்றைய அரசியலுடன் பொருந்திப் போகின்றன. அக்கதை களைப் பார்ப்போம்.

**கதை:1**

பாண்டவர்கள் வனவாசம் செய்து கொண்டிருந்த நேரம். சுபத்திரையின் வளைகாப்பு பாண்டவர்கள் வசித்த காட்டில் நடக்கிறது. அரண்மனை என்றால், ஊரே விழாக் கோலம் பூண்டிருக்கும். இதுவோ காடு. பெரிதாக எவரும் இல்லை. அத்தனை தடபுடலாகவும் இல்லை. கண்ணீருடன் சிவ வழிபாட்டில் இருந்த சுபத்திரைக்கு குந்திதேவி ஆறுதல் சொல்கிறார். 'எனது பிள்ளைகளை மிஞ்சும் பராக்கிரமசாலிகள் இந்த உலகில் இல்லை. ஆனாலும், அவர்கள் விதியின் சூழ்ச்சியால் மரவுரி தரித்து பரதேசிகளைப்போல் இந்த வனத்தில் சுற்றித் திரிகிறார்கள். திறமை வாய்ந்த பிள்ளைகள் வேண்டுமென கேட்டேனே தவிர, யோகமான பிள்ளைகள் வேண்டும் என நான் கேட்க மறந்துவிட்டேன். நான் வாங்கிய வரம் அப்படி. அதனால் கால் காசு யோகமுள்ள பிள்ளைகள் வேண்டும் கேள்" என்று கூறுகிறார். அதுபோல் ஒருவருக்கு எத்தனை திறமைகள் இருந்தாலும், அவருக்கு யோகம் இருந்தால்தான் அது வெற்றியாக மாறும்.

**கதை : 2**

யுத்தம் முடிந்து, தர்மர்அரச நிர்வகித்துக் கொண்டிருக்கிறார். அன்றைய தினம் அவருக்கு முன்பாக வழக்கு ஒன்று வந்திருந்தது.

வழக்கின் சாராம்சம் இதுதான்... பொம்மன், திம்மனிடம் தனது 10 ஏக்கர் நிலத்தை விற்றுவிட்டான். அதை வாங்கிய திம்மன் ஏர் பூட்டி நிலத்தை உழுது கொண்டிருக்க தங்கக் காசுகள் நிறைந்த பானையொன்று கிடைத்தது. அதை எடுத்துச்சென்று பொம்மனிடம் கொடுத்து, 'இது நீங்கள் எனக்கு விற்ற நிலத்தில் கிடைத்தது. அதனால், இது உனக்கே சொந்தம் நீயே வைத்துக்கொள்' என்றான். ஆனால், பொம்மனோ, 'இது நான் உனக்கு விற்றுவிட்ட நிலம். அதில் என்ன கிடைத்தாலும் அது உனக்குதான் சொந்தம். எனவே நீயே வைத்துக்கொள்" என்றான்.

இருவருமே அதை பெறாமல் பிடிவாதம் பிடித்தனர். 'சரி, நம் தர்ம மகாராஜாவையே கேட்போம்' எனப் புறப்பட்டு அஸ்தினாபுரம் வந்து தங்கள் வழக்கைக் கூறினர்.

இருவரிடமும் தர்மர் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் இருவருமே புதையலை எடுத்துச் செல்ல மறுத்து விட்டனர். 'அதனால் தர்மர், 'சரி, நீங்கள் இருவரும் இன்று போய் நாளை வாருங்கள். உங்கள் வழக்கில் நல்லத் தீர்ப்பைச் சொல்கிறேன்" என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

பொழுது புலர்ந்தது. மறுநாள் சபையும் கூடியது. வரும்போதே பொம்மனும் திம்மனும் தனித்தனியா-கவே வந்தனர். இருவரும் பரஸ்பரம் பேசிக்கொள்ளவும் இல்லை. ரொம்பவும் மௌனமாக இருவரும் இருந்தனர். தர்மர் தனது பரிவாரங் களுடன் வந்து சபையில் அமர்ந்தார். பொம்மன், 'நேற்று நடந்ததை கெட்ட கனவாக மறந்திடுங்கள். நிலம் என் மூதாதையரின் சொத்து. எனவே, அந்த நிலத்தில் கிடைத்த புதையல் எனக்குத்தான் சொந்தம்' என்றான். 'என்று ஒரு பொருளை அடுத்தவருக்கு விற்று விட்டோமோ? அப்போதே அதில் வரும் நல்ல பலன் தீய பலன் எல்லாமே வாங்கியவரையே சேரும். அதனால் புதையல் எனக்குத்தான்" என்றான் திம்மன்.

தர்மருக்குத் தலைச் சுற்ற ஆரம்பித்து விட்டது. ''இது என்ன மாயம்? நேற்றைக்கு அப்படிக் கூறியவர்கள், இன்றைக்கு இப்படி மாறிவிட்டார் களே" என்ற ஆச்சரியமாக அமைச்சரைப் பார்த்தார்.

அமைச்சர் சொன்னார்... 'பெருமை மிகு தர்ம மகாராஜாவே... நீங்கள் காலக் கடிகாரத்தை கவனிக்க வில்லையா..? இன்றிலிருந்து கலியுகம் ஆரம்பிக்கிறது" என்றார்.

**கதை: 3**

ஒருநாள் பாண்டவர்களில் ஒருவனான சகாதேவன் மிகப்பெரிய சந்தை ஒன்றிற்குச் சென்றான். அங்கு பல தேசங்களில் இருந்தும் கால்நடைகளும், குதிரைகளும், பறவைகளும் விற்பனைக்குக் கொண்டு வந்திருந்தனர். விசித்திரமான சிகை அலங்காரத்துடன் கூடிய ஒருவன் அழகான குதிரையை விற்பனைக்காகக் கட்டிப் போட்டிருந் தான். சகாதேவனுக்கு அந்தக் குதிரையை ரொம்பவே பிடித்துப் போய் விட, குதிரையின் உரிமை யாளரை நெருங்கி, "குதிரை என்ன விலை?" என விசாரித்தான். அந்தக் குதிரைக்குச் சொந்தக்காரனோ, 'பெருமைமிகு அரசரே, இந்தக் குதிரையை விற்பதற்காக நான் கொண்டு வரவில்லை. நான் கேட்கும் கேள்விக்குப் பதில் சொன்னால் போதும். அதன் பிறகு குதிரை உங்கள் வசம்"என்றான்.

குதிரைக்காரன் அப்படி என்ன கேட்டு விடப்போகிறான் என எண்ணிய சகாதேவன்,

'உன் கேள்வியை முதலில் சொல். பிறகு நான் விடை சொல்கிறேன்" 'அப்படியா, பதில் சொன்னால், இந்தக் குதிரை உங்களுக்கு. இல்லா விட்டால், நீங்கள் எனக்கு அடிமை. சம்மதமா?" எனக் கேட்டான். சகாதே வனும் சரி என்று சம்மதித்தான். குதிரைக்காரன் கேள்வியைக் கேட்டான். 'ஒரு பெரிய கிணற்றில் இருக்கும் நீரை ஏழு சிறிய கிணறு களில் நிரப்பலாம். ஆனால், அந்த ஏழு சிறிய கிணறுகளில் இருக்கும் நீரை எடுத்து, மறுபடியும் அந்தப் பெரிய கிணற்றில் ஊற்றினால், அந்தப் பெரிய கிணறு நிரம்பவில்லை. இதற்குக் காரணம் என்ன?"

சகாதேவனால் இந்தக் கேள்விக்குப் பதில் கூற முடியவில்லை. சந்தையில் ஓர் ஓரமாக உட்கார்ந்துவிட்டான்.

சிறிது நேரத்தில் சகாதேவனைத் தேடி நகுலன் வந்து விட்டான். அவனுக்கும் அதே நிபந்தனைதான். ஆனால், கேட்கப்பட்ட கேள்விதான் வேறு... 'ஊசியின் வழியாக யானை நுழைந்து மறுபக்கம் போய் விட்டது. ஆனால், அதன் வால் போக முடிய யில்லை ஏன்?" பதிலற்றவனாக நகுலனும் உட்கார்ந்துவிட்டான்.

தம்பிகளைத் தேடி அர்ஜுனனும் வந்து விட, அதே நிபந்தனைதான். கேள்வி மட்டும் வேறு. 'ஒரு வயல், அதில் பயிர்கள் தளதளவென வளர்ந்து அறுவடைக்குக் காத்திருந்தன. அவற்றைப் பாதுகாக்க வேலியும் அமைக்கப்பட்டிருந்தது. அறுவடை நாளில் வந்து பார்த்தபோது அதில் எந்தப் பயிரும் இல்லை. விளைந்த தானியங்களையும் காணவில்லை. வேலியும் அப்படியே இருக்கிறது. எங்கே போயின விளைந்த தானியங்கள்?"

உலகையே வெல்லும் வில்லாளி யான அர்ஜுனன் அப்படியே அசந்து போய் உட்கார்ந்து விட்டான். சகோதரர்கள் மூவரையும் காணாத தர்மர், பீமனை அழைத்து பார்த்து வரச்சொன்னார். நல்லவேளையாக குதிரைக்காரன், பீமனைப் பார்த்ததும் அவர்கள் மூவரையும் விடுவித்து விட்டான். அரண்மனைக்கு வந்த சகோதரர்கள் மூவரும் தங்களிடம் கேட்கப்பட்ட கேள்விகளைத் தர்மரிடம் கூறி விடைகள் என்னவென்று கேட்டனர். கேள்விகளைக்கேட்டதும் தர்மர் நடுநடுங்கிப் போய்விட்டார். தர்மர் சொன்ன பதில் இதுதான்... உங்களிடம் கேள்வி கேட்டவன் கலிபுருஷன்...

முதல் கேள்விக்கான பதில் பெரிய கிணறு பெற்றோர்கள். ஏழு சிறிய கிணறுகள் பிள்ளைகள். பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் செய்ததை நன்றிக்கடனாக ஏழு பிள்ளைகளும் சேர்ந்து செய்தாலும் அதற்கு ஈடாகாது. ஏழு சிறிய கிணறுகளின் தண்ணீர் பெரிய கிணற்றை நிரப்ப முடியவில்லை என்ற கேள்வி குறிப்பிடுவது இதைத்தான்.

இரண்டாவது கேள்விக்கு உரிய பதில், இனி அக்கிரமங்கள் மிக எளிதாகவும் நிறையவும் நடக்கும். ஆனால், நல்ல செயல்கள் அபூர்வமா-கவே நடக்கும் என்பதைக் குறிக்கிறது. ஊசியின் துவாரத்தில் யானை நுழைந்து விடும். ஆனால், வால் நுழையாமல் போகும். நல்லவர்களின் சொல்லையும், செயலையும் எவரும் மதிக்க மாட்டார்கள் என்பதையே யானை நுழைந்த இடத்தில் வால் நுழையாததைக் காட்டுகிறது.

மூன்றாவது கேள்விக்கான பதில்... வயலில் விளையும் பயிர்களை வேலிகளே தின்று தீர்த்து விடும். அதாவது அரசாங்கம் மக்களுக்குச் செய்வதாகச் சொல்லும் நன்மைகளை அரசு இயந்திரமும், அமைச்சர்களும் அதிகாரிகளுமே தின்று தீர்த்து விடுவார்கள். மக்கள் வறுமையில் வாடுவார்கள். அதிகாரிகள் செழுமையாக வாழ்வார்கள்.



விஜய் நடித்த மெர்சல் படத்
தமிழகத்தில் சொந்தமாக வெளியிட அ
தயாரித்த தேனாண்டாள் பிலிம்ஸ் மு
செய்துள்ளது.

தீபாவளிக்கு வெளியாகும் இந்தப் ப
விநியோக உரிமையைக் கைப்பற்ற
நிறுவனங்களும் போட்டி போடுகின்ற
இந்நிலையிலேயே அந்தப் படத்தை தா
விநியோகிக்க முடிவு செய்துள்ளது.

இந்நிறுவனம் ஏற்கனவே பல பட
விநியோகம் செய்திருந்தது என்பதும்
குறிப்பிடத்தக்கது.





பிரபல நடிகை ஐஸ்வர்யா ராயுடன் நடிக்க வந்த வாய்ப்பை கதை பிடித்திருந்தும் நேரமின்மையால் விலகியிருக்கிறார் மாதவன்.

ஹிந்தியில் தயாராகும் பேனி கான் படத்தின் வாய்ப்பையே மாதவன் தவிர்த்திருக்கிறார். இது குறித்து அவர் தனது ருவிற்றர் பக்கத்தில் தெரிவித்ததாவது:

“பேனி கான் படத்தின் கதை எனக்கு பிடித்திருக்கிறது. ஆனால் கால்ஷீட் கொடுக்க என்னிடம் திகதி இல்லை. படக்குழுவுக்கு வாழ்த்துக்கள் எனப் பதிவிட்டுள்ளார்.

மர்சல் படத்தை
வெளியிட அதை
ள் பிலிம்ஸ் முடிவு

தும் இந்தப் படத்தின்
க் கைப்பற்றப் பல
போடுகின்றன.
படத்தை தாமே
துள்ளது.
ளவே பல படங்களை
எண்பதும்



சசிகுமார் நடித்து வரும் கொடிவீரன் படத்தில் வில்லனாக பசுபதி ஒப்பந்தமாகியுள்ளார்..மதுரையின் கிராமத்தை மையமாகக் கொண்டு உருவாகும் இந்தப் படத்தில் வலுவான வில்லன் தேவைப்பட்டது.இயக்குநர் முத்தையா அர்ஜூனிடம் பேச்சு நடத்தி வந்தார். சம்பளம் சுமுகமாக முடியாததால் அர்ஜூன் விலகவே, இப்போது பசுபதி ஒப்பந்தமாகியுள்ளார்.






தமிழில் முன்னணி நாயகியாக வளர்ந்து கொண்டிருப்பவர் ரெஜினா கெசன்ட்ரா. காதல் வாழ்க்கை தனக்கு பல அனுபவங்களை கற்றுத் தந்ததாகக் கூறுகிறார். இதனால் சினிமாவில் இருந்து இடைவெளி எடுக்க வேண்டி வந்ததாகவும் இனி அவ்வாறான வாழ்க்கை குறித்துத் தான் சிந்திக்கப் போவதில்லை. இன்னும் சில வருடங்களுக்கு தனி ஆளாகவே வாழப்போகிறேன் எனக்கூறியிருக்கிறார். காதலால் அம்மணி நல்லா பாதிக்கப்பட்டிட்டார் போல இருக்கு...

சமந்தா - நாக சைதன்யா திருமணம் அடுத்த மாதம் நடக்கவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் தடல்புடலாக நடக்கிறது. ஆனால் இதில் பங்கேற்க நடிக, நடிகைகளுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லையாம்.

இரு வீட்டாரினதும் நெருங்கிய நண்பர்கள், உறவினர்களுக்கு மட்டுமே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாம். திருமண வரவேற்பில் பங்கேற்க நடிகர்களுக்கு அழைப்பிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதாம்.



இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், இசையமைப்பாளர்கள் எனப் பலரும் நடிகர்களாக மாறுவது வழமை. பல நிலைகளில் சினிமாவில் தனக்கென தனி முத்திரை பதித்த விஜய் அன்ரனி இப்போது எடிட்டராக மாறியுள்ளார்.

இவர் தற்போது அண்ணாதுரை படத்தில் இரு வேடங்களில் நடித்து வருகிறார். படத்தின் இசையமைப்பு, எடிட்டிங் என்பவற்றை இவரே செய்துவருகிறார்.

# கொக்கென்று நினைத்தாயா கொங்கணவா...?

- சந்திரவதனா -

சிறுகதை



சொல்லப்படாது. இந்த மனுசனுக்கு ஒண்டும் சொல்லப் படாது. அப்பிடித்தான் எப்பவும் நினைக்கிறனான். ஆனாலும்... எங்கை...? சில நேரத்திலை பொறுமை கெட்டுப் போயிடுது. எத்தினைக்கெண்டுதான் நானும் பொறுமை காக்கிறது? காலைமை எழும்பினதிலையிருந்து ஆற அமர நேரமில்லை, வேலை.

ம்... கூம் வேலை எண்டு மட்டும் இந்த மனுசன்ரை காது படச் சொல்லக் கூடாது. உடனை 'என்னப்பா உனக்கு இஞ்சை வேலை..?" "ஊரிலை மாதிரி என்ன இங்கையும் கல்லிலை அடிச்சு உடுப்புத் தோய்க்கிறியளோ..? அல்லது ஆட்டுக் கல்லிலையும் அம்மியிலையும் அரைக்கிறியளோ..? அல்லது அடுப்பைத் தன்னும் பச்சை விறகை வைச்சிட்டு ஊதி ஊதி எரிக்கிறியளோ..?" எண்டு பன்மையிலை கேட்கத் தொடங்கீடும்.

எனக்கு வரும், கோவம். ஊரிலை என்ன மிக்சி இல்லையோ? அல்லது எலெக்றிக் குக்கர்தான் இல்லையோ? வாய்க்கு வசதியாக ஏதும் சொல்லேலு மெண்டால் எதையும் சொல்லலாமெண்டு நினைக்குது இந்த மனுசன். நானும் சொல்லுற தெண்டால் சொல்லுவன். 'நீங்கள் மட்டுமென்ன..? ஊரிலை எண்டால் சைக்கிளைத்தான் தூக்கிக் கொண்டு வெளிக்கிடுவியள். இங்கை எண்டால் கார் இல்லையெண்டால் ஒரு அடி எடுத்து வைக்க மாட்டியள். அது மட்டுமே! விறகு கொத்துறது, தண்ணி அள்ளிக் கொண்டு வாறது... எண்டு எத்தினை வேலையள் அங்கை உங்களுக்கும். இங்கை அப்பிடியே. சாமான்கள் வேண்டுற வேலையையும் பொம்பிளையளின்ரை தலையிலை போட்டிட்டு, நான் என்ரை மனுசிக்கு சுதந்திரம் குடுத்திருக்கிறன் எண்டுவியளே! உங்கடை சுதந்திரக் குடுப்பனவு பற்றி எங்களுக்குத் தெரியாதாக்கும். வேலைக்குப் போறதும், சாமான் வேண்டப் போறதும் தான் பெண் விடுதலைக்கான அர்த்தம் எண்டு நீங்களெல்லாருமா ஒரு அகராதியே தயாரிச்சு வைச்சிருக்கிறீங்களே! " ம்... இதையெல்லாம் சொல்லுறதிலை ஏதும் பிரயோசனமிருக்கே! அதாலைதான் நான் எப்பவும் நினைக்கிறதோடை நிப்பாட்டிப் போடுவன். சொல்லுறேல்லை.

சரி அதை விட்டிட்டு இப்ப பிரச்சினைக்கு வருவம். நான் காலைமை எழும்பி வரவே போர்வை சோபாவிலை அப்பிடியே குழம்பின படி போட்டுக் கிடக்கு. எனக்கு உடனையே எரிச்சல் வந்திட்டுது. நேற்றிரவு இந்த மனுசன்தான் போர்த்திக் கொண்டு படுத்திருந்து ரிவி பார்த்துக் கொண்டிருந்தது. எழும்பிப் போகேக்கை போர்வையையும் எடுத்துக் கொண்டு போய் மடிச்சு வைக்கலாம்தானே. அதில்லை அப்பிடியே போர்வையை விட்டிட்டுப் போய்ப் படுத்திட்டுது. 'ஏனப்பா நீங்கள் இன்னும் சின்னப் பிள்ளையே..? உங்களுக்கு எத்தினை தடவை சொல்லிப் போட்டன். இந்தப் போர்வையை எடுத்து வைச்சால் குறைஞ்சு போயிடுவிங்களே? நாலூறுக்குக் கழிச்ச மாதிரி ஏன் எப்பவும் கோலுக்குள்ளை போர்வையை வைக்கிறீங்கள்?" எண்டு கேட்க வந்த வார்த்தைகளை அப்பிடியே தொண்டையோடை நிப்பாட்டிப் போட்டன்.

பிறகு மனுசன் சொல்லும் "விடியக் காத்தாலை தொடங்கீட்டாய் எண்டு." சும்மா சொன்னாலும் பரவாயில்லை. தன்ரை பிழையை மறைக்கிறதுக் காண்டி நாய்க் கத்தல் கத்தத் தொடங்கீடும். எனக்கு அந்தக் கத்தலை கேட்கவே ஏலாது. எனக்கு மட்டும் என்ன விடியக் காத்தாலை இல்லையே? எனக்கும் விடியக் காத்தாலை இந்த மனுசன் அப்பிடிக் கத்தினால் மூடவுட்டாகும்தானே. ஆனால் மனுசன் நினைக்குது தனக்கு மட்டும்தான் விடியக் காத்தாலை, வேலைக் களைப்பு, பஞ்சி, அலுப்பு எல்லாம் இருக்கெண்டு. எனக்கும் இதெல்லாம் இருக்கெண்டு இந்த மனுசன் நினைச்சுப் பார்த்ததாவே தெரியேல்லை.

போர்வை மட்டும்தான் பிரச்சினையெண்டால் தூக்கி மடிச்சு வைச்சிட்டு இருந்திடுவன். எல்லா விசயத்திலையும் அப்பிடித்தான். பேப்பரை விரிச்சு வாசிச்சா மடிச்சு வைக்கிறேல்லை. புத்தகத்தை புத்தக அலுமாரியிலையிருந்து எடுத்தா திருப்பிக் கொண்டே வைக்கிறேல்லை... உப்பிடியே இந்த மனுசனும், பிறகு மனுசனைப் பார்த்துப் பிள்ளையளும் வீட்டிலை விதைச்சு விடுற சாமான்களெல்லாத்தையும் எடுத்து அந்தந்த இடத்திலை வைக்கவே எனக்கு ஒருநாளிலை அரைவாசி போயிடும். அதுக்குள்ளை மனுசன் கேட்கும் "உனக்கென்ன வேலை..?" எண்டு.

காலைமை எழும்பினதிலையிருந்து வேலை எண்டெல்லே சொன்னனான். அதுதான் போர்வையை மடிச்சு வைக்கிறதிலை தொடங்கி ஒண்டொண்டா எல்லாத்தையும் அடுக்கி வைச்சு, சமைச்சு, மற்ற வேலையளை எல்லாம் முடிச்சு... நான் வேலைக்கு வெளிக்கிடக்கே அப்பிடியே வீடு பளிச்செண்டு இருந்திச்சு. எனக்கு அதைப் பார்க்கவே ஒரு சந்தோஷம். அந்த சந்தோஷத்தோடையே வேலைக்குப் போயிட்டன்.

வேலைக்குப் போனால் வேலை செய்யோணும் தானே. ஆனால் என்ரை மனுசன்ரை நினைப்பு, தான் மட்டும்தான் வேலையிடத்திலை வேலை செய்யிறது. நான் எண்டால் சும்மா இருந்திட்டு வாறதெண்டு. சரி ஏதோ நினைச்சிட்டுப் போகட்டும். எனக்கு வேலை முடிஞ்சால் நிம்மதி. இனி வீட்டை போகலாமெண்டு. அப்பிடித்தான் வேலை முடிய நிம்மதியா வீட்டை வந்தன். அதையேன் பேசுவான். பளிச்செண்டு நான் விட்டிட்டுப் போன வீடு என்னைப் பார்த்து இளிக்கிற மாதிரி... எல்லாம் தலை கீழாய். மேசையிலை புத்தகங்கள், பேப்பருகள், கடிதங்கள்... குசினிக்குள்ளை ஒரு குவியல் கோப்பையள்... கட்டிலுக்குப் பக்கத்திலை சுருட்டின படி மனுசன்ரை சொக்ஸ்...

மனுசன் சோபாக்குள்ளை சுருண்டபடி அந்தப் போர்வையாலை போர்த்திக்கொண்டு பேசாமல் படுத்திருந்து ரிவீ பார்க்குது... மனுசனுக்கு வேலைக் களைப்பு அதுதான். எனக்கு வந்துதே கோபமும் எரிச்சலும். கூட்டித் துடைச்சு அடுக்கி வைக்கத்தான் முடியேல்லை. அடுக்கினதுகளையாவது குழப்பாமல் இருக்கலாம்தானே. ஆனால் நான் ஒண்டுமே சொல்லேல்லை. மனசுக்குள்ளை குமைச்சலாத்தான் இருந்தது. ஆனாலும் பேசாமல் மனுசனுக்கு தேத்தண்ணியை போட்டுக் குடுத்திட்டு, தேத்தண்ணியை உடனை போட்டுக் குடுக்காட்டி மனுசன் பிறகு மூஞ்சையை நீட்டிக் கொண்டு இருக்கும். எனக்கு இருக்கிற குமைச்சலும் எரிச்சலும் போதும்.

இன்னும் கூட்ட வேண்டாம் எண்டிட்டு அந்த வேலையை உடனை செய்திட்டு... பிள்ளையள் சாப்பிட்டுதுகளோ குடிச்சுதுகளோ எண்டு பார்த்து... இண்டைக்கு என்ன படிச்சது... வெளியிலை என்ன நடந்தது.. எல்லாம் கேட்டு முடிச்சிட்டு... பழையபடி அடுக்கல் கூட்டல் துடைத்தல்... எண்டு எல்லாம் முடிய 11 மணியாச்சு. காலும் வேலை விட்டது போலை நோகத் தொடங்கீட்டுது. சரி இனி இண்டைக்கு ஒண்டும் செய்யேலாது படுப்பம் எண்டு நினைச்சுக் கொண்டு போனால் ரிவி தன்ரை பாட்டிலை போய்க் கொண்டிருக்கு... அது மட்டுமே!!. பழையபடி போர்வை சோபாவிலை... மனுசன் நைசா அதை அப்பிடியே விட்டிட்டுப் போய்ப் படுத்திட்டுது போலை... எனக்கு வந்துதே கோபம். விறுவிறென்று போய் படுக்கையறையைப் பார்த்தன். மனுசன் ஒய்யாரமாப் படுத்திருந்து புத்தகம் வாசிக்குது.

சொல்லப்படாது எண்டுதான் முதல் நினைச்சனான். ஆனால் என்னையறியாமல் பொறுமை கெட்டுச் சொல்லிப்போட்டன். "ஏனப்பா அந்தப் போர்வையை எடுத்து வைக்கிறதுக்கென்ன..? எத்தினை தரமெண்டு உங்களுக்குச் சொல்லுறது..!" நான் சொல்லி முடிக்கேல்லை. மனுசன் இரவெண்டும் பாராமல் பொரிஞ்சு தள்ளிச்சே.

'நீ என்னத்துக்குப் பெண்டாட்டியெண்டு இருக்கிறாய்? எடுத்து வைக்கிறதுதானே! மனுசருக்கு இருக்கிற பிரச்சினையள் தெரியாமல்... உனக்கு இப்ப போர்வைதான் பிரச்சினையாக்கும்." எனக்குத்தானே முதலே பொறுமை கெட்டிட்டு. நானும் விடேல்லை. 'என்னப்பா உங்களுக்கு அப்பிடிப் பிரச்சினை" எண்டு கேட்டிட்டன்.

என்ன இவள் இப்பிடி பதில் சொல்லேலாத கேள்வியாப் பார்த்துக் கேக்கிறாளே எண்டு நினைச்சுதோ என்னவோ! மனுசனுக்கு வந்துதே ஒரு கோபம். அப்பிடியே முழுசி என்னை ஒரு பார்வை பார்த்திச்சு. ஏதோதான் பெரிய கௌசிக முனிவர். அவற்றை பார்வையிலை நான் எரிஞ்சு சாம்பலாயிடுவன் எண்ட நினைப்பு.

"என்னை என்ன கொக்கெண்டு நினைச்சியோ கொங்கணவா..?" எண்டு கேக்கத்தான் எனக்கு மனம் வந்திச்சு.ம்... பிறகேன் பிரச்சினையை வளர்ப்பான் எண்டிட்டு பேசாமல் வெளிலை வந்திட்டன். மனுசன் நினைச்சிருக்கும் தன்ரை பார்வையிலை நான் பயந்திட்டனெண்டு. ●

# பெயரின் அர்த்தத்துடன் வாழ்ந்து காட்டிய குருநாதன்


- பகலவன் -

இலங்கையின் மிக மூத்த தமிழ் பத்திரிகையாளர்கள் இருவர். ஒருவர் எஸ்.எம்.ஜி. எனப்படும் கோபு ஐயா (எஸ்.எம்.கோபாலரத்தினம்), அடுத்தவர் சின்னையா குருநாதன். கடந்த 01.09.2017 நாள் சின்னையா குருநாதன் இயற்கை எய்தினார்.

பொருத்தமான இடத்தில் தேவையான விடயங்களை சம்பந்தப் பட்டோரிடம் இருந்து பெற்றுக்கொள் வதில் குருநாதன் மிகவல்லவர். கோபு ஐயாவைப் போலவே நினைவாற்றல் மிகுந்தவர். ஒரு குறிப்பிட்ட செய்தியை அப்படியே வெளியிடுவதைவிட அதனுடன் ஏற்கெனவே சம்பந்தப்பட்ட விடயங்களை சேர்த்துக் கொடுப்பதன் மூலம் செய்தியின் முக்கியத்துவத்தை வெளிக்கொணரும் பாங்கு அவரிடம் இருந்தது.

குறிப்பாகத் தலைவர் பிரபாகரன் இந்தியப் பிரதமரின் அழைப்பையேற்று இந்தியா சென்றமை, தொடர்ந்து ஆயுதக் கையளிப்பு முதலான விடயங்களில் இவரது ஆற்றல் தனத்துவமாகத் தெரிந்தது. விடயத்துக்கு அப்பால் போகாமல் தான் எதனை அறிய விரும்பு கிறாரோ அதனைப் பிரபா கரனிடம் கேட்டார். இச்சந்திப்புக்களில் இவர் கேட்ட கேள்விகளே ஏனையோருக்கும் புதிய தகவல்களை வெளியிட உதவியாக இருந்தன. இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இந்திய செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஒருவர் "நீங்கள் என்ன புத்தராகி விட்டீர்களா? என பிரபாகரனிடம் கிண்டலாகக் கேட்டார். சிங்கள ஊடகவியலாளர்கள் "எல்லா ஆயுதங்களையுமா ஒப்படைப்பீர்கள்? உங்கள் சொந்த ஆயதத்தையுமா கையளிப்பீர்கள்?" எனத் தமது உள்ளக்கிடக்கை களைக் கேள்விகளாகத் தொடுத்தனர். குருநாதன் மாத்திரம் தமிழர் நலன் சார்ந்த விடயங்களை வினாக் களாக வரிசைப்படுத்திக் கேட்டார். அவரது வினாக்கள், அவர் எதிர்பார்க்கும் விடயங்கள் எல்லாம் பிரபாகரனுக்குப் பிடித்துப் போயின. அச் செய்தியாளர் மாநாட்டின் பின்னர், அங்கு நின்ற சில போராளிகளிடம் பிரபாகரன் இது பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்.பிரபாகரனுடன் அருகில் நின்ற இவரும் ஏனைய தமிழ் ஊடகவிய லாளர்களும் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். சமாதான காலத்தில் திருமலை முற்றவெளிப் பகுதியை சிங்களவர் ஆக்கிரமிக்க முனைந்தனர். தமிழ் மக்கள் ஒன்று திரண்டு சாத்வீக வழியில் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். முடிவில் தமிழரின் எதிர்ப்புக்குப் பலன் கிடைத்தது. அச்சமயம் தன்னைச் சந்திக்க வந்த இன்னொரு ஊடகவிய லாளரிடம் 'சிங்கக்கொடிக்கு எதிராக மணிக்கூட்டுக் கோபுரத்தடியில் நிகழ்ந்த போராட்டத்துக்குப் பின் திருமலைத் தமிழர் ஒன்று திரண்டு நடத்திய போராட்டம் இது" எனக் குறிப்பிட்டார்.

இரு தலைமுறையினரதும் போராட்டங்களை நேரில் பார்த்தவர் அவர் சிங்கக்கொடிக்கு எதிரான அந்த போராட்டத்தைப் பற்றி அவர் விபரிக்க வும் தவறவில்லை 'மணிக்கூட்டுப் கோபுரத்தின் உச்சியில் சிங்கக் கொடி ஒன்றை சிங்களவர்கள் கட்டியிருந்தனர். பெப்பரவரி 04. சுதந்திர நாளன்று அதனைக் கட்ட வேண்டும் எனச் சிங்களவர் தீர்மானித்தனர். இதற்கெதிரான போராட்டத்தைத் தமிழரசுக்கட்சி ஒழுங்கு செய்திருந்தது. வேறொரு கொடி கட்டப்பட வேண்டும் என்பது அவர்களின் தீர்மானம். இனமுறுகலைத் தொடர்ந்து அங்கே எந்தக்கொடியும் ஏற்றுவதில்லை என்ற பொலஸாரின் கோரிக்கைக்கு உடன்பட்டனர் இரு தரப்பினரும். ஆனால் இந்த உடன்பாட்டுக்கு மாறாகச் சிங்களவர் சிங்கக் கொடியை ஏற்றிவிட்டனர். காலையில் இதனைக் கண்ணுற்ற தமிழர் தரப்பு இதற்கெதிரா கத் தமது போராட்டத்தை நடாத்தியது. நடராஜா என்பவர் இதில் முன்னணியில் நின்றார். (தமிழரசுக் கட்சித் தொண்டரான இவர் லிப்டன் லாவோஜி பெட்டி இணைக்கப்பட்ட சைக்கிளில் தேயிலையைக் கொண்டு சென்று விநியோகிப்பவர்) கூட்டமாக வந்த தமிழர் தரப்பினரை நோக்கிச் சிங்களவர் ஒருவர் சுட்டார். நடராஜன் பலியானார். அந்தச் சிங்கள வர் இப்போதும் இருக்கின்றார். பொல்லூன்றியபடி நகரக் கடைத் தெருக்களில் அவர் வருவதைக் கண்டுள்ளேன்" எனக் குறிப்பிட்டார் குருநாதன். அந்தச் சிங்களவரின் பெயரையும் குறிப்பிட்டார். (தற்சமயம் அந்தச் சிங்களவர் சிலவேளை உயிரிழந் திருக் கலாம்)இவரைச் சந்தித்த ஊடகவியலாளர் பிரபாகரனுடன் இவர் எடுத்துக் கொண்ட புகைப் படத்தை வழங்கியதும் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். 'என் வாழ்வில் மிகமுக்கியமான தருணமல்லவா இது" எனவும் குறிப்பிட்டார். இந்த வரலாறுகளையெல்லாம் தெரிந்திருந்தும் தற்போதைய தமிழ்த் தலைமை சிங்கக் கொடியை கைகளில் ஏந்தி ஆட்டி மகிழ்ந்தது. அடுத்த தலைமுறைப் பத்திரிகையாளர் ஒருவரும் சிங்கக் கொடியை ஆட்டியவரின் தலைமையை ஏற்று கடந்த பொதுத்தேர்தலில் போட்டியிட் டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவற்றை யெல்லாம் தமிழ் ஊடகவியலாளர்கள் தெரிந்து கொள்வது அவசியம். குறிப்பாகக் கிழக்கிலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தினர் புரிந்து கொள்ள வேண்டும். ஆயிரம் முட்டைபோட்ட ஆமை போல எவ்வளவோ அனுபவங்களையும் செய்தி உலகில் சாதனைகளை யும் புரிந்த குருநாதன் எப்போதுமே அமைதியாக இருப்பார். தனது அனுபவங்களில் சிலவற்றைப் புத்தக வடிவிலும் கொண்டு வந்திருந்தார். அவரது வாழ்வு வரலாற்றையே புரட்டிப் போட்டவர்கள் நாங்கள் எனத் தம்பட்டம் அடிக்கும் ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் ஒரு பாடம். தினபதி, சிந்தாமணி, உதயன் முதலான பத்திரிகைகளில் பணியாற்றிய இவர், பின்னர் சுயாதீன ஊடகவியலாளராகவும் விளங்கினார். புனை பெயர்களில் இவர் எழுதிய கட்டுரைகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு வலுச்சேர்த்தன. கோபுஐயா, குருநாதனுக்குஅடுத்ததாகக் கானமயில்நாதன், பெருமாள் போன்றோர் இன்னும் நம்மிடையே வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் சேவையும், அனுபவமும் மதிக்கப்பட வேண்டியவை. இவர்களைக் கௌரவத்துடன் நடத்த அடுத்த தலைமுறை ஊடகவியலாளர்கள் முயலவேண்டும். •





# அலம்பல் ஆச்சி

எடா மோனே! எல்லாரும் சுகமா இருக்கிறியளோ? ஒவ்வொரு கிழமையும் வந்த ஆச்சிக்கு இவ்வளவு நாளும் என்ன நடந்ததெண்டு ஆரும் ஒரு சொல்லுக் கேட்டியளே? கதிர்காமம், முறிகண்டி, சந்நிதி எண்டு, ஊரில உள்ள கோயில் குளமெல்லாம் அலையேக்க இந்தக் கிழவி எங்கேயும் கண்ணைப் பிரட்டிடுதோ எண்டு கூட ஒருத்தரும் நினைக்கேலயோ. இல்லாட்டி உந்தக் குறுக்காலையும் மறுக்காலையும் ஓடித் திரியிற வாகனங்களுக்க அம்பிட்டு, நசுங்கிச்சுதோ எண்டாவது யோசிக்கேலதானே. எல்லாம் பழகும் மட்டும் தான். கொஞ்சம் இல்லாட்டி ஆளையே மறக்கிறதுதானே எங்கட சனத்தின்ர குணம். ஆனாப் பாருங்கோ, இப்பிடி மறதி பிடிச்ச எங்கட சனத்துக்கு சில விசயங்களை அவ்வளவு கெதியா மறக்க மனம் வராது. அப்பிடி ஒரு விசயம்தான் போன கிழமை யாழ்ப்பாணத்தில நடந்து முடிஞ்சிருக்கு. சொல்ல முதலே உங்களுக்கு விளங்கியிருக்கும். உந்தக் கேரள டயரீஸ் எண்ட புத்தகம் பற்றித் தான் சொல்லுறன். அந்தப் புத்தகத்தை எழுதின அருளினியன் எண்ட பெடியன், ஒரு அஞ்சு வருசத்துக்கு முதல், இந்தியாவில இருந்து வாற 'ஆனந்த விகடன்' எண்ட சஞ்சிகைக்கு ஒரு கட்டுரை எழுதியிருக்கிறான்.

அதில எங்கட இயக்கப் பெட்டையள் இப்ப வேற தொழில் செய்யினம் எண்ட மாதிரியும், அதை அப்பிடியே பச்சையா சொல்லுற தலையங்கமும் போட்டு, அந்தக் கட்டுரை வந்த மூட்டமே பயங்கர எதிர்ப்பு. சனத்துக்காகப் போராடின பெண்பிள்ளையள, இந்தியன் போடுற எலும்புத் துண்டுக்காக கேவலப்படுத்தி எழுதிறத எப்பிடிச் சும்மா விட ஏலும்? அதுகும் உவர் தம்பி ஒரு துவக்கைத்தன்னும் தூக்கியறியார். சண்டை எண்டவுடன பேதி வந்து ஓடின ஆள். அவர் சண்டை பிடிச்ச பிள்ளையளை இப்பிடிக் கேவலப்படுத்திறதைப் பார்த்துக் கொண்டிருக்க நாங்கள் என்ன இளிச்சவாயளோ?
எல்லாப் பக்கத்தாலுயும் அடி விழ, ஆனந்த விகடன்கார்ன்களால ஒண்டும் செய்ய ஏலாமப் போட்டுது. பிறகு தன்னிலை விளக்கம் ஒண்டும் குடுத்தினம். அதோட இந்தப் பெடியனையும் விலத்திட்டினம். ஆனா 'இதுக்க இருக்கிறா அரசியலை நான் சொல்ல ஏலாது' எண்டு பெடிப்பிள்ளை வாயை மூடிட்டார். கொஞ்ச நாள் எங்கட ஆக்களும் கத்திப் போட்டு ஓய்ஞ்சிட்டினம். சரி, பிரச்சினை அதோட முடிஞ்சுதாக்கும் எண்டு அருளினியன் எண்ட அந்தப் பெடிப் பிள்ளை நினைச்சிட்டார் போல. மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் என்னென்ன தொடர்பு இருக்கெண்டுற மாதிரி, கேரளாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் என்னென்ன தொடர்பு எண்டு, பயணமெல்லாம் போய் கட்டுரையள் எழுதி, அதைப் புத்தகமாக்கி இஞ்ச வெளியிடலாமெண்டு வந்திருக்கிறார்.
ஆனா எங்கடையள் பழசை மறக்காமல், முந்தின கணக்கு வழக்கை முடிக்க வெளிக்கிட, பிரச்சினை பெரிசாகிட்டுது. நோட்டீஸ் அடிக்கிற அளவுக்கு எதிர்ப்பு. வேற வழியில்லாம, பேப்பர்கார பெடியளைக் கூப்பிட்டு" அந்தக் கட்டுரைக்கு பேட்டி தந்தவாவை எனக்குத் தெரியாது. அவா போராளியோ இல்லையோ எண்டு கூட தெரியாது. விகடன்காரர் போன் எடுத்துத் தந்திச்சினம். நான் கதைச்சதை அப்பிடியே எழுதிக் குடுத்தன். அவ்வளவுதான் நான் செய்தது. தலைப்பெல்லாம் கேவலமாப் போட்டது விகடன் தான்" எண்டு எல்லாப் பழியையும் விகடன்ல சுமத்திட்டு புத்தக வெளியீட்டைச் செய்ய நினைச்சார். ஆனா அதுக்குப் பிறகும் எதிர்ப்பு. வெட்டுவன், குத்துவன் எண்டு சிலர் கிளம்ப, இரகசியமா புத்தகத்தை வெளியிட்டிட்டினம்.
இப்ப என்ர கேள்வி என்னெண்டா , இயக்கப் பிள்ளையளைக் கேவலப்படுத்தின அந்தக் கட்டுரை வந்து அஞ்சு வருமாச்சு. இந்த அஞ்சு வருசத்தில தன்னோட கதைச்சது உண்மையான போராளியோ எண்டு அறிய முடியாதவர், என்ன மயிரில கேரளாவுக்கும் எங்களுக்கும் இருக்கிற தொடர்பைக் கண்டுபிடிக்க முடிஞ்சதாம்? இன்னும் நாலு வரியம் கழிச்சு " நான் போனது கேரளாதானோ தெரியாது. பஸ்காரன் கொண்டுபோய் இதுதான் கேரளா எண்டான். அதை நம்பி நானும் கட்டுரை எழுதிட்டன்" எண்டு சொல்ல மாட்டாரெண்டு என்ன நிச்சயம்?
நீங்கள் என்னவும் எழுதுங்கோ. எத்தினை புத்தகமும் அடியுங்கோ. நாங்கள் குறுக்க வரேல. ஆனா உங்கட பப்ளிசிட்டிக்காக எங்கட இயக்கத்தையும், தியாகத்தையும் கொச்சைப்படுத்தி காசு பார்க்க நினைச்சியளோ அவ்வளவுதான். அதைத்தான் அருளினியனுக்கு பாடமாச் சொல்லிக் குடுத்திருக்கு. சரி பிள்ளையள், இந்த முறை காரமாக் கதைச்சிட்டன். கொஞ்சம் தண்ணி குடிச்சிட்டு அடுத்த கிழமை கதைக்கிறன என்ன...?

# சினிமாப் பாடல்கள் பக்தியை வளர்க்குமா?

கடந்த 5 ஆம் திகதி செல்வச் சந்நிதி முருகப்பெருமானின் தேர்த் திருவிழா. எனது தாய்மனையின் குலதெய்வமாகிய நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையாரின் தேர்த்திருவிழாவும் அன்று அமைந்தமையால் சந்நிதிக்குச் செல்ல இயலவில்லை. ஆனால் சந்நிதிக்குச் சென்ற காவடிகளை வழிவழியே தரிசித்தேன். அதில் ஒரு குழு நான் இளமையில் விரும்பிக் கேட்ட "மண்ணில் இந்தக் காதல் அன்றி யாரும் வாழக் கூடுமோ" என்ற பாடலை நாதஸ்வரத்தில் மீட்டுக் காவடியாடியது.

வீதியை மூடிக் காவடி ஆடினர். சற்று நேரம் நின்று அவதானித்தேன். எஸ்.பி.பி. மூச்சை நிறுத்திப் பாடி விட்டு மூச்சு இளைப்பதைப் போல காவடிக் காரர் சிலரும் ஆடி விட்டு பாடலின் இடையில் மூச்சிளைத்தும் காட்டினர். என்னே பக்தி! என்னே பக்தி! வியந்து போனேன் நான். நாதஸ்வரத்தில் சினிமாப்பாடல்களை மீட்டியபடி வழிபாட்டில் ஈடுபடுவது குளிக்கப் போய்ச் சேறு பூசுவதற்கு ஒப்பானது. பக்தி என்ற பெயரில் இந்தக் கேவலமான காரியங்களில் ஈடுபடுவதற்கு நாதஸ்வர வித்துவான்களும் ஒரு விதத்தில் காரணர்கள். என்னுடன் நட்பாகப் பழகும் சில வித்துவான்கள் என் வாதத்தை மறுத்துரைத்தமையையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். பூசைகளின் போது கோவில் நிர்வாகத்தினர் வாசிக்க வேண்டாம் என்று தடுத்தால் நாங்கள் ஏன் வாசிக்கப் போகின்றோம் என்று கேட்கின்றார்கள் அவர்கள். நல்லூர், தெல்லிப்பழை, நயினாதீவு போன்ற மிகப் பிரபல ஆலயங்களைத் தவிர்த்துப் பார்த்தால் ஆலயச் சூழலில் சினிமாப் பாடல்களை வாசிக்கக் கூடாது என்று தடுக்கும் நிர்வாகங்களை விரல்விட்டே எண்ண முடிகின்றது. அண்மையில் மண்டைதீவு திருவெண்காட்டுப் பிள்ளையார் கோவிலுக்குச் சென்றிருந்தேன் அங்கு உள்வீதியோ, வெளிவீதியோ எங்கும் சினிமாப்பாடல் வாசிக்க முடியாது என்றனர். வண்ணை நாச்சிமார் கோவிலிலும் இந்த நடைமுறை இறுக்கமாகப் பேணப்படுவதாக கூறுகின்றனர். இன்னும் வேறு ஆலயங்களும் இருக்கலாம். ஆலயம் அனுமதித்தா லும் அளவெட்டியூர் நாதஸ்வர வித்துவான் கேதீஸ்வரன் சினிமாப் பாடல் வாசிப்பதில்லை என்ற இறுக்கத்தைப் பேணியவர் என நண்பர் சர்வேஸ் ஒரு சந்தர்ப்பத்தில் பேசும் போது என்னிடம் தெரிவித்தார். தமிழகத்தில் சினிமாப்பாடல் பாடும் நாதஸ்வர மேளதாளக் குழுவினரை நையாண்டி மேளம் எனத் தரம் தாழ்த்தியே பார்ப்பர். இங்கோ நிலைமை வேறு. மிகப் பெரும் தொகையை அவர்க ளுக்கு வழங்கி ஆலயத்தைக் கேளிக்கைக் களமாக மாற்றிக் கொள்ள வேண்டுமா என ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்? சினிமாப்பாடலில் காவடியாட்டத்தின் ஊடாக நாம் சாதிக்க நினைப்பது என்ன? இதுபற்றிக் காலத்திற்குக் காலம் பலரும் குரல் கொடுத்துள்ளனர். இது அரைத்த மாவை மீள அரைக்கும் முயற்சி என நீங்கள் நகைப்பது எனக்குப் புரிகின்றது ஆலய நிர்வாகத்தினரும் வித்துவான்களும் நினைத்தால் இந்த நிலைமையை மாற்றலாம்.



– உமாஜி –

# பள்ளிக்கால வன்முறை!

யாழ்ப்பாணத்தின் பள்ளி நாட்களில், விமானக்குண்டு வீச்சு, ஷெல் தாக்குதல் எல்லாவற்றையும் தாண்டி அதிகம் அச்சுறுத்தியது ஆசிரியர்களின் வன்முறைதான்! இயல்பாக சிறுவர்களாக இருக்கவிடாமல் எப்போதும் மிகுந்த பதற்ற உணர்வையும், எச்சரிக்கையையும் ஒருங்கே ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அடிக்கடி மனதில் தோன்றும் விசயம் இது. ஒழுக்கம் என்பது தண்டனைக்குப் பயந்திருப்பது என்று நம்பும் சமூகம். மனித உரிமைகள் ஆணைக்குழு பற்றிக் கேள்வியே பட்டிராத காலம்.பலருக்கு வீட்டிலும் சொல்லமுடியாது. அப்படியே ஒரு பெரிய மனுஷனிடம் சொல்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். தங்கள் வாத்தியார் கைகளை மடக்கச் சொல்லி, மொழியில் அடி மட்டத்தால் அடிப்பார் என்பதை பெருமையாக நினைவு கூர்வார். அல்லது முஷ்டியை மடக்கி மண்டையில் எப்படி ஓங்கி கொட்டும், தொட்டுத் தொடரும் ஒரு கொட்டுப் பாரம்பரியம் பற்றிப் பரவசமாகப் பேசுவார். விளைவு? பள்ளிக்கால வன்முறையைக் கேட்க ஆளே கிடையாது.

சரி, இப்போது சிந்திக்க தெரிந்த, வளர்ந்துவிட்ட நண்பர்களிடம் கேளுங்கள். 'அந்தக்காலத்தில் அடிச்சு வளர்த்ததாலதான் நான் இப்ப இப்பிடியொரு மனுஷனாகி.. ' என ஆரம்பிப்பார்கள். இல்லாவிட்டால் வால் முளைத்துக் குரங்காகி மரத்தில் தாவிக் கொண்டிருப்பார்களாம் என்பது அவர்கள் நம்பிக்கை. எதையெல்லாம் ரொமான்டிசைஸ் செய்து கொள்கிறோம், என்ன உளறுகிறோம் என்கிற விவஸ்தையே நமக்குக் கிடையாது. ஒரு பாடசாலையில் குறைந்தபட்சம் இரண்டு பிரதான சைக்கோ ஆசிரியர்கள் இருப்பார்கள் சில 'ஒழுக்கமான' பாடசாலைகளில் இன்னும் அதிகம். 'குற்றவாளி' மாணவனை வகுப்புக்கு வெளியில் நிற்கவைத்தால் போதும். 'இவன் ஏன் அடிக்கிறான்?', 'இவன் எனக்குப் படிப்பிக்கவில்லையே?' என்றெல்லாம் கேட்க முடியாது. இதற்காகவே பிரத்தியேகமாக சட்ட ஒழுங்கு பேணும் சைக்கோ ஆசிரியர்கள் இருந்தார்கள். இவர்கள் எந்த வகுப்புக்குள்ளும் புகுந்து யாரையும் அடிப்பார்கள். முதலில் அடித்து விட்டுத்தான் பேசவே ஆரம்பிப்பார்கள். இந்த ஒழுக்கவியல் ஆசிரியர்களுக்கு இருக்கும் முக்கியமான தகுதி - அவர்களிடம் எந்தவிதமான ஒழுக்கமும் கிடையாது என்பதுதான்.

கொழும்பில் நம் ஆசிரிய நண்பர் நேர்த்தியாக உடை, சப்பாத்து அணிந்து வேலைக்குச் செல்லும் போது அறையிலிருந்த இன்னொரு நண்பன் கூறினான். 'எதுக்கு டீசண்ட இருக்கே? தலையைக் கலைச்சு விடு. கைய ஒழுங்கா மடிக்காதே ஏறி இறங்கி நிற்கட்டும். பழைய சிலிப்பர் போட்டு ஒற்றைக்காலை லேசா இழுத்து நட! அதானடா சரியா இருக்கும்?' என்று சிரித்தான். அவன் வார்த்தைகளில், கிண்டலுக்கு அப்பால் இருந்த ஓர் உண்மை மிக மோசமானது. உண்மையில் நம் ஆசிரியர்கள் பாவம்.

தென்னாசியாவிலேயே இலங்கையில்தான் அரசாங்க ஆசிரியர்களுக்குச் சரியான ஊதியம் வழங்கப்படுவதில்லை என நினைக்கிறேன். யாழ். பல்கலைக்கழகத்தில் படித்துவிட்டு பாகிஸ்தான் சென்று கற்பிக்கும் யோசனையில் சில ஆசிரியர்கள் இருந்தார்கள். அங்கே நல்ல சம்பளம் என்றார்கள். சமூகத்தில் ஆசிரியர்களின் பணி மகத்தானது. அதுவும் சிறுவர் பள்ளி ஆசிரியர்கள் மிக முக்கியமானவர்கள்.

உண்மையில் பெருவிருப்பத்தோடும், ஆர்வத்தோடும் இளைஞர்களாக கற்பிக்க வரும் ஆசிரியர்கள் சில வருடங்களில் தேங்கி, சலிப்படைந்து விடுகிறார்கள். அவர்களில் சிலர் கேலிக்குள்ளாகிறார்கள். சிலர் வன்முறையாளர்களாகிறார்கள். பலர் எப்போதும் உற்சாகமாக மாணவர்களோடு தம்மையும் புதுப்பித்துக் கொள்கிறார்கள். அவர்கள் போற்றுதலுக்குரியவர்கள். வளர்ந்த நாடுகள் போல, எந்தத்தொழிலைச் செய்தாலும் தன்னிறைவான வாழ்க்கையொன்றை வாழமுடியும் என்கிற நிலை இருக்கவேண்டும். அதன்பின்பே செய்யும் தொழிலில் 'சேவை', 'அர்ப்பணிப்பு' என்கிற பேச்செல்லாம்! ஆரம்பப் பள்ளியிலேயே நாம் கொடுமைகளுக்கு பழக்கப்பட்டிருந்தோம். அந்த ஆசிரியர்களில் சிலர் உளவியல் ரீதியான பாதிப்புக்குள்ளாகி இருந்திருக்கலாம். அவர்களை நம்பிப் பிஞ்சுகளை ஒப்படைப்பது மிகக் கொடூரமானது. ஒரு கணத்தில் அன்பே உருவாகப் பேசும் ஆசிரியர்கள், அடுத்த கணத்திலேயே பெரும் வன்முறையாளராகி விடுவார்கள். ஐந்தாம் ஆண்டில் ஸ்கொலர்ஷிப் படிப்பில் எங்கள் ஆசிரியர் புள்ளி குறைந்தவர்களை அடிப்பது ஒரு சடங்கு. ஒரு தும்புத்தடியின் பாதி அளவு விட்டத்தில் பெரியதொரு தடிப்பால் பின்பக்கத்தில் ஓங்கி அடிக்கும்போது, 'ப்ளடி ஃபூல்' என்று பல்கலைக் கடித்து உறுமியவாறு அடிப்பார்.

பின்னொரு முறை நானும் ஜனகனும் பேசிக்கொண்டிருந்தோம். 'எப்படி அவரால் முடிந்தது?'. அவரது மூத்த மகன் இயக்கத்திற்குச் சென்றதிலிருந்துதான் இப்படி ஒரு பாதிப்பு அவருக்கு என்றான். அப்போதுதான் ஒரு விஷயம் புரிந்தது. அவரது கடைசி மகன் எங்கள் வகுப்புதான். வேறொரு டிவிஷனில் படித்தான். ஒழுங்காக வீட்டுப்பாடங்கள் எதையும் செய்யமாட்டான். புத்தகங்கள் கொண்டுவர மாட்டான். அவன் வகுப்பாசிரியர் அவனை நேராக எங்கள் வகுப்புக்கு தகப்பனிடம் கூட்டி வந்துவிடுவார். எங்கள் வகுப்பிலோ பயிற்சிப்புத்தகம் கொண்டுவராமல் விடுவது ஏறக்குறைய கொலைக்குற்றம். மகன் மீதான புகார்களைக் கூறும்போது கொஞ்சம் முறைத்தபடி கண்டிக்கும் பாவனையில் பேசுவார்.

அவனோ ஏதோ பாராட்டுரையைக் கேட்பதுபோல சிரித்தபடி நிற்பான். அவன் சிரிப்பைப் பார்க்க எங்களுக்கே நாலு அப்பு அப்பலாம் போலிருக்கும். பாவம் பெற்ற தந்தை அவருக்கு மட்டும் அந்த ஆசை இருக்காதா? அவனும் இயக்கத்திற்குப் போய்விடுவான் என்ற பயம் அவருக்கு இருந்திருக்கக்கூடும். அது அவருக்கு மேலதிக உளவியல் தாக்கம்தான். அதனாலென்ன? சற்று நேரத்தில் எங்கள் வகுப்பில் யாரோ ஒருவன் சிக்குவான் இல்லையா? சேர்த்துக் கவனித்துக் கொள்வார்! இதுபற்றிப் பின்னர் நண்பன் பார்த்தியிடம் பேசிக்கொண்டிருந்த போது, ஒரு சந்தேகம் வந்தது. அது இன்னொரு ஆசிரியர் பற்றியது. வேட்டையாடும் மிருகம் போன்ற பளபளக்கும் கொள்ளிக் கண்கள். சிரிக்கும்போது இன்னும் பயமாக இருக்கும். இன்னும் பளபளக்கும் விழிகள். குரூரமான சிரிப்பு. அவருக்குப் பயந்து இரண்டு பேர் வேறு பள்ளிக்குச் சென்றிருந்தார்கள். அவர்பற்றித்தான் கேட்டேன். 'அந்தாளுக்கு என்ன பிரச்சினைடா? என்ன பாதிப்பு?'பார்த்தி யோசிக்காமல்,அவசரமாக சொன்னான், "அவன் பிறவி சைக்கோ!" ஒரு வகையில் வன்முறைக்கு உள்ளாகுபவனுக்கு எந்தப் பாதிப்புமில்லை அல்லது பழகிவிடும். கடந்து போய்விடுவான். ஆனால் பக்கத்திலிருந்து பார்ப்பவன் நிலைமை மோசமானது. தற்காப்பு உணர்வும், எச்சரிக்கையான அவதானிப்பும் ஒரு தத்தளிப்பான நிலையில் மனதை எப்போதும் வைத்துக்கொள்ளும்.

அப்படியான சந்தர்ப்பங்களில் பயந்திருக்கிறேன் எங்கே நானும் எழுத்தாளனாகி விடுவேனோ என்று. நண்பர்கள் புண்ணியத்தில் அப்படியொரு அசம்பாவிதம் நிகழவில்லை. புவி என்றொரு பேர்வழி. நல்ல உயரமாக கச்சலாக நிற்கவே தெம்பில்லாத மாதிரி ஆடிக்கொண்டே இருப்பார். இளைஞர்! எப்போதும் தோளுக்கு மேலே ஓங்கியபடியே இருக்கும் கையில் பிரம்பு ஆடிக்கொண்டிருக்கும். ஆஸ்துமா இருக்கவேண்டும். இழுத்துக் கொண்டிருக்கும். வாயைத் திறந்தால் குப்பை கூளங்களைப் பறக்கவைப்பதுபோல காற்று 'ஹூய்ய்ய்' என்று வரும். கிரீச்சிடும் குரலில் பேச முயற்சிப்பார். அவர் என்ன பாடம் படிப்பிகிறார்? எதுவும் தெரியாது. இங்கே என்னதான் செய்துகொண்டிருந்தார்? தெரியாது! ஆனால் நாம் என்ன செய்திருந்தாலும் செய்யாவிட்டாலும் எப்படியும் அடித்துவிடுவார் என்று மட்டும் தெரியும். சிலருக்கு அவர் மனிதர்தானா என்றே சந்தேகம். இன்னும் சிலரோ ஒருபடி மேலே போய், 'புவி செத்துப்போய் மூன்று வருசமாச்சு' என்று நம்பிக்கொண்டிருந்தார்கள்.

ஏதோ ஒரு அசுபயோக அசுப தினத்தில் புவியிடம் விசாரணையில் மாட்டிக்கொண்டேன். "உய்ய்ய் எங்க கர்ர்ர் யார்ர்?"உ ஹ்ஹ்ஹ் ர்ர்ர்ர் எந்த கிளாஸ்? சொல்லு" சரமாரியாக கேள்விகள். முதல் கேள்விக்குப் பதில் சொல்ல அவகாசமில்லை. அடுத்தடுத்து கேள்விகள். வழக்கம்போல பதிலை எதிர்பார்க்கவில்லை என்பது புரிந்தது. கையில் பிரம்பு ஆடிக்கொண்டிருந்தது. சரமாரியாக இரண்டு முறை என் தோளுக்கருகே அடி விழுந்தபோது

( 18 ஆம் பக்கம் பார்க்க)

**எரிகிற வீட்டில்...** (17ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று மாதத்திற்குள் கடம்பன் வீட்டில் ஒரே ஆண்கள், பெண்கள் கூட்டமாக வீடு அமர்க்களப்பட்டது. ஊரில் எல்லோருடைய கையிலும் காசு புழங்கியது. ஊர் களை கட்டியது. சிலர் ஏதோ சிறிய அளவில் தொழில்களையும் தொடங்கியிருந்தனர். கடம்பனின் தலைமையில் நிதி வழங்கும் நிறுவனம் பெரியதொரு நிகழ்ச்சியை யும் சில கூட்டங்களையும் நடத்தியிருந்தது. கடம்பன் வீட்டுக்கு வாகனங்கள் வந்து போயின.

எட்டாவது மாதம் கதை மாறியது. காசு கட்ட மறுத்தவர்கள் என்றும் மறந்தவர்கள் என்றும் ஒரு பட்டியலோடு வந்து கடம்பனின் முன்னே நின்று சற்று உரக்கக் கதைத்தான் ஒருவன். அவன், முன்னர் வந்த இரண்டு பேரின் நிறுவனத்தைச் சேர்ந்தவன். வந்த நேரம் தொடக்கம் வள் சுள்ளென்றே எரிந்து விழுந்தான். அவனோடு கூட வந்த மேலும் இரண்டு பேர் கடம்பனைப் பொருட்படுத்தாமல் ஏறுக்குமாறாகக் கதைத்தனர்.

கடம்பனுக்கு இதெல்லாம் பிடிக்கவே இல்லை. அதுவும் வீட்டுக்கு வந்து ஊராக்களுக்கு முன்னுக்கு வைத்து இப்படிக் கதைக்கிறதில விருப்பம் இல்லை.ஏதாவது பிரச்சினை எண்டால் நான் நேரில மனேஜரிட்ட வாறன். இஞ்ச வீட்டில வைச்சுத் தேவையில்லாத கதைகளைக் கதைக்க வேண்டாம்" என்று கடம்பன் சொன்னார். அப்படிச் சொன்னதுதான் தாமதம், "வீட்டில வைச்சுக் காசு வாங்கலாம். குடுக்கலாம். வீட்டில வைச்சுக் கணக்குப் பார்க்கலாம். கடன் காசைப்பற்றித்தான் கதைக்கக் கூடாதோ.. இதிலதான் உங்களுக்கு ரோசம் வருகுதாக்கும்.." என்றான் அவர்களில் ஒருவன்.

"கொஞ்சம் மரியாதையாகக் கதையுங்கோ. நான் ஒண்டும் சும்மா உங்களிட்டக் காசை வாங்கேல்ல. கடனாகத்தான் வாங்கினன். அதுவும் கையெழுத்துப் போட்டுத்தான் வாங்கினன். அதுக்கு வட்டியும் கட்டிறன்.. பிறகென்ன இதில் சலுகையும் சான்சும்....?" கொஞ்சம் சூடாகப் பதில் சொன்னார் கடம்பன்.

ஓ... நீங்கள் அப்பிடிச் சொல்றீங்களோ..." இப்படியே சூடான விவாதம் ஏறக்குறையச் சண்டையில் போய் முடிந்தது.இதெல்லாம் முடிந்து இரண்டு நாளில் ஒரு கடிதம் கடம்பனுக்கு வந்திருந்தது. அதில் ஏராளம் நிபந்தனைகளும் கண்டிப்பான உத்தரவுகளும் கட்டளைகளும் இருந்தன.

அதையெல்லாம் அவருடைய மனைவி படித்துக் காட்டினாள்.

அவள் படித்துக் காட்டிக் கொண்டிருக்கும்போதே கடம்பன் மயங்கிச் சரிந்து விட்டார். ஒருவாறு அங்கிருந்தவர்கள் எல்லாம் கடம்பனைத் தாங்கித் தேற்றி, கண் விழிக்க வைத்து, ஆறுதல் சொன்னார்கள். ஆனால், கடிதம் அந்த ஆறுதல்களையெல்லாம் கரைத்துக் கொண்டிருந்தது.

மறுநாள் கடிதத்தோடு மனேஜரிடம் போனார் கடம்பன். மனேஜர் சொன்னார், இது என்ரை வீடில்ல. இது ஒரு தனியார் நிறுவனம். இதுக்கெண்டு சட்டங்களும் விதிகளும் உண்டு. அதன்படிதான் உங்களோட கொடுக்கல் வாங்கல்கள் நடந்தன. உங்கட சம்மதத்தோடதான் எல்லாம் நடந்தது. அதற்கான சான்றுகளும் எங்களிட்ட இருக்கு. உங்கட கையெழுத்துப் போட்ட படிவங்கள் சாட்சி சொல்லும். இதில நான் ஒண்டும் செய்ய முடியாது. நீங்கள் ஒழுங்காக கணக்குகளைச் சீர் செய்யத்தான் வேணும். நீங்கள் அறிமுகப்படுத்திய ஆட்களுக்கு நீங்கள்தான் பொறுப்பு.

அவையள் உங்களுக்குத் தெரிஞ்ச ஆட்கள். உங்களுக்கூடாகத்தான் எங்களுக்கு அறிமுகமானவர்கள். ஏதோ நீங்கள்தான் பார்த்துச் செய்ய வேணும். ஒரு இரண்டு கிழமை அவகாசம் குடுக்க வேணும் எண்டு நான் மேலிடத்துக்குச் சிபாரிசு செய்ய முடியும். அதை உங்களுக்காக நான் செய்கிறன்... என்று முடித்துக் கொண்டார் மனேஜர்.

வீடு திரும்பிய கடம்பனுக்கு வாழ்க்கையே இருண்டது. அடுத்து வந்த மாதங்களில் பொலிஸும் கடன்காரரும் நிதி நிறுவனக்காரரும் வழக்கு அழைப்பாணையும் கடம்பனைத் தின்னத் தொடங்கின. வீட்டிலிருந்த கோழிகள் அறா விலைக்கு விற்கப்பட்டன. மாடுகளும் ஆடுகளும் கூட அப்படித்தான். வீட்டுப்பொருட்களையும் விற்றுக் கட்டியும் கடன் அடங்க மறுத்து வளர்ந்து திமிறியது. இப்போது கடம்பன் வீட்டை விட்டுத் தலைமறைவாக இருக்கிறார். என்ன செய்வது, எங்கே போவது என்று தெரியவில்லை. கண் பார்வை இல்லாதிருப்பதையும் விடக் கொடுமையானது.தன்னுடைய நிதானத்தை இழந்ததுதான் என்று சொல்லிக் கொண்டிருந்தார், அவருக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்த பாட்டியிடம்.

## பள்ளிக்கால... (17ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோபம் தலைக்கேறியது. வகுப்பில் படிப்பிக்கும் எந்த ஆசிரியரிடமும் அடி வாங்கியதில்லை. பிரம்பைப் பிடித்து பறித்து இழுத்தேன். முறிக்க முயற்சித்தேன். அனிச்சையாக என் வலதுகை சற்று உயர்ந்தது சுட்டு விரல் ஏதோ சொல்லும் பாவனையில் நீண்டிருந்தது. சம்பவத்தில் புவி அதிர்ச்சியடைந்த மாதிரியிருந்தது. எதுவும் பேசவில்லை. மேலதிக விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டேன். விசாரணை அதிகாரி சம்பவம் பற்றிக் கேட்டதும், கன்னத்தில் ஓங்கி அறைந்தபோது கண்கள் இருட்டி மின்னல் வெட்டி ஒரு முழு வட்டத்தை சுற்றியிருந்தேன். சொல்லமுடியாது, அது மூன்று வட்டமாகக்கூட இருக்கலாம். என் சுட்டுவிரல் மடக்கப்பட்டபோது நியாயமாக என் அலறல் என் வகுப்புக்குக் கேட்டிருக்க வேண்டும். அநியாயமாகவோ, அதிர்ச்சியிலோ சத்தம் போடவில்லை. முகத்தில் சரமாரியான தாக்குதலில் கண் மங்கலாகத் தெரிந்தது. குத்து மதிப்பாக நடந்து வகுப்புக்குள் சென்றபின்னர் கவனித்ததில், சட்டைப்பொத்தான் ஒன்று அறுந்திருந்தது. வாய்க்குள் உதடு கிழிந்து உப்புக்கரித்தது. முகம் வீங்கியிருந்தது. வீட்டில் அப்பா கேட்டபோது. வகுப்பில் அடிதடி சண்டை என்றேன். பையன்களுடன் சண்டை என்பதால் மேற்கொண்டு எதுவும் கேட்கவில்லை. பிரச்சினை-யைச் சொல்லியிருந்தால் பள்ளிக்கு வந்திருப்பார். எனக்கு அவர் மீது எக்கச்சக்க கோபம் இருந்தது. சின்ன வயதில் சொல்லி வளர்த்துபோல ஸ்கொலர்ஷிப் இழவெல்லாம் பாஸ் பண்ணித் தொலைத்தும் என்னை யாழ் இந்துவில் சேர்க்காமல் கொக்குவில் இந்துவில் படிக்க விட்டது குறித்தது அது. அவருக்கு அதற்குக் காரணங்கள் இருக்கலாம். என்னால் ஒருபோதும் அந்தப் பள்ளியுடன் ஒன்றாகவே முடிந்ததில்லை. நாட்டுச் சூழல் காரணமாக நாலைந்து பள்ளிகளில் படித்திருந்தும் இரண்டு வருடங்கள் படித்த வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்தான் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. என் பள்ளிக்காலம் சுதந்திரமாக, சுவாரசியமாக இருந்தது அங்கேதான். ஒருவேளை அன்று அப்பாவிடம் சொல்லியிருந்தால் மறுநாளே பள்ளியை மாற்றியிருக் கக்கூடும்.

உண்மையில் பள்ளியிலேயே எனக்குத் தண்டனையாக மறுநாள் அப்பாவை அழைத்துவரச் சொல்லியி ருப்பார்கள். ஆச்சரியமாக அப்படி நடக்கவில்லை. அதையெல்லாம் விட எனக்குப் பெரிய கவலை ஒன்றிருந்தது. மேற்குறித்த சம்பவத் தில் நான் நொந்து நூடுல்ஸாகி வகுப்புக்கு வந்தது மட்டுமே சக மாணவர்களுக்குத் தெரியும். அதற்கு முன்னர் நான் நிகழ்த்திய அந்த வீரச்சம்பவம் யாருக்கும் தெரியாது. தெரிந்திருந்தால், கன்ரீனில் இலவச டீ, றோல் கிடைக்கும். வகுப்புத் தோழன் ஒருத்தன் என்னிடம் 'இனிமே எல்லாம் அப்பிடித்தான்' என்று சொல்லியிருப்பான். இதெல்லாம் நடக்காமல் போய்விட்டதே! அதன் பிறகு புவி என்னிடம் எதுவும் வைத்துக்கொள்ளவில்லை. பிறகு இடம்பெயர்ந்து சென்றபின்னர் நானும் கேள்விப்படவில்லை. புவியும் ஒரு விசித்திரமான மனிதர். அவருக்கு என்ன பாதிப்பு இருந்ததோ தெரியவில்லை. என் வலதுகை சுட்டுவிரலில் அவ்வப்போது சற்றுப் பிரச்சினை இருக்கிறது. அது எதனால் என்றும் புரியவில்லை!

## ஈழத் தமிழர்களும்... (07ஆம் பக்கத் தொடர்ச்சி)

போயிருக்கிறது.

ஈழத்தில் அகதிகளாக்கப்பட்ட மக்கள் இந்தியாவுக்கு உயிர் காக்க ஓடியதைப்போன்றே இன்று பங்களா தேஷில் 4 இலட்சம் வரையான ரோஹிங்கியா இன மக்கள் அகதிகள் அங்கு தஞ்சமடைந்துள்ளனர். மியான்மாரில் தொடர்ந்து நெருக்கடிகளுக்கு உள்ளாகிவரும் ரோஹிங்கியா முஸ்லிம்கள் அங்கிருந்து வெளியேறுவது அதிகரித்துள்ள நிலையில் மேலும் மக்கள் பங்களாதேஷை நோக்கிப் படையெடுக்கலாம் எனத் தெரிய வருகின்றது. இவ்வாறு உள்வரும் அகதிகளை அரவணைத்துக் கொண்டாலும் அவர்களை பராமரிப் பதில் பங்களாதேஷ் பெரும் நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்கிறது. கடந்த மாதம் 25 ஆம் திகதி ரோஹிங்கியாஆயுதப்படையினர் மியான்மரின் ராக்கைன் மாநிலத்திலுள்ள காவல் நிலைகளை தாக்கியதில், இராணுவத்தைச் சேர்ந்த 12 பேர் கொல்லப்பட்டனர். இதன் காரணமாகவே தற்போதைய இராணுவ ஒடுக்குமுறை ரோஹிங்கியா மக்கள் மீது கட்டவிழ்த்துவிட காரணமாக அமைந்தது. பங்களாதேஷை அடைவதற்காக நாஃப் நதியைக் கடக்க பல ரோஹிங்கியர்கள் முயன்றதில் நூற்றுக்கணக்கானவர்கள் மரணமடைந்தனர். இவற்றுக்கும் மேலாக பல இளைஞர்கள் ஆயுதப்படைகளால் வீதிகளில் சுட்டுக்கொல்லப்பட்டு சடலங்களை வீடுகளுக்குள்ளேயே போட்டு எரித்து அட்டகாசங்களில் மியான்மார் இராணுவம் ஈடுப்பட்டுள்ளனர். ஆனால் இவற்றையெல்லாம் சர்வதேச நாடுகள் ஈழத்தில் போர் உச்சக் கட்டமடைந்து கொத்துக் கொத்தாக தமிழர்கள் கொல்லப்பட்டபோது எவ்வாறு வாய் மூடி மௌனியாக இருந்ததோ அவ்வாறே மியான்மார் விடயத்திலும் எதிர்காலத்தில் தமது நலன்களுக்காக போர்க்குற்ற ஆதாரங்களைச் சேகரிக்கும் முனைப்பில் ஐ.நா ஊடாக செயற்பட்டுவருகின்றது. கடந்த வெள்ளிக்கிழமையன்று அந்த நதியில் 16 வரையான சிறுவர்களின் சடலங்கள் கரை ஒதுங்கியுள்ளன. இதுவரை படகு நீரில் மூழ்கியதால் சுமார் 40 பேர் வரை இறந்துள்ளனர். இவற்றுக்கும் மேலாக இராணுவ அடக்கு முறைக்குள் இருந்து உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு எல்லையைக் கடக்க முயலும் ரோஹிங்கியர்கள் பலர் சுட்டுக் கொல்லப்படுவதாகவும் தமது உறவுகளை எடுத்து அடக்கம் கூடச் செய்யமுடியாத நிலையில் அப்பகுதிகளிலேயே விட்டு விட்டு எல்லை தாண்டும் செயலில் ஈடுபடும் ரோஹிங்கியர்களின் நிலை ஈழத்தில் இறுதிப்போரில் தமிழர்கள் முள்ளிவாய்க்காலில் மூடிய சிறைக்குள் சிதைக்கப்பட்ட வரலாறுகளை மீட்டிப்பார்க்க வைக்கிறது. மியான்மார் இராணுவம் மற்றும் பௌத்த மதக் கும்பல்களின் அட்டூழியங்களால் கொல்லப்படும் ரோஹிங்கியர்கள் மீதான மனிதவுரிமை மீறல்களும் போர்க் குற்றங்களும் ஈழத்தமிழர்களின் போராட்ட வரலாறுகள் போலவே சர்வதேசத்தால் கண்டும் காணாமல் போகப்போவதே உண்மை.



# நடக்கப் போகிறார் நடராஜா

நவீன நகைச்சுவைத் தொடர் 14

— உமா சந்தோஷ் —

இரவு, சாப்பாட்டு மேசையில் பல வகையான சாப்பாடுகள் நிரம்பிக் கிடந்தன. டொக்டர் மச்சாளின் சினேகிதியின் வீட்டில் பிறந்தநாள் கொண்டாட்டம் என்று, அவள்தான் விதம் விதமான சோட் ஈற்ஸ், கேக், முறுக்கு மற்றும் பலகாரங்களை அனுப்பியிருந்தாள். அவற்றை எடுத்து சுவைத்தபடி டொக்டர் மச்சாளின் வருகைக்காகக் காத்திருந்தார் நடா. 'என்ன வந்தாலும் கொழும்புக்குப் போவதில்லை. அங்கை போனால் எல்லாரும் சேர்ந்து அதை இதைச் சொல்லி என்னைச் சரிக்கட்டிப் போடுவினம். அண்டைக்குச் சும்மா தவறி விழுந்ததாலை ஆஸ்பத்திரிக்குப் போய் காசைக் கரியாக்கி, அவங்களும் பெரிய இடமெண்டு கண்டவுடனை அந்த ரெஸ்ற், இந்த ரெஸ்ற் எண்டு முப்பது நாப்பதாயிரமெண்டு பில்லைப் போட்டு காசை வேண்டி - அதுக்காக வேண்டி என்னை டாவிற்றிஸ்காரனாக்கினவங்கள். பிறகு சாப்பாட்டைப் பற்றிக் கதைக்க எண்டு ஒரு நியூற்றீசன் டொக்டரைப் பாக்கச் சொல்லி அதுக்கு மூவாயிரம் கறந்தாங்கள்.

பிறகு நடக்கவேணுமெண்டு சொல்ல அதுக்குச் சப்பாத்து , ரீ சேட், மயிர் மண்ணாங்கட்டி எண்டு வாங்கின காசே ஒரு பிள்ளையின்ர சீதனத்துக்குக் காணும். டாவிற்றிஸ் சாதுவா இருக்கெண்டு ஆஸ்பத்திரியிலை சொன்னதுக்கே இந்த ஆட்டம் ஆடி, ரெலிபோன் எடுத்து ஊரைக் கூட்டி என்னை வருத்தக்காரன் ஆக்கினவள் என்ரை மனுசி. என்னை மடக்கி வீட்டுக்க வைச்சால், தான் நினைச்சபடி ஆடலாம் எண்டு நினைச்சிட்டா போலை. வாறாவாம். வரட்டும் ஒரு கை பாக்கலாம்" என்று மனதுக்குள் கிறாவிக் கொண்டிருந்தார் நடா.

நாய் குரைக்கும் சத்தம் கேட்டது. படலையை எட்டிப் பார்த்தார் நடா. டொக்டர் மச்சாள் வந்து கொண்டிருந்தாள். குனிந்த தலையை நிமிர்த்தாமல் பிளேற்றைப் பார்த்தபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தார் நடா. 'என்ன அத்தான் சாப்பிட்டிட்டியளே?" டொக்டர் மச்சாள்தான் ஆரம்பித்தார். 'ஓ! இண்டைக்குக் கன ஸ்பெஷல் வந்திருக்கு. எல்லாத்திலையும் தொட்டுத் தொட்டுப் பாத்திட்டன். இனி நீ வந்த பிறகு உன்னோட சேர்ந்து ஒரு பிடி பிடிக்கலாம் எண்டு இருக்கிறன்" என்று நடா சொன்னார். டொக்டர் மச்சாள் ஒரு 'பொடி வாஸ்" எடுத்துவிட்டு வந்து சாப்பாட்டு மேசையில் இருந்தார். நடாதான் தொடர்ந்தார். 'உன்ரை சகோதரம் என்ன சொன்னவா? எப்பவாறாவாம்?" 'காலமை பஸ்ஸிலை வருவா போல கிடக்கு. நீங்கள் அங்கை இங்கை சுத்திறியளாம், வருத்தம் வந்தா ஆர் பாக்கிறது. வந்து கொழும்புக்குக் கூட்டிக் கொண்டு வந்திடனுமாம்" என்று டொக்டர் மச்சாள் சொல்ல 'வரட்டும். இனித்தான் அவவுக்கு இந்த நடா ஆரெண்டு தெரியப் போகுது. விடவிட கதையும், சேட்டையம் கூட. இதுவரை காலமும் உழைச்சுப் போட்டது நான். எனக்கு என்னைப் பார்க்கத் தெரியும். வேலையிலை இருந்து நிற்கும் வரைக்கும் நான்தானே என்னைப் பார்த்தனான். கஸ்டம்ஸிலை இரவு பகலா உயாப்போட்டிலையும், ஹாபரிலயும் படுத்திருப்பம். என்ன இப்ப புதுசா?" என்று இடை மறித்தார் நடா. 'இல்லை அத்தான். அப்ப நீங்கள் யங்கா இருந்தியள். வயசு போகப் போக எல்லாம் மாறும்தானே? எல்லாத்திலயும் கொஞ்சம் கவன மெடுக்க வேணும். அவவும் உங்கடை நன்மைக்குத்தானே சொல்றா... தெரியுந்தானே?' என்றார் டொக்டர் மச்சாள். 'நான் திட்டவட்டமாச் சொல்லுறன். இனி கொழும்புக்குப் போறதா இல்லை. செத்தால் இஞ்சை கிடந்து சாகலாம். கொழும்புச் சீவியம் காணும். அப்பிடி நான் இஞ்சை இருக்கிறது உனக்குப் பிடிக்கேல்லை எண்டால் சொல்லு. வேறை இடம் பாக்கிறன். ஆகலும் மிஞ்சினா எனக்குக் கைதடி இருக்கு. பென்சனை அவைக்கு எழுதிப் போட்டு அங்கை போய் இருந்திடுவன். நான் அப்பிடிச் செய்தால் உங்கள் எல்லாருக்கும்தான் வெட்கம். என்ன?" நடா அவர் நிலையில் பிடிவாதமாயிருப்பதாய் தெரிந்தது. 'சரி சரி காலையில எல்லாத்தையும் பார்ப்பம். இப்ப படுங்கோ. நாங்கள் இருக்கேக்கை உப்பிடி எல்லாம் அத்தான் கதைக்கப்பிடாது. அப்பிடி நீங்கள் கைதடி வரைக்கும்போக உங்களை நாங்கள் விட்டிடுவமே? என்ன கதைக்கிறியள்? அவ்வளவுக்கு மனுசத் தன்மை இல்லாத ஆக்களே நாங்கள்? என்ன...?" டொக்டர் மச்சாள் கொஞ்சம் சூடாக இருப்பது போலத் தோன்றியது. 'அவள் உப்பிடித்தான். குழம்பமாட்டாள். குழம்பினாள் அவளோடை கஷ்டம். ஆனால் என்ரை மனுசியைக் காட்டிலும் மனுசத் தன்மை உள்ளவள். ஆக்களோடை குடுத்து வாங்கத் தெரியும். ஆனால் அவன்தான் வாக்கேல்லை. லோயர் எண்டாலும் இவளின்ரை குணத்துக்கு எதிர்மாறாத்தான் நடப்பான். நான் கட்டி வந்த பிறகுதான் இவளுக்கும் கலியாணம் பேசினவை. மாப்பிள்ளையைப் பார்த்திட்டு வந்த உடனை சொன்னனான். மாமா, மாமிக்கும் விருப்பமில்லை. லோயர் எண்டு என்ரை தான் ஒற்றைக்காலிலை நிண்டவள். அதாலை எந்த நேரமும் இவளோடை குழம்பினபடி. அதாலை எப்ப பார்த்தர்லம் கொழும்பிலை-தான். இடை சுகம் கந்தர்மடத்துக்கு வந்து போவான். ஆள் ஒரு றிசேவ் ரைப்' என்று நடா மனது பத்தும் பலதையும் எண்ணிக் கொண்டிருந்தது. நடா லைற்றை அணைத்துவிட்டுப் படுத்துக் கொண்டார். உறக்கம் வராததால் அங்கும், இங்குமாய் புரண்டு புரண்டு படுத்துப் பார்த்தார். கண்ணயர்வதும் திடுக்கிடுவதுமாகக் கிடந்தார். எழுந்து போய் தண்ணீர்ப் போத்தலை எடுத்து ஒரு முறடு விட்டுப் பார்த்தார். பலகாரம் நெஞ்சை எரித்துக் கொண்டிருந்தது. 'ஒரு மல்லிக் கோப்பி குடிச்சால் நல்லது. ஆரை எழுப்பலாம் இந்த நேரத்திலை" என்ற எண்ணவும் வேலைக்காரி எழுந்து பாத்ரூமுக்குப் போய் வரவும் சரியாயிருந்தது. அவள் கோப்பி கொண்டு வரும்வரை காத்திருந்தார் நடா. சில நேரங்களில் உப்பிடித்தான். சரிய்ான நேரத்திலை ஆரும் வருவினம். கடவுள் அனுப்பி வைச்ச மாதிரி. இப்ப நீ அப்பிடி வந்திருக்கிறாய். சரியான நெஞ்செரிவு' என்று வேலைக்காரியைப் பார்த்துச் சொன்னார் நடா. 'ஐயா மேசையிலிருந்து ஒரு பிடி பிடிக்கேக்கையே யோசிச்சன். ஆனா எப்பவும் இல்லைத்-தானே?' என்றாள் வேலைகாரி. நடா அவளுக்கு அன்று பகல் மருதனார் மடத்திலை நடந்த அத்தனை கதைகளையும் விலாவாரியாகச் சொன்னார். கள்ளு. மீன்கறி, முட்டைப் பொரியல் என்று ஒன்றையும் விடவில்லை. மச்சாளின் அன்பையும், அரவணைப்பையும் கூடச் சொன்னார். 'ஐயா. நீங்கள் இஞ்சையே நில்லுங்கோ. வடிவா உங்களைப் பார்க்க இஞ்சைதான் ஆக்கள் கனக்க இருக்கினம்.' என்று மெதுவாகக் காதுக்குள் சொன்னார்.

காலடியிலிருந்து வேலைகாரி நடாவின் கால்களைப் பிடித்து விட்டார். உளைவுக்கு இதமாயிருந்தது. கொழும்பில் இது வெல்லாம் சாத்தியமா?

(தொடரும்)

## உயிர் கொல்லும் வலிகள்...

தனிமையில் உழலும்
தூரதேச வாழ்வில்
துயர்மிகு கனவுகள்
பல நாள் தூக்கம்
கலைத்து விடுகிறது விழியில்

வெளியில் சொல்ல முடியாத
பல கவலைகள்
ஆத்மாவை கட்டிப்போடும்

இரவுகளில்...
கனவுகளின் கொடூரமும்
களைத்துப்போன
உடலை உடைத்துப்போடும்

மனைவி பிள்ளைகள் பற்றிய
கவலைகள் ஒரு புறம்...
தாயகம் பிரிந்த பெருவலி மறுபுறம்...
வலிகளின் மேலே வலிகளை ஏற்றும்

அடுத்தவன் ஊருக்கு போகும் போது
அவனை பார்த்து
உதடுகள் புன்னகைத்தாலும் மறுகணம்.
நாம் எப்போது
ஊருக்குப் போவோம் என்ற
படபடப்பு பரிதவிக்கும்

வீட்டுக் கஷ்டங்களை
நினைத்தால்
நாட்டு நினைவுகள்
மறந்துவிடும்
இருந்தாலும்
அடி மனதில்
இளைப்பாறி மீண்டெழும்

மாதச் சம்பளம் எடுத்தவுடன்
நமக்கு கையில் பணம்
இல்லா விட்டாலும்
பரவாயில்லை
வீட்டுக்கு முதலில்
பணம் அனுவிட்டு
பணம் கையில்
கிடைத்துவிட்டது என்று
அவர்கள் சொல்லும்
ஒற்றை வார்த்தையில்
ஒரு மாதப் பசிகூட மறந்துபோகும்

பசிக்கிற வயித்துக்கு
பதில் சொல்ல வேண்டி
பெப்ஸி டப்பாக்களை
பொறுக்கி விற்பேன்
ஊரில் துச்சமாக
எண்ணிய பணியது
இங்கு இஷ்டப்படி செய்வேன்
அஞ்சி அஞ்சி உழைத்து
குடும்ப கஷ்டம் நீ. க்க...

**-நிதாகரன் கதிகரன்**
**-மட்டக்களப்பு**





# காணி நிலம் வேண்டும்

- க.செந்தூர்வேல் -

எங்கள் ஊரில் யாழ். நகரில் உள்ள பெருமாள் கோவில் பெயரில் வயல் நிலங்கள் உள்ளது. ஏன், தமிழ்நாட்டின் சிதம்பரத்தில் குடியிருக்கும் சிவனுக்கும், மதுரை மீனாட்சியம்மனுக்கும் கூட அவர்களது பெயரில் வயல் நிலங்கள் உள்ளன. அதுக்கும் மேல் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் உள்ளவர்களின் பெயர்களிலும் வயல்நிலங்கள், மேட்டுக்காணிகள் யாழ்ப்பாணத்தில் உள்ளன. ஆனால் ஊரில் பரம்பரை பரம்பரையாக ஏழு எட்டுத்தலைமுறைகளாக வேளாண்மை செய்யும் பல விவசாயிகளிடம் ஒரு பரப்பு வயல் நிலம் கூட சொந்தமாக இல்லை. இவ்விடயங்கள் பலருக்கு வியப்பாக இருக்கலாம். ஆனால் நிதர்சனமான உண்மை இது தான்.

இவற்றை ஆராய வெளிக்கிட்டால் பல உண்மைகளைக் கண்டறிய முடியும். எங்களுக்குச் சொந்தமான வயல் நிலங்களைக் கூட யாழ்ப்பாணம் நல்லூரடியைச் சேர்ந்த ஒரு அப்புக்காத்திடம் இருந்து தான் 1962 காலப்பகுதியில்லிலைக்கு வாங்கியதாக அம்மப்பா சொல்லியிருக்கின்றார். காணி உறுதிப்பத்திரத்திலும் அவ்வாறு தான் உள்ளது. ஆனால் அந்த அப்புக்காத்துக்கோ அவரது சந்ததிக்கோ எங்கள் ஊருக்கும் எந்தவொரு பந்தமும் இல்லை. ஆனால் எப்படிக் காணித் தொடர்புகள் ஏற்பட்டது என்பது புரியாத புதிர். முன்னைய காலங்களில் இருந்த அப்புக்காத்துமார் மற்றும் விதானைமார் தரிசு நிலங்களாக இருந்த பல காணிகளை அபகரித்ததாகவும் சொற்ப பணத்திற்கு ஏழை விவசாயிகளிடம் வாங்கியதாகவும் ஊரில் உள்ள முன்னோர்கள் பேசுவதைப் பல தடவை கள்விப்பட்டிருக்கின்றேன்.

ஈழம் மற்றும் தமிழகத்தில் உள்ள கோயில்ககளின் பெயர்களில் உள்ள காணிகளின் பொறுப்பை பின்வரும் காலங்களில் ஆறுமுகநாவலரால் உருவாக்கப்பட்ட சைவபரிபாலசபையினர் நிர்வகித்து வந்தனர். இப்பொழுதும் நிர்வகிக்கின்றனர். சிலவற்றை கோயில் நிர்வாகிகளே நிர்வகிக்கின்றனர். இடைப்பட்ட சிலகாலம் கோயில் காணிகள் அனைத்தையும் மற்றும் உடைமையாளர்கள் ஊரில் இல்லாத காணிகளையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பொருண்மியத் துறையினர் பொறுப்பேற்று ஊரில் உள்ள காணியற்றவர்களுக்குப் பகிர்ந்தளித்தும் நிருவகித்து வந்தனர். 2009 மே மாதம் யுத்தம் நிறைவடைந்த பின்னர் எல்லாம் தலை கீழாக மாறியது போல தான் எங்கள் ஊரின் காணி உடைமைகளும் தலைகீழானது. முன்னைய காணிகளின் உடைகளையுடைய பரிபாலன சபைகளும், பராமரிப்பாளர்களும் விடுதலைப் புலிகளால் பகிர்ந்தளிக்கப்பட்ட தத்தமது காணிகளை தம்மிடம் கையளிக்குமாறும் இல்லையெனில் நீதிமன்றங்களிடம் உங்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்படும் என்று கூறியும் கையகப்படுத்திக் கொண்டனர். சிங்கப்பூர் மலேசியாவில் இருந்து கூட ஒருசிலரின் சட்டத்தரணியூடான கட்டளைக் கடிதங்களைப் பெற்றுள்ளோம் என்றும் காணிகளைக் கையகப்படுத்திக் கொண்டார்கள். ஒரு சிலர் விளைநிலங்களில் பயிர் செய்தவர்களையே தொடர்ந்து பயிரிட அனுமதித்து தமக்கான குத்தகை நெல்லைப் பெற்றுக் கொண்டார்கள். இன்றும் பல விவசாயிகள் வேளாண்மை முடிந்ததும் குத்தகை நெல்லை வாகனங்களில் யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளில் உள்ள சைவ பரிபாலன சபை, ஆலய பரிபாலன சபை மற்றும் தனிநபர்களின் வீடுகளுக்கும் கொண்டு சென்று வழங்குவதை காண முடியும். இவற்றை நாங்களும் ஆராயலாம். எங்கள் ஊரிலும் கடந்த காலங்களில் நிகழ்ந்த வகுப்புவாத ஒடுக்கு முறைகளையும் ஏற்றத் தாழ்வுகளையும் செவி வழிக் கதைகள் என்று புறந்தள்ளி விட்டு கடந்து விடமுடியாது. அப்படியாயின் மகாபாராதம், இராமாயணம், போன்ற புராணங்கள் இதிகாசங்கள் கூட செவிவழிக் கதைகள் தான். அவற்றை ஒரு போதும் செவி வழிக்கதைக் கதைகள் என்று கூறி நாங்கள் கடந்து விடவில்லை. ஆனால் இவற்றைக் தோண்டியெடுப்பதாலோ, திரும்பத் திரும்ப பேசிக் கொண்டிருப்பதாலோ இங்கே எந்தவொரு நன்மைகளையும் நாங்கள் கண்டு விடப் போவதில்லை. வீண் வாதப்பிரதிவாதங்களையும் பிரிவினைகளையுமே இவை ஏற்படுத்தப் போகின்றன. ஆனால் அவற்றை ஆவணப்படுத்துகின்றோம் எனக் கூறி சர்ச்சைகளைத் தோற்றுவிக்கும் புத்தகங்களை எதிர்க்கும் அல்லது தடுக்கும் உரிமை எமக்கில்லை. அவற்றைக் கண்டு கொள்வதைக் காட்டிலும் கருத்திலெடுக்காமல் விடுவது அத்தகைய நயவஞ்சகப் படைப்புக்களையும் படைப்பாளிகளையும் காலப்போக்கில் காணாமல் போபோகச் செய்யும். ஆனால் இத்தகைய படைப்புக்களுக்கான எதிர்வினைகளை கொடுக்கும் போதே அதற்கான பிரபலத் தன்மையும் அதிகரித்து அதனை வாங்கிப் படிக்க வேண்டும் என்ற ஆவலை தூண்டுகின்றது. அவர்களது நோக்கமும் அதுவே. அதற்காகவே எழுத்து விபச்சாரிகள் அத்தைகைய சர்ச்சைக்குரிய தலைப்பிடும் உத்திகளைக் கையாள்கின்றனர். ஆனால் அதனை எதிர்க்கின்றோம் என்ற போர்வையில் அதற்கு எதிரான மோசமான விமர்சனங்களை முன் வைத்து விற்பனையை அதிகரிக்கச் செய்வது என்னமோ தமிழ்த் தேசியவாதிகள் தான். இறுதியாக, அத்தகைய புத்தகம் போல் ஊரில் உள்ள பழைய வகுப்புவாதங்களையும் காணியுடைமைகளையும் வைத்து ஒன்றல்ல பத்துப் புத்தகங்கள் என்னால் எழுதி ஆவணப்படுத்த முடியும். அதற்குரிய ஆதாரங்களைக் கூட பல முதியவர்களிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். இத்தகைய வேர்களையும் கொப்புக்களையும் தேடிக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் முப்பது வருடங்களாக அறுபதாயிரம் மாவீரர்களையும் மூன்றரை இலட்சம் மக்களின் உயிர்களையும் குருதிகளையும் உரமாக்கி தான் தமிழ்த் தேசியம் என்ற ஆலமரம் பெரும் சோதனைக்கு உள்ளாக்கிக் கொண்டுள்ளது.

ஆக எண்ணற்ற தியாகங்களால் அந்தப் பதினாறு வயதுச் சிறுவன் இரவு பகலாகப் பார்த்துப் பார்த்து வளர்த்தெடுத்த மிகப் பெரும் ஆலமரத்தை அற்ப ஏவல்களின் தேடல்களுக்காகவும் இலக்கியம் என்ற பெயரில் வெளியிட முனைவது கோடரியை எடுத்து அவ் பெரு விருட்ச மரத்தைத் தறிக்க நாங்களே கொடுப்பதற்கு ஒப்பானது. எந்தவொரு மாவீரனும் பிரதேசவாதமோ வகுப்புவாதமோ பார்த்துப் போரிட்டு மடியவில்லை. ஒவ்வொரு தமிழர்களைக் கொல்லும் போது கூட பேரினவாதம், பிரதேசவாதமோ வகுப்புவாதமோ பார்த்துக் கொல்லவில்லை. அனைவரும் தமிழர்கள் என்று தான் ஒவ்வொரு எதிரியும் கணித்தான். இதை உணரும் எவராலும் வகுப்பு வாதத்தையோ பிரதேச வாதத்தையோ தலைதூக்க விடமாட்டார்கள்.

# தமிழ் மக்கள்... (05ஆம் பக்கத் தொடர்ச்சி)

**மூன்றாவது முஸ்லிம்கள் பற்றியது...**

அண்மையில் மட்டக்களப்பில் "எழுக தமிழ்" கூட்டம் முடிவடைந்த பின்னர் முஸ்லிம் பள்ளிவாசல்கள் பலவற்றின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுடன் கருத்துப் பரிமாற்றம் நடந்தது. முஸ்லிம்கள் வடக்கு, கிழக்கு இணைப்புக்கு எதிர் என்று சிங்கள மக்களும் தமிழ் மக்களில் சிலரும் கூறிக்கொண்டு திரிந்தாலும் உண்மையான பாரம்பரிய தமிழ் பேசும் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் அவ்வாறு சிந்திக்கவில்லை என்பதை அந்தக் கூட்டத்தில் தெரிந்து கொண்டோம். முஸ்லிம் மக்களுக்கு ஒரு போதுமான அலகைக் கொடுத்தால் வட, கிழக்கு இணைப்புக்குத் தாங்கள் ஆட்சேபணை இல்லை என்ற விதத்திலேயே அவர்களின் கருத்துப் பரிமாற்றங்கள் இருந்தன. இதனை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**பூகோள அரசியல் எம்மைத் தாக்குவது பற்றியது...**

இது மிக நுணுக்கமாகச் சிந்திக்க வேண்டிய ஒரு விடயம். மகிந்த ராஜபக்சவை வெளியேற்றியதில் வெளிநாட்டுச் சக்திகளின் பங்கேற்பு வெகுவாக இருந்தது. நாம் எமது உள்ளர். அரசியல் சிந்தனைகளில் சஞ்சரித்துக் கொண்டிருக்கப் பிற நாடுகள் தமது நாட்டு நலன் விரும்பி நகர்த்தல்களை மேற்கொண்டு வருகின்றார்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

**அரசமைப்பு உருவாக்க முயற்சிகளின் போக்குப் பற்றியது...**

பேசுவது எதுவாக இருந்தாலும் நடைமுறையில் எதனை இதுவரை சாதித்து விட்டோம் என்பது தான் முக்கியம். ஜெனிவாவில் கொடுத்த வாக்குறுதிகளில் தமிழர் சார்பாக எவற்றையாவது முழுமையாக நிறைவேற்றியுள்ளார்களா என்ற கேள்விக்கு அரசாங்கம் பதில் தரவேண்டும். மேலும் இரண்டு வருடங்கள் தேவை என்று கோரி அதனையும் பெற்றுவிட்டார்கள். அப்படியிருந்தும் முன்னேற்றம் காணப்படுவதாகக் கூறமுடியாத நிலையே இன்றும் நிலவுகின்றது.

இவ்வாறு பேசப்படவுள்ள தலைப்புகள் குறித்து வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முதலில் விளக்கவுரை ஒன்றை வழங்கி மக்களை தெளிவுபடுத்தினார்.

**ம.நிலாந்தன் – அரசியல் ஆய்வாளர்**

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற மூன்று சக பாடிகளையும் உள்ளடக்கித்தான் வரப்போகும் புதிய யாப்பு அமைக்கப்பட வேண்டும். அப்போதுதான் இறந்த காலத்திலிருந்து பாடங்களைக் கற்றுக் கொண்டதாக அமையும். தமிழர்களை சரிநிகர்பாடிகளாக ஏற்றுக் கொண்டதாக அர்த்தம். தேசமாகச் சந்திப்பது என்பதும் அதுதான். ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரையில் தேசம் என்பது ஏற்கனவே இருந்த ஒன்று அது விட்டுக் கொடுக்கப்பட்ட உளவியல் பண்பாட்டு யதார்த்தமாக நீடிக்கிறது. இதைத்தான 'நீங்க வேற நாடையா... நாங்க வேறு நாடையா... " என்று கூறப்பட்டது.

தேசமாகச் சிந்திப்பது என்பது தேசத்தின் அடிப்படை மூலக்கூறுகளை அழித்தொழிப்பதைத் தான் நாங்கள் இனப்படுகொலை என்கின்றோம். அது வெளிப்படையான இனப் படுகொலையாகவும் இருக்கலாம் அல்லது கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலையாவும் இருக்கலாம். ஈழத்தமிழர்கள் ஒரு வெளிப்படையான ஒரு இனப்படுகொலையைக் கடந்து வந்திருக்கிறார்கள். இந்த நூற்றாண்டின் முதலாவது இனப்படுகொலைக்கு உள்ளான மக்கள் நாங்களே.

இனப்படுகொலைக்கு எதிரான தீர்வுதான் இனப் பிரச்சினைகான தீர்வாகும்.

**கு.குருபரன் – யாழ்.பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளர்**

வெளிநாட்டு உடன்படிக்கையை ஏற்படுத்தக் கூடிய நிலைமாறும் தன்மை, அரசியல் தீர்வு ஏற்படக் கூடிய நிலைமாறு தன்மை, பொறுப்புக் கூறலில் இருக்கக்கூடிய நிலைமாறு தன்மை என்ற நிலைமாறு தன்மையின் மூன்று கட்டத்தில் உள்ளோம். முதலாவது வெளிநாட்டு உடன்படிக்கை முடிந்துவிட்டதாக கூறுகிறார்கள். சீன வெளிவுறவுக் கொள்ளை எதிர்த்து அமெரிக்காவையும், இந்தியாவையும் பகைக்காத அதேவேளை சீனாவையும் 'ஷேப்" பண்ணிக் கொண்டு போகும் நிலையும் அம்பாந்தோட்டைத் துறை முகத்தை அவர்களுக்கு கொடுத்துள்ளனர். அரசமைப்புச் செயற்பாடு தீர்வுடன் பின்னிப்பிணைந்துள்ளது என்று கூறுகிறார்கள். இதனூடாக வெளிநாடுகளையும் கையாள்கின்றனர். மீள யுத்தம் இடம்பெறாமல் இருக்க வேண்டுமென்றால் புதிதாக அரசியல் அமைப்பை உருவாக்குதல் என்ற நிலைக்குள் இவ்கள் வந்திருக்கிறார்கள்.

மகிந்த ராஜபக்ஷவால் வகுக்கப்பட்ட எல்லைகளைத் தாண்டி மைத்திரிபால சிறிசேனாவால் வரமுடியாதுள்ளது. ஏனென்றால் சிங்கள பௌத்த பெரும்பான்மையினரை தம் கைகளுக்குள் வைத்துக் கொள்வதற்கு இதனை விட்டால் வேறு வழியே இல்லை தமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதென்றால் மகிந்த ராஜபக்ஷ எடுத்த தீர்மானத்திலிருந்து எள்ளளவும் தாங்கள் மாறப்போவதில்லை என்று தெரிவித்தால் மட்டுமே அவர்களால் தொடர்ந்து ஆட்சி செய்ய முடியும். வாய்ப்பனைச் சாப்பிட்டுவிட்டு போண்டா என்று சொல்ல முடியாது எது ஒற்றையாட்சி? எது சமஷ்டி? என்று எமக்குப் புரியவில்லலை ஒரு பண்டத்தைச் செய்துவிட்டு அதை சிங்கள மக்களுக்கு போண்டா என்றும் தமிழ் மக்களுக்கு வாய்ப்பன் என்றும் தருகினம் இதனைச் சமஷ்டி என்றும் சொல்லலாம் ஒற்றையாட்சி என்றும் சொல்லலாம் இதுதான் இன்றைய நிலை

**சுரேஷ் பிறேமச்சந்திரன்**
**முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்**

அரசமைப்பு சாசனம் வருமா? வராதா? என்ற கேள்வி தற்போது எல்லோரிடமும் உள்ளது. இந்த அரசமைப்பு சாசனத்தின் இடைக்கால அறிக்கை பத்து நாட்களுக்குள் நாடாளுமன்றில் தாக்கல் செய்யப்படலாம் என்று சொல்லப்படுகின்றது. ஏற்கனவே இலங்கையில் இருக்கும் அரசமைப்பு சாசனம் ஒற்றையாட்சி என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. எனவே வரவிருககும் அரசமைப்பு சாசனம் எவ்வாறு இருக்கப் போகிறது என்பது எல்லோரின் எதிர்ப்பார்பாகவும் உள்ளது. யுத்தம் முடிந்த பின்பு சமாதான உடன்பாடு ஒன்று எட்டப்பட்டிருக்க வேண்டும். அதன் பிரகாரம் இந்த யாப்பு அமைக்கப்பட வேண்டும். நாங்கள் மீண்டும் மீண்டும் கேட்பது என்னவென்றால் அரசாங்கத்துடன் ஒரு முழுமையான சமாதானப் பேச்சு. அதில் வடக்கு, கிழக்கை இணைப்பது தொடர்பாகப் பேச வேண்டும், இது ஒரு மத சார்பற்ற நாடா என்பது பற்றிப் பேச வேண்டும் இப்படியான பேச்சுக்கள் இதுவரைக்கும் வெளிப்படையாக நடந்ததே இல்லை. இனி நடக்கவேண்டிய பேச்சாவது தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுத் தர வழிசமைக்க வேண்டும்.

**கே.ரி.கணேசலிங்கன்**
**அரசறிவியல் துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்.**

அரசியல்களம் என்பது ஒரு வகையில் தந்திரமானது.. வடக்கு, கிழக்கில் பூர்வீகமாக வாழும் தமிழர் மற்றும் முஸ்லிம்களின் தந்திரத்தைப் பற்றிதான் நாங்கள் தற்போது முதன்மைப்படுத்துகிறோம். ஏனென்றால் இந்த உலகில் ஒவ்வொரு நாட்டின் பின்னால் இருக்கும் அரசுகளுக்கு அவர்களின் நலன்களே முதன்மையானது. அதனை யாரும் மறுத்த விட முடியாது. இதில் இந்தியர்கள், சீனர்கள், அமெரிக்கர்கள் ஒவ்வொரு வடிவங்களில் செற்பட்டு வருகின்றனர். சரவஜன வாக்கெடுப்பு மூலம் அரசமைப்பு சாசனம் உருவாக்கப்படுமானால் அது எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றி மக்களுக்குத் தெளிவு படுத்தப் பட வேண்டும். ஏனெனில் இந்தப் புதிய அரசமைப்பு சாசனத்தின் பின்னால் பல தந்திரங்கள் ஒளிந்துள்ளன.

இந்தியர்கள், சீனர்கள், அமெரிக்கர்கள் எமது நாட்டைத் தந்திரமாகப் பயன்படுத்தும்போது, ஏன் எமது தமிழ்த் தலைமைகள் அதனைத் தவற விட்டுள்ளார்கள்? இனப் படுகொலையை சர்வதேச நாடுகள் தமக்கு இலாபமாகத்தான் பயன்படுத்தப் பார்க்கும் ஒரு போதும் அவர்களுக்கு எம் மீது கரிசனை ஏற்படப்போர்வதில்லை. 'எழுக தமிழ் கூட்டங்களின் பின் தமிழ் மக்கள் பேரவை தூங்கப் போய் விட்டதா என்ற கேள்வி எழுந்ததால்தான் நாங்கள் விழிக்கத் தொடங்கியுள்ளோம்". என்று முதலமைச்சர் கூறுவதன் ஊடாக தமிழ் மக்கள் பேரவையிலும் தற்பொழுது மக்கள் அதிருப்தி கொண்டுள்ளமை வெட்ட வெளிச்சமாகிறது. துமட்டுமின்றி தமிழ் மக்கள் பேரவை மட்டுமே மக்களின் வழிகாட்டி எனவும் அவர் நாசுக்காகச் வெளிப்டுத்தினார். 'நீங்க வேறு நாடையா? நாங்க வேறு நாடையா?" என்று முதலமைச்சர் சிங்களப் பேரினவாதத்தை அடித்துக் கூறியபோது அவையில் பலத்த கரகோசமும் உற்சாகமும் எழுந்தது. இதனூடாக மக்கள் எப்பொழுதும் ஒற்றையாட்சியை விருப்பவில்லை சமஷ்டியைத்தான் விரும்புகிறார்கள் என்பதை கோடிட்டுக் காட்டியுள்ளனர். தமிழ் மக்கள் பேரவையாகட்டும், கூட்டமைப்பாகட்டும் அவர்களின் கருத்துக்களை செவிமடுப்பார்களே தவிர மக்கள் தம் தீர்மானத்தில் இருந்து மாறப்போவதில்லை. ■





# அரியலூரின் மகளே அவசரப்பட்டுவிட்டாயே...!

'அரியலூரின் மகளே... அவசரப்பட்டு விட்டாயே! "ஆண்டவன் சோதிப்பது எல்லோரையும் அல்ல... உன்னைப்போலச் சாதிக்கத் துடிக்கும் புத்திசாலிகளை மட்டுமே' என்று சொன்ன, மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம்தான், 'உன் கைரேகையைப் பார்த்து எதிர்காலத்தை நிர்ணயித்து விடாதே... ஏனென்றால், கையே இல்லாதவனுக்குக் கூட எதிர்காலம் உண்டு' என்று சொன்னார். ஆனால் நீயோ, அந்த வரிகளை நினைக்காமல்... அவர் சொன்ன இன்னொரு பொன்மொழியான, 'நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம்... ஆனால், நமது இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்' என்பதை நினைவில் வைத்து உன் முடிவைத் தேடியிருக்கிறாயே? அவசரத்தில் நீ தேடிக்கொண்ட முடிவால், அரசாங்கத்தில் மாற்றமா நிகழ்ந்துவிடப் போகிறது? ஒருபோதும் நடக்காது. ஆனால், நீ எடுத்த இந்தத் தற்கொலை முடிவைக் கொஞ்சம் மாற்றி வேறு பாதையில் பயணித்திருந்தால், இன்னொரு சரித்திரத்தையும் நீ உருவாக்கியிருக்க முடியுமே... அதை ஏன் நீ உணராமல் போனாய்?

'உங்களுடைய கடந்த காலத்தைப் பற்றித் தெரிந்துகொண்டால்தான், உங்களுடைய எதிர்காலத்தைச் சிறப்பாகச் செதுக்க முடியும்' என்ற கன்பூசியஸின் வரிகளுக்கு மதிப்புக் கொடுத்து... பெற்றெடுத்துப் பெயர் வைத்து அன்னையைக் காப்பாற்ற உன் ஊரில் மருத்துவர் வசதியில்லாத நிலை அறிந்து வளர்ந்த நீயா, இப்படியொரு முடிவை எடுத்திருக்க வேண்டும்? 'நீட் தேர்வை எழுத மூன்று வாய்ப்புகள் உள்ளன இவ்வாண்டு தேர்வில் தோல்வியடைந்தவர்கள், அடுத்த வருடம்கூடத் தேர்வை எழுதி மருத்துவப் படிப்பில் சேர முடியும் இதுபோன்று தேர்வு எழுதி மருத்துவப் படிப்பில் பல மாணவர்கள் சேர்ந்துள்ளனர்' என்கிற வழி இருப்பதை நீ யோசிக்கத் தவறியது ஏன்? நீ மட்டுமா, நீட் தேர்வில் தோற்றுப் போயிருக்கிறாய்? இல்லையே... உன்னைப்போல் எத்தனையோ அனிதாக்களும்... எத்தனையோ அனிதன்களும்! இதே நிலைப்பாட்டில் இன்னும் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஒரு மாற்று வழியைத் தேடிக் கொள்ளும்போது நீ மட்டும் ஏன் மாற்றப்படாத ஒரு வழியைத் தேர்ந்தெடுத்தாய்?

தற்கொலைதான் அனைத்துக்கும் தீர்வென்றால், இந்திய நாடு ஜனத்தொகையில் இரண்டாம் இடத்தில் இருக்காது. தன்னம்பிக்கை இருப்பதால்தான் தள்ளாடும் மனிதர்களும் இந்தியாவில் ஜொலித்துக் கொண்டிருக்கிறார்கள். தன்னுடைய லட்சியப் பயணம் அமையாதபோது வாழ்க்கையின் தேவையைப் புரிந்து அடுத்த லட்சியப் பயணத்துக்கான வழியை அவர்கள் தேடிக்கொள்கிறார்கள். இது, இந்தியாவில் மட்டுமல்ல... உலகெங்கில் வாழும் மனிதர்கள் அனைவரும் இந்த வழியைத்தான் கடைப்பிடிக்கின்றனர்.

அதனால்தான் ஒருகாலத்தில் முகம் தெரியாமல் இருந்த மனிதர்கள் எல்லாம் இன்று முத்திரை பதித்துக் கொண்டிருக்கின்றனர். ஏன், நம் அப்துல் கலாம்கூட 'விமானி'யாக வேண்டும் என்றுதான் ஆசைப்பட்டார். ஆனால், சூழ்நிலை அவரை 'விஞ்ஞானி'யாக்கிக் காட்டியது. அதோடு மட்டுமல்ல... இன்றைய அரசியல் அவரை 'வீணை' ஞானியாகவும் ஆக்கிக் காட்டியது. அரசியல்தானே அனைத்தையும் தீர்மானிக்கும் சக்தியாக இன்று உருவெடுத்திருக்கிறது் அதுதானே, அதிரடியாய்ப் பல திட்டங்களை அறிவித்து மக்களையும், மாணவர்களையும் சாகடிக்கிறது் அதுதானே, உன்னையும் கொலைக் களத்துக்கு அழைத்துச் சென்றிருக்கிறது.

இவற்றுக்கெல்லாம் புரட்சி மட்டும்தான் தீர்வு... நீயோ பூச்சி?! உன்னால் என்ன செய்ய முடியும்? முயன்றவரை போராடிப் பார்த்தாய். முடியாமல் மனமுடைந்து இறந்துவிட்டாய். இதையா இந்த உலகம் உன்னிடம் எதிர்பார்த்தது? இல்லையே. அப்துல் கலாம் போல் எத்தனையோ மாபெரும் தலைவர்கள் தங்களுடைய லட்சியப் பயணம் நிறைவேறாமல் போனபோது, காலச் சூழ்நிலைக்கேற்ப மாறியிருக்கிறார்கள். மாறிக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதானே நிஜம்.

ஓர் இடத்துக்கு அவசரமாய்ச் செல்வதற்காகப் பேருந்து நிலையத்தில் காத்திருக்கிறோம். அரை மணி நேரமாகியும் பேருந்து வரவில்லையெனில், வேறு வாகனம் பிடித்து அந்த இடத்துக்குச் செல்கிறோம் அல்லவா? அதுபோல், உன்னுடைய மருத்துவக் கனவுக்குத் தடையாய் வந்து நின்ற நீட்டை எதிர்கொள்ள நீ சிந்திக்கத் தவறியது ஏன்? ஓர் ஊரின் மருத்துவக் கனவைச் சுமந்ததோடு... உன்னைப்போல் தமிழகத்தில் நீட் தேர்வுக்கு எதிராக நிற்கும் மாணவர்களின் பிரதிநிதியாக உச்ச நீதிமன்றம்வரை சென்று சட்டரீதியாகப் போராடிய நீ, நீட் தேர்வுக்கு நீதி கிடைக்காதபோது மாற்று வழியை அல்லவா தேடியிருக்க வேண்டும்? ஏன், மரணத்தின் வழியைக் கண்டுபிடித்தாய்? ப்ளஸ் டூ தேர்வில் விடியவிடியப் படித்து எல்லோரும் வியக்கும் வகையில் 1,176 மதிப்பெண் எடுத்த நீ, நீட் தேர்வை எதிர்கொள்ளவும் பயிற்சி எடுத்திருக்கலாம் அல்லவா? முடிந்தால் முடியாதது என்பதில்லையே. அப்படியிருக்கையில், 'இந்த வருடம் நீட் தேர்வில் தோற்றுவிட்டேன்' என்று அழுது கொண்டிருப்பதைவிட, 'அடுத்த வருடம் நிச்சயம் ஜெயிப்பேன்' என்பதை நினைவில் வைத்து நீ படித்திருக்கலாம் அல்லவா? ஏன், இந்தச் சிந்தனை உனக்குள் தோன்றவில்லை? மத்திய, மாநில அரசுகள்தான் இந்தப் பிரச்னைக்கு முழுக் காரணம் என உலகுக்கே தெரிந்தாலும் ஓர் உயிர் போனபிறகு, அந்தச் செய்தியை ஊடகங்களும் சமூக வலைதளங்களும் உலகுக்கு உணர்த்தும் அதேவேளையில், அந்தப் பெண் உயிரோடு இருந்த போது நீட் பற்றிய விளக்கங்களை ஏன் தெளிவாக்கவில்லை? மருத்துவராகும் கனவுகளுடன் காத்திருந்த கிராமப்புற ஏழை, எளிய மாணவர்களுக்கு... நீட் தேர்வுக்கான பாடத் திட்டங்கள், பயிற்சி வகுப்புகள் முதலியவற்றை அரசாங்கங்களும், ஊடகங்களும், சமுதாய அமைப்புகளும் வழிகாட்டியிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்குமா... அரியலூர் மகளின் இறப்பு அகிலத்துக்குத் தெரிந்திருக்குமா... அரசியல் தலைவர்களின் கண்டனங்கள்தான் பிரதிபலித்திருக்குமா? ஓர் உயிருடன் இந்தப் பிரச்னை முடிவுக்கு வரட்டும். இனி, ஓராயிரம் உயிர்களைக் காக்க அரசாங்கம் வழிவகை செய்யட்டும்.

'ஈரம் இருக்கும்வரை இலைகள் உதிர்வதில்லை... நம்பிக்கை இருக்கும்வரை நாம் தோற்பதில்லை' என்பதை இந்த மாணவச் சமுதாயம் நன்கு உணரவேண்டும். அறியாத வயதிலும்... எதுவும் தெரியாத நிலையிலும் இருக்கும் மாணவச் செல்வங்களுக்குப் பெற்றோர்களும், ஆசிரியர்களும் அவசியம் விழிப்பு உணர்வு ஊட்ட வேண்டும். 'ஒரு கதவு மூடப்படும்போது, மற்றொரு கதவு திறக்கிறது. ஆனால், நாம் மூடப்பட்ட கதவையே பார்த்துக் கொண்டு திறக்கப்படும் கதவைத் தவறவிடுகிறோம்' என்பதை இன்றைய மாணவச் சமுதாயம் புரிந்துகொண்டு செயல்பட வேண்டும்"

**இந்தியாவில் மருத்துவர் தகுதியை பெற நீட் பரீட்சையில் சித்தி அடைய வேண்டும் என்பது கட்டாயம். இது தேவையற்ற பரீட்சை என எதிர்ப்புக்கள் கிளம்பிய நிலையில், அதை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்த அனிதா என்ற மருத்துவ மாணவி கடந்த வாரம் தற்கொலை செய்து கொண்டார். அவரின் மரணம் தமிழ்நாட்டை மட்டுமின்றி இந்தியா முழுமையையும் விழிப்படையவும் – நீட் பரீட்சைக்கு எதிராக அனைவரையும் போராடவும் செய்தது. இந்நிலையில் விகடன் இணையத்தில் வெளியான 'அரியலூரின் மகளே அவசரப்பட்டுவிட்டாயே...!" என்ற தலைப்பில் வெளியான கட்டுரை இங்கு பிரசுரமாகிறது. பரீட்சை தோல்விகளால் தற்கொலை முடிவை நாடும் அனைவருக்கும் இக்கட்டுரை சமர்ப்பணம்.**

**– ஆசிரியர்**

# ரீடேர்ஸ் டயஸ்ற சஞ்சிகை பற்றி...

## It's Beginnings

DeWitt Wallace conceived the idea of a magazine containing **condensed articles** from many popular magazines while recovering from World War I injuries.




DeWitt & Lila Wallace

"நிறைய எழுத வேண்டுமானால் நிறையப் படிக்க வேண்டும். வாசகர்களுக்குப் பிடித்தமானவற்றைக் கொடுக்க வேண்டுமானால் தரமான கருத்தாழம் மிக்கவையாகக் கட்டுரைகள் அமைய வேண்டும். சட்டியிலிருந்தால் தானே அகப்பையில் வரும். இதற்காக அறிவைச் சேகரிக்க வேண்டும். அப்போதுதான் எழுதத் தொடங்கும்போது அவை வந்து பேனா முனையில் குவிந்து கிடக்கும். எப்போதும் எழுத்துக்களை வாசிக்கும் வாசகர்களை அந்தரத்தில் விட்டுச் செல்லக் கூடியனவாகக் கட்டுரைகள் அமையக்கூடாது.

வாசிப்பின் இறுதியில் அவன் குழப்பமற்றுக் காணப்பட வேண்டும். திருப்தியோடு அவன் வாசித்த படைப்பிலிருந்து விடுபட வேண்டும். நாவுக்கு ருசியான உணவைச் சாப்பிட்ட பின் அவற்றின் மிச்சங்களும், எச்சங்களும் பல்லிடுக்கில் இருந்து உணவின் தரத்தை எப்படி ஞாபகப்படுத்துகின்றதோ? அப்படியே ஒருவன் தான் வாசித்த விடயமும் அவனை இரை மீட்கச் செய்யக் கூடியதாகப் படைக்கப்பட வேண்டும். அவன் எப்பொழுதும் நினைவுகூரத்தக்க கருத்துக்களையும், உப கதைகளையும் உள்ளடக்கிய படைப்புகளும், தொகுப்புகளும் என்றும் பெறுமதியானவை. இதையே டி விட் வாலஸும் செய்தார். தான் படித்து ரசித்தவற்றை பிறரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதே அவரின் ஆதங்கமாக இருந்ததை அவர் எழுத்துக்களில் காணலாம். அவரின் வெற்றியும் அத்தகையதே."


- ஆசிரியர்

**முதல் சோதனை...**

அவர்களுக்குத் திருமணமாகி மூன்று மாதம்தான் ஆகிறது. டயஸ்ற் என்ற பெயரில் டி விட் வாலஸ் தயாரித்திருந்த இதழ் 14 இற்கு 19 செ.மீ. அளவு கொண்டது. அட்டையையும் சேர்த்து 64 பக்கங்கள். அட்டைக்கு என்று தனிப்பக்கம் கிடையாது. உள் பக்கங்களைப் போலவே ஒரே மாதிரியான வெள்ளைத்தாள்தான். உங்கள் சுண்டு விரலின் கனத்தின் பாதி அளவுக்குக்கூட இல்லாத ஒல்லியான பத்திரிகை. சட்டைப் பைக்குள் அடக்கி விடக்கூடிய வடிவம். கடுகு சிறிதென்றாலும் காரம் பெரிது என்றதை மெய்ப்பிக்கும் வகையில் உள்ளடக்கம். இரத்தினச் சுருக்கமாய்த் தகவல்கள். கற்பனைக் கதை கிடையாது. படம் இல்லை. வர்ணம் இல்லை. விளம்பரங்களும் இல்லை.

தெரிந்து கொள்ள வேண்டியவை தகவல்கள் - பயனுள்ளவை. வாழ்க்கையில் முன்னேற நினைப்பவர்களுக்கு உதவி செய்பவை. இவைதான் ரீடேர்ஸ் டயஸ்ற்றின் பலம். இந்த ஒல்லிக் குச்சிப் பத்திரிகை என்னத்தைச் சாதித்துவிடப் போகிறது. இப்படித்தான் பலரும் நினைத்தார்கள். இந்தத் தொழிலில் பழம் தின்று கொட்டை போட்டவர்கள் எல்லாம்கூட இந்தப் பத்திரிகை பெரிதாக எதையும் சாதித்துவிட முடியாது என்றே சொல்லிவந்தார்கள். இவர்கள் இவ்வாறு இரண்டு வருடம் வரையிலும் கருத்துத் தெரிவித்தார்கள்.

திருமணமான பிறகு டி விட் வாலஸூக்கு உதவி செய்யத்தக்க துணையாக லிலா வாய்த்திருந்தார். கொஞ்சம் பணமும் சேர்ந்திருந்ததால் டி விட் வாலஸ் நல்ல உற்சாகத்தோடு பத்திரிகையை வெளிக்கொணர்வதில் ஆர்வம் காட்டினார். தேவைப்பட்ட பணத்தில் பெரும் பகுதியை அவர் கடன் வாங்கித்தான் சமாளித்துக் கொண்டிருந்தார். என்றாலும் பத்திரிகைத்துறையில் புதியவரான டி விட் வாலஸ் பல அரிய சாதனைகளை நோக்கி நடைபோடலானார்.




**எதிர்பார்த்ததும் எதிர்பாராததும்**

தங்களுக்குத் திருப்தி ஏற்படவில்லை என்றால் செலுத்திய சந்தாவை திருப்பி வாங்கிக் கொள்ளலாம் என்ற உறுதிமொழியை அளித்தே டி விட் வாலஸ் வாசகர்களைக் கவர்ந்திருந்தார். ஒருவேளை வாசகர்களுக்கு இதழ் பிடிக்காமல் போய் சந்தாவைத் திருப்பித் தருமாறு கேட்க ஆரம்பித்தார்கள் என்றால் நிலைமை ரொம்பவும் மோசமாகிவிடுமே என்கிற அச்சம் டி விட் வ்ாலஸூக்கும் அவரது துணைவியாருக்கும் இருக்கத்தான் செய்தது.

ஆனால் அப்படி எதுவுமே நடக்கவில்லை. அது இன்னும் ஆச்சரியம். யாருமே தங்கள் சந்தாவை விலக்கிக் கொள்ள முன்வரவில்லை. பணத்தைத் திருப்பித் தாருங்கள் என்று கேட்கவில்லை. எனவே தாங்கள் தயாரித்து அளிக்கும் இதழ் வாசகர்களுக்குப் பிடித்திருக்கிறது என்று எடுத்துக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தார்கள் டி விட் வாலஸூம், லிலாவும் வந்து சேர்ந்திருந்த சந்தா தொகையை கொண்டு இரண்டாவது இதழையும் வெளிக்கொணர்வதில் அவர்கள் தீவிரமாக இருந்தார்கள். லிலா தான் பார்த்துக் கொண்டிருந்த வேலையை விடவில்லை. இந்தச் சம்பளம் வந்தால் குறைந்த பட்சம் வீட்டு வாடகையையேனும் கொடுக்க உதவுமே என்று வேலைக்குப் போவதை விடாமல் இருந்தார்.

நிறைய எழுதவேண்டுமானால் நிறையப் படிக்க வேண்டும். அதற்குப் பல பத்திரிகைகள் வாங்கவேண்டி இருக்கும். பணம் கொடுத்து அவற்றை வாங்குவதென்பது இயலாத காரியம். இந்தப் பிரச்சினைக்கு டி விட் வாலஸ் ஒரு தீர்வைக் கண்டு பிடித்தார். அது என்ன?

தினமும் நியூயோர்க் பொது நூலகத்துக்குச் செல்வார். அங்கு வகை வகையான பத்திரிகைகள் வந்திருக்கும். காசு கொடுத்து வாங்க வேண்டிய தேவை இல்லை. டி விட் வாலஸ் அங்கேயே உட்கார்ந்திருந்து படித்து விடுவார். ஒரு பத்திரிகையை எடுத்துப் படிப்பார். அந்த இதழில் இருந்து தயாரிக்கக்கூடிய வகையில் கட்டுரைகள் ஏதாவது கிடைக்கவில்லை என்றால் சோர்ந்து போய்விட மாட்டார். அதே இதழின் முந்தைய பிரதிகளைத் தேடி எடுத்துப் படிப்பார். அவருக்குப் பிடித்த தகவல்கள் அகப்பட்டால் அப்படியே அவற்றைத் தனது நடையில் சுருக்கி எழுதிக் கொள்வார். அலங்காரமான வார்த்தை ஜாலங்கள் இல்லாமல் எது தேவையோ அதைச் சரியாகக் குறிப்பெடுத்துக் கொள்வார். இப்படியாக அவரது மூலப் பொருளுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் பார்த்துக் கொண்டார். அப்புறம் வேண்டிய விதத்தில் தயாரித்துக் கொடுக்க வேண்டியதுதானே? அந்த வேலையையும் கச்சிதமாகச் செய்தார்.

**புதிய இடம் எப்படி?**

தாங்கள் தங்கியிருந்த இடத்தைவிட்டுப் புதிய இடத்துக்கு மாறவேண்டிய கட்டாயம் டி விட் வாலஸ் தம்பதியருக்கு ஏற்பட்டது. பிளசன்ட்வில் என்ற இடத்துக்கு அவர்கள் தங்கள் இருப்பிடத்தை மாற்றிக் கொண்டார்கள். அங்குதான் அவர்கள் திருமணம் செய்து கொண்ட தேவாலயம் இருந்தது. குடியிருப்பு ஒன்றை மாதம் 25 டொலர் வாடகைக்குப் பிடித்தார்கள். அங்கு கார் நிறுத்துவதற்கான வசதியும் இருந்தது. அவர்கள் தங்கள் புதிய வீட்டிற்கு எடுத்து வந்த பொருட்களில் பெரிதும் இடத்தை அடைத்துக் கொண்டவை புத்தகம் மற்றும் பத்திரிகைக் கட்டுகள்தான். இதழ்களுக்காகப் புதிதாகச் சேர்ந்திருந்த வாசகர்களின் பட்டியலும் நீண்டிருந்தது.

டி விட் வாலஸ் தினமும் தம்முடைய விற்பனை முயற்சிகளைத் தொடர்ந்து கொண்டே இருந்தார். புதிய வாசகர்களைச் சேர்ப்பதற்காக அவர் தனிப்பட்ட முறையில் கடிதங்களை எழுதி அனுப்பிக் கொண்டே இருந்தார். டி விட் வாலஸின் இந்த முயற்சிக்குத் தக்க பயன் கிடைத்தது. புதுப் புது வாசகர்கள் சந்தாக்களை அனுப்பி வைத்துக் கொண்டே இருந்தார்கள். காலம் வெகுவேகமாக ஓடியது. இதழை ஆரம்பித்துக் கண் மூடிக் கண் திறப்பதற்குள் ஓராண்டு முடிந்திருந்தது. இப்போது இதழின் விற்பனை ஏழாயிரத்தைத் தொட்டிருந்தது. விற்பனையின் எண்ணிக்கை உயர உயர வேலைப்பளுவும் அதிகரித்துக் கொண்டே வந்தது. இட வசதி போதவில்லை. பெரிய இடம் தேவைப்பட்டது.

நன்றி : ம.லெனின் சிக்ஸ்த் சென்ஸ் பப்ளிகேஷன்ஸ்

(தொடரும்)

# நீயே உனக்கு என்றும் நிகரானவன் !

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில் கொழும்பில் நடைபெற்ற நான்காவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி சார்பில் அறிமுகமான வீரர் வேகப்பந்து வீச்சாளரான சர்தல் தாகூர்.

இவர் இந்தியா சார்பில் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அறிமுகமான 218 ஆவது வீரராவார். தாகூரின் திறமையிலோ அல்லது அறிமுகத்திலோ இந்திய ரசிகர்களுக்கு எந்தவிதமான மாற்றுக்கருத்துக்கள் இல்லாதிருந்தாலும் அன்றைய போட்டியில் அவர் 10 ஆம் இலக்க ஜேர்சியை அணிந்தது தற்போது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. சச்சின் டெண்டுல்கர் இந்திய அணிக்காக ஒருநாள் போட்டிகளில் விளையாடிய வரையிலும் ஐபிஎல் போட்டிகளில் மும்பாய் இண்டியன்ஸ் அணிக்காக விளையாடிய வரையிலும் 10 ஆம் இலக்க ஜேர்சியையே அணிந்து வந்திருந்தார். 2013 ஆம் ஆண்டு சச்சினின் ஓய்விற்குப் பிறகு மும்பை இந்தியன்ஸ் அணி நிர்வாகம் சச்சினுக்கு மரியாதை செலுத்தும் விதமாக வருங்காலத்தில் 10 ஆம் இலக்க ஜேர்சி எந்தவொரு மும்பை இந்தியன்ஸ் வீரருக்கும் வழங்கப்படமாட்டாது என அறிவித்திருந்தது. அதுபோலவே சச்சின் ஓய்வு பெற்று நான்கு வருடங்களாகிய நிலையில் இந்திய அணியில் அறிமுகமான வீரர்களும் 10 ஆம் இலக்கத்தை கேட்காததனால் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையும் அறிமுகமாகிய வீரர்களுக்கு அவ்விலக்கத்தை இதுவரை வழங்கவும் இல்லை. எனவே மும்பை இந்தியன்ஸ் போன்று அவர்களும் முடிவுசெய்திருப்பார்களோ என்ற எண்ணம் ரசிகர்களிடம் ஏற்பட்டிருந்தது. ஆனாலும் இது குறித்து இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை எந்தவொரு அறிவிப்பையும் உத்தியோக பூர்வமாக வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



நான்காவது ஒருநாள் போட்டியின் பின்னர் தாகூரிடம் தொலைக்காட்சி வர்ணனையாளராகக் கடமைபுரிந்த முரளி கார்த்திக் ' ஏன் நீங்கள் 10 ஆம் இலக்கத்தை தெரிவு செய்தீர்கள்? ' என்று வினவி உள்ளார். அதற்குத் தாகூர் ' நான் பிறந்த கூட்டெண் 10 என்பதனால் 10 ஆம் இலக்கத்தைத் தெரிவு செய்துள்ளேன் ' எனக் கூறியுள்ளார். காரணம் எதுவாக இருப்பினும் இந்திய ரசிகர்களால் கிரிக்கெட்டின் கடவுளாகக் கருதப்படும் சச்சினுக்கு நிகராக இன்னொரு வீரரை நினைத்துப் பார்க்க முடிவதில்லை. எனவே தாகூர் 10 ஆம் இலக்க ஜேர்சி அணிந்து விளையாடியது இந்திய ரசிகர்களை குறிப்பாக சச்சினின் தீவிர ரசிகர்களை மனஉளைச்சலுக்கு ஆளாக்கி உள்ளது. இது குறித்து சமூக வலைத்தளங்களில் தாகூருக்கு ஆதரவாகவும் எதிராகவும் பரவலான விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. அதில் பெரும்பாலான பதிவுகள் சச்சினுக்கு வழங்கிய 10 ஆம் இலக்கத்தை வேறு எந்த வீரருக்கும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வழங்கி இருக்கக் கூடாது என்பதாகவே காணப்படுகின்றது. உண்மையில் கிரிக்கெட்டில் சச்சினின் வகிபங்கு என்ன என்பது இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறியாத ஒன்றல்ல. எனவே சச்சின் ஓய்வு பெறும் போது மும்பை இந்தியன்ஸ் அணி நிர்வாகம் செய்தது போல் அவர்களும் செய்திருக்கலாம். ஆனாலும் தற்போது தாகூருக்கு 10 ஆம் இலக்கம் வழங்கியது வழங்கியது தான். இனி இது குறித்து விவாதித்தும் ஆகப்போவது ஒன்றுமே இல்லை.

# வாகை சூட வேண்டும்

மிகுந்த மன உளைச்சலில் இருக்கின்றார் ஆர்ஜென்ரீனா உதைபந்தாட்ட அணியின் முகாமையாளரான ஜோர்ஜ் சம்போலி. அடுத்தாண்டு ரஷ்யாவில் நடைபெற இருக்கும் உலகக் கிண்ணத் தொடருக்கு ஆர்ஜென்ரீனா நேரடித் தகுதி பெற வேண்டுமானால் தென்னமெரிக்க நாடுகளுக்கிடையிலான தகுதி காண் போட்டிகளில் முதல் நான்கு இடங்களுக்குள் வரவேண்டியது அவசியமாகும். ஆனாலும் சென்ற வாரம் நடைபெற்ற உருகுவே உடனான ஆர்ஜென்ரீனா அணிக்கு இன்னும் வெனிசுலா, பெரு, ஈக்குவடோர் அணிகளுடனான மூன்று போட்டிகள் கைவசம் உள்ளன. ஆனாலும் அம்மூன்றிலும் வெற்றி பெற்றாலும் நேரடித் தகுதிக்கான வாய்ப்பு அதற்குக் கிடைக்குமா என்பது சந்தேகமே.ஏனென்றால் அவர்களது குழுவில் முன்னிலை வகிக்கும் கொலம்பியா, உருகுவே, சிலி ஆகிய நாடுகளுக்கும் தலா மூன்று போட்டிகள் மிச்சமுள்ளன.

தொகுப்பு :- சி.விமலன்



போட்டியையும் ஆர்ஜென்ரீனா 0 : 0 என சமநிலையில் முடித்ததனால் 15 போட்டிகளின் முடிவில் ஆர்ஜென்ரீனா ஐந்தாவது இடத்திலேயே உள்ளது.

கடந்த ஜூன் மாதம் ஜோர்ஜ் சம்போலி அணியின் முகாமையாளராகப் பொறுப்பேற்ற போதே ஆர்ஜென்ரீனா அணி தகுதிகாண் போட்டிகளில் பின்தங்கியே இருந்தது. ஆனாலும் அவரது பயிற்சியும் மெஸியின் சர்வதேச போட்டிகளுக்கான மீள் வருகையும் இணைந்து அணியில் அதிரடி மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற எதிர்பார்ப்பே ரசிகர்களிடம் இருந்தது.

இருப்பினும் அது நடைபெறவில்லை. எனவே அவர்களது வெற்றி தோல்வியையும் பொறுத்தே ஆர்ஜென்ரீனாவுக்கான வாய்ப்பு அமையவுள்ளது. பிறேசிலும் இக்குழுவிலேயே இடம்பெற்றாலும் புள்ளிப் பட்டியலில் முன்னிலை வகித்து ஏற்கனவே அது நேரடித் தகுதியைப் பெற்றுவிட்டது. அதேசமயம் ஆர்ஜென்ரீனா அணி நேரடித் தகுதி பெற முடியாத சந்தர்ப்பத்தில் பிளே ஓவ் சுற்றுக்களில விளையாடி தங்களை நிஷரூபிக்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்படுவார்கள்.

# பலவீனமான பாதுகாப்பா ?

கிரிக்கெட் கனவான்களின் ஆட்டம் என்றாலும் சில சந்தர்ப்பங்களில் வீரர்களும் தோல்வியின் விரக்தியில் ரசிகர்களும் அதனை உணராமல் கண்ணியக்குறைவாக நடந்து கொள்வதுண்டு. இதற்குச் சமீபத்திய உதாரணம் பல்லேகலவில் நடைபெற்ற இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான போட்டியில் இலங்கை ரசிகர்கள் தண்ணீர்ப் போத்தல்களை வீரர்கள் மீது எறிந்தமையைச் சுட்டிக்காட்டலாம்.



இந்தச் செய்தி ஆறுவதற்குள்ளேயே இங்கிலாந்தின் பிராந்திய அணிகளுக்கிடையிலான போட்டியில் வீரர் ஒருவரை நோக்கி அம்பு வீசப்பட்டமை கிரிக்கெட் உலகில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இங்கிலாந்தின் ஓவல் மைதானத்தில் சென்றவாரம் நடைபெற்ற சர்ரே மிடிலசெக்ஸ் அணிகளுக்கிடையிலான சம்பியன்ஷிப் போட்டியின் போது உலோகத்தினால் செய்யப்பட்ட 12 அங்குல அம்பு ஒன்று பார்வையாளர் பகுதியில் இருந்து வீசப்பட்டுள்ளது. பயங்கர ஆயுதமான அந்த அம்பு களத்தடுப்பில் ஈடுபட்டிருந்த சர்ரே அணியின் வீரரான றொரி பேர்ண்ஸ் அருகில் வீழ்ந்ததனால் தெய்வாதீனமாக அவருக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. போட்டி சமநிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் பொழுதே இச்சம்பவம் நடைபெற்றதனால் அத்தோடு போட்டியும் முடிவுக்கு வந்தது. ஆனாலும் போட்டியைப் பார்வையிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரசிகர்களுக்கு மத்தியிலும் சிசிரிவி கமெராவின் உதவியுடன் அம்பை எறிந்த 35 வயதுடைய நபரை கிழக்கு லண்டன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சர்வதேச போட்டிகளின் பொழுது வீரர்களின் பாதுகாப்பு விடயத்தில் பயங்கரவாதத் தாக்குதல்களை கருத்திற்கொண்டு பெரும் எடுப்பில் பாதுகாப்பை வழங்கும் கிரிக்கெட் சபைகள் பிராந்திய ரீதியான போட்டிகளை மாற்றாந்தாய் மனப்பான்மையில் அணுகி பாதுகாப்பை கோட்டை விடுகின்றார்களோ என்ற எண்ணத்தை இச்சம்பவம் தோற்றுவித்துள்ளது. எனவே எதிர்காலத்தில் இவ்வாறான அசம்பாவிதங்கள் நடைபெறா வண்ணம் கவனக்குவிப்பை அதிகப்படுத்தி பிராந்திய வீரர்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அவசியமாகும். இதற்கு கிரிக்கெட் சபைகளின் ஊடாகத் தனது கண்காணிப்பு நடவடிக்கைகளை ஐசிசி தீவிரப்படுத்தும் பொழுதே அது சாத்தியமாகும்.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 09.09.2017 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.